


# சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா

பொம்மைவெளி-யாழ்ப்பாணம்

## 2ஆம் ஆண்டு நிறைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா

பொம்மைவெளி - யாழ்ப்பாணம்.

யாழ் மாவட்டம்

# 2ஆம் ஆண்டு நிறைவு

**14-01-1993 14-01-1995**

## மலர் — 2

*சிறுவர் பாதுகாப்புத் திட்டம்*
*அரசியல்துறை தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ் மாவட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு : 1995 ஜனவரி

| | |
|---|---|
| புத்தகத்தின் பெயர் :- | சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா இரண்டாம் ஆண்டு நிறைவு. |
| வெளியீடு, உரிமை :- | சிறுவர் பாதுகாப்புத் திட்டம் அரசியல்துறை தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டம். |
| அட்டைப்பட ஓவியம் :- | மேனி |
| வடிவமைப்பு | |
| அட்டைப் பதிப்பு :- | கோல்டன் பிரிண்டர்ஸ் |
| புளொக் தயாரிப்பு :- | அழகன் புளொக் தயாரிப்பாளர்கள். |
| அச்சாக்கம் :- | மாலதி பதிப்பகம் வண் - பண்ணை யாழ்ப்பாணம். |
| மலராக்கக் குழு ;- | செம்பியன் செல்வன் |
| | சொலமன் சூ. சிறில் |
| | ப. கனகலிங்கம் |
| | சி. சுடர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலரும் பொழுதில் வளரும் பயிரின்
புலமாய் இருக்கும் வயலே!
உயரும் கொடியின் சிறுவேரினிலே ...
உரமாய் பரவும் உறவே!
அறிவும், அழகும், அதனோடுணவும்
அளிக்கும் குளிர்ந்த நிழலே!
பிரபாகரனின் கனவாய், இன்று
நனவாய் நிமிரும் நிலவே!

புதுவை இரத்தினதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியக் கொடிப் பாடல்

ஏறுதுபார்; கொடி ஏறுதுபார்
ஏறுதுபார்; கொடி ஏறுதுபார் — இங்கு
ஏறுதுபார்; கொடி ஏறுதுபார் — தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத் திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி — புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி

(ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது — தமிழ்
மக்களைக்காத்த நம் மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது — புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது

(ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது — பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது — தமிழ்
ஈழத்தின் கொடியிது — புலி
ஏந்திய கொடியிது

(ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து வீழ்த்திய
சாதனைக் கொடியிது — சங்கு
ஊதி முழங்கிட ஊரமனையாவிலும்
உலவிய கொடியிது — சம
தர்மத்தின் கொடியிது — எங்கள்
தாயவள் கொடியிது

(ஏறுதுபார்)

ஆயிர மாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது — பிர
பாகரன் என்றிநம் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது — தமிழ்த்
தேசத்தின் கொடியிது — எங்கள்
தேசியக் கொடியிது.

(ஏறுதுபார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூரிய பிரவையில் உயரும் சுடர்க்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் நாம் ஆக்க வேலைகளையும் செய்து வருகிறோம். போர்ச்சூழலால் குடும்பம் சிதைந்து, அனாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கிறது. அவர்களை சிறந்தமுறையில் வளர்த்தெடுக்க பராமரிப்பு இல்லங்களையும், பயிற்சிப் பள்ளிகளையும் நடாத்தி வருகிறது. தமிழீழத்தின் எதிர்கால தலைவர்களாக, அறிவு ஜீவிகளாக, சமூகநிர்மாணிகளாக இவர்களை வளர்த்தெடுப்பதே எமது நோக்கம்.

**வே. பிரபாகரன்**
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஆயர்
பேரருள் திரு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகையின்

# ஆசிச் செய்தி

வசதியற்ற அனேக பிள்ளைகளும், இப்போர்க்காலத்தின் நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட பல சிறார்களும், பல சிரமங்களின் மத்தியில், நல்ல போசாக்கின்றி கஷ்டப்படுகின்ற வேளையில் இவர்களுக்கு '' சிறுவர் போசாக்கு பராமரிப்புப்பூங்கா '' ஆற்றிவரும் சேவை அளப்பரியது. பொம்மைவெளியில் அமைந்துள்ள இந்நிலையம் கடமை உணர்வுடன் இச்சிறுவர்களுக்கு அணைக்கும் கரமாக இருந்து ஆற்றிவரும் இப்பணியை வாழ்த்தி இப்புத்தாண்டில் இறை ஆசியை வேண்டுகின்றேன்.

**தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் – ஆயர்.

ஆயர் இல்லம்
த.பெ.இல. 02,
யாழ்ப்பாணம்
4.1.1995.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

# ஆசிச்செய்தி

**பே**ரன்பு மிக்க பெருந்தகையீர்

சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் ஈராண்டு நிறைவை அறிந்தோம். மகிழ்ச்சி. இதனை உயர்ந்ததொரு தொண்டு எனலாம். சிறாரை பராமரிப்பது, வளர்த்தெடுப்பது இலகுவான கைங்கரிய மல்ல. இளமையிற்கல் என்பதற் கிணங்க கல்விபுகட்டி, ஆரோக்கியமாக வளர நல்ல உணவு ஊட்டி, நல்லொழுக்க சீலர்களாக முன்னுக்கு வரவேண்டுமென்ற பெரு நோக்கோடு இப் பூங்காவைப் பரிபாலிக்கிறார்கள், நடாத்துகிறார்கள். பெற்றோரும் முக்கிய பங்கு எடுத்து ஆக்கமும் ஊக்கமுமளிக்க வேண்டும். பிள்ளையைப் பூங்காவில் சேர்த்துவிட்டோம். அங்கு எல்லாம் நன்மையாக நடக்கும் என்ற அலட்சிய மனப்பான்மை அறவே கூடாது. இப் பிள்ளைகள் வருங்கால தேச பக்தர்களாக வேண்டும். மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பொது நல சேவை ஆகிய உயர் பண்புகள் அவர்களின் உள்ளங்களில் பதிய வேண்டும்.

இங்குள்ள பொறுப்பாளர்களும், ஆசிரியர்களும் பாதுகாப்பாளர்களும், மற்றும் அன்பர்களும் நலமே நீடுவாழ வேண்டுமென எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம். என்றும் வேண்டும். இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
06-01-1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

எமது தேசியத் தலைவர் அவர்களால் திட்டமிடப்பட்டதும் இதனூடாக உருவாக்கமும் பெற்றதே இச்சிறுவர் பூங்காக்கள் ஆகும். எமதுதேசியத் தலைவர் அவர்களால் அத்திவாரமிடப்பட்ட இச்செயற்பாடுகள் இன்று மிகவும் வளர்ச்சி நிலையில் இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்து நிற்கின்றன. குறிப்பாக கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்நோக்கியுள்ள பிரதேசங்களில் எமது எதிர்காலச் செல்வங்களாகிய எம் சிறார்கள் வசதி படைத்த ஓர் குடும்பத்திலுள்ள சிறுவர்கள் போலன்றி உடல் உள ஆரோக்கிய வளர்ச்சிகளற்ற மிகவும் மோசமான நிலையில் வளர்க்கப்படுவதை கண்ணுற்ற எமது தலைவர் இந்த மண்ணில் வாழும் அனைவரும் இந்த தமிழன்னையின் குழந்தைகளே என்ற அவரின் உயர்ந்த பார்வையினாலும், கல்வி, பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகள் இச் சிறார்களின் எதிர்கால சுபீட்சமான வாழ்விற்கு எவ்வகையிலும் பாதிப்புக்கள் ஏற்படக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தை மையமாக வைத்தே எமது அரசியல் வேலை செய்பவர்களுக்கு இச் செயற்பாட்டினை நன்கு விளக்கி இதன் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் கூடிய கவனம் செலுத்தி வளர்த்து வருகிறார் இச்சிறுவர்களின் ஆரம்ப வளர்ச்சியோடு மட்டும் நின்று விடாது இவர்களின் தொடர்ச்சியான வளர்ச்சி நிலையை கருத்தில் கொண்டு பலவேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை. மிகவும் மகிழ்ச்சியடைய வைக்கின்றது. குறிப்பாக இச்சந்ததி மாற்றத்திற்கேற்ப வளர்ச்சி நிலைக்கேற்ப இங்குள்ள பெற்றோர்களும் ஓர் புதிய மாற்றத்திற்குள் புதிய வளர்ச்சி நிலைக்குள் கொண்டு வரப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதனைக் கருத்தில் கொண்டே தற்பொழுது பல கல்வித்திட்டங்கள், வேலை வாய்ப்புத்திட்டங்கள், தொழிற் பயிற்சித்திட்டங்கள் போன்றவை இக்கிராமங்களில் விஸ்தரிக்கப்படுகின்றன இது நிச்சயமாக மிக விரைவில் ஏர் மாற்றத்தை, வளர்ச்சியைக் கொண்டுவரும் என்பதை நிதர்சனமாகக் காட்டி நிற்கின்றது.

இங்கே கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், நிர்வாகிகள், பணியாளர்கள் அனைவருமே எமது தேசியத்தலைவரின் எதிர்பார்ப்பிற்கும், வழிகாட்டலிற்கும் ஏற்ப கடமையுணர்வுடனோடும், இங்கேயுள்ள குழந்தைச் செல்வங்களைத் தங்களுடைய சொந்தப்பிள்ளைகளாகக் கருதி வளர்ப்பது மிகவும் விசேடமாக பாராட்டவேண்டியதும் அத்துடன் இரண்டாம் ஆண்டை நிறைவு செய்து மூன்றாம் ஆண்டில் இன்னும் பல மடங்கு உத்வேகத்துடன்வளர்ச்சி நிலையடைய வாழ்த்துகிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**திரு சு. ப. தமிழ்செல்வன்**
அரசியல்துறைப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புத் தளபதி தரும்

# ஆசிச் செய்தி

இன்று தனது இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து மூன்றாவது ஆண்டில் உறுதியோடு கால்பதிக்கும் பொம்மை வெளி சிறுவர் பராமரிப்புப் பூங்கா தனது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

உரிமைகள் இழந்து, மண்ணை இழந்து, கொடியின்றிப் படையின்றி அடிமைகளாக கூனிக்குறுகி வாழ்ந்த எம் இனத்தை தலைநிமிரச் செய்த எம் தேசியத்தலைவன், மண்ணை மீட்கும் புனிதப போரை வழிநடத்தும் அதேவேளையில், தமிழீழதேசத்தின் நாளைய தலைவர்களை அறிவு பூர்வமான ஓர் சமுதாயமாக உருவாக்கும் பணிகளையும் திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறார். அதில் ஒன்று தான் இந்த சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா. இந்த போசாக்கு பராமரிப்புப் பூங்காவில் பூத்துக் குலுங்கும் எம் மழலைச் செல்வங்களை நாளைய தலைவர்களை எம் தேசத்தின் சிற்பிகளை உருவாக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதன் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், ஆசிரியர்கள், பணியாளர்கள், இதன் வளர்ச்சிக்கு உழைக்கும் அனைருக்கும் எம் இயக்கத்தின் சார்பில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டாண்டு காலப்பகுதியில் இதன் வளர்ச்சிப் போக்கு அளவிட முடியாதவை. 5 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் திறமை கண்டு வியக்கும் அளவிற்கு இவர்களின் திறமைகள் அமைந்துள்ளன. கலைநிகழ்வு என்றும் விளையாட்டுப் போட்டியென்றும் தமது சாதனைகளை நிலைநாட்டி நிற்கின்றனர். போராளிகளைக் கண்டவுடன் ''புலி மாமா வணக்கம்'' என வரவேற்கும் பண்பும், உணவு உண்ண முதல் எம் தேசியத்தலைவனுக்கு நன்றி கூறி உணவை உண்ணும் பழக்கமும், காலையில் ஒவ்வொரு நாளும் எம் தேசத்தின் கொடிக்கு வணக்கம் செலுத்தி மலராஞ்சலி செய்யும் காட்சியும் எங்குமே காணமுடியாத ஓர் காட்சியாகும்.

யாழ்மாவட்டத்தில் மூத்த பிள்ளையாக பிறந்த இந்த பொம்மை வெளி சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா மற்றைய பூங்காக்களுக்கும் வழிகாட்டியாகவும் சகல திறமைகளிலும் வளர்ச்சியுற்று தனது தாய் நாட்டிற்கான ஓர் பணியை செவ்வனே செய்து சிறுவர் போசாக்குப் பராமரிப்பு அல்ல சிறுவர் அறிவியல் பூங்காவாகப் பூத்துக் குலுங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

நன்றி

வ. செல்வராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
யாழ் மாவட்டம்.
14 – 01 – 1995

# இறுதி இலக்கை நோக்கி...........

தமிழீழ தேசத்தின் இளம் தலைமுறையை சரியான முறையில் வளர்த்து அவர்களுடைய ஆரோக்கியத்தையும், ஆற்றலையும், ஆளுமையையும், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியினையும், இனப்பற்றுள்ள கூட்டுணர்வுள்ள சமுதாயத்தவராகவும் மேம்பாடடையச் செய்ய வேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் தூர நோக்குப் பார்வையில் தன்னை உருவாக்கிய பொம்மை வெளி சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா தனது இரண்டாவது வயதில் தனது இலக்கை நோக்கி ஏறுவரிசையில் மிகவும் செழிப்புடன் இக்கிராமத்தினதும், எமது தேசத்தினதும் பிள்ளையாக வளர்வதைக் காண எமது நெஞ்சம் நிறைகிறது.

எமது தேசத்தின் இளம் சந்ததியை சரியான பாதையில் வளர்த்துச் செல்ல வேண்டிய கடப்பாடு எமது சமூகத்தின் கைகளிலேயே உண்டு. இதனைச் செய்ய எமது சமூகம் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கு முன்மாதிரியாக, முன் உதாரணமாகச் செயற்பட்டு இப்பணியை எமது இயக்கம் மேற்கொள்ளும் போது இந்தப் பணியோடு எமது அமைப்புக்களும், மக்களும் தம்மை இணைத்துக் கொள்வார்கள் என்பது எமது தலைவர் அவர்களின் சிந்தனை வெளிப்பாடாகும். இவ் வகையில் இன்று யாழ் மாவட்டத்தில் பத்துப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதோடு அவற்றில் எமது சமூகமும் முழுமையாகப் பங்கேற்று வருவதை காணமுடிவதையிட்டு நாம் மிக மன மகிழ்வடைகின்றோம்.

மேலும் இவ்வேளையில் இப்பூங்காவின் மழலைகளின் வளர்ச்சிக்கேற்ப சமுதாயம் வளர்சியற்று இருக்கும் சூழ் நிலையானது இத்திட்டத்தின் வெற்றிக்குப் பாதிப்பாக இருப்பது அவதானிக்கப்பட்டதால் அச்சமுதாயத்திடையே சமூக, பொருளதார, அறிவியல் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் தான் இப் பூங்காவின் இறுதி இலக்கை அடையலாம் என்ற முடிவு தெளிவாகியுள்ளது. அதன் அடிப்படையில் இக் கிராமத்தை மறுமலர்ச்சி மிக்க, சமூக மேம்பாட்டு உருவாக்கத்திற்கான அடித்தளங்கள் இடப்பட்டன. திட்டமிட்ட வகையில் இதற்கான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு புள்ளி விபரப் பெறுபேறுகளின் படி அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. இத்திட்டங்களாக கல்வி, தொழிற்பயிற்சி, சுய வேலை வாய்ப்பு வேலைத் தளங்கள் (தொழிலகங்கள்) முகாமைத்துவ, தலைமைத்துவ பயிற்சிகள், மருத்துவ சுகாதாரக் கல்வி, மருத்துவ சுகாதாரசேவை, சூழல் பாதுகாப்பு, சேமிப்புத் திட்டம், பொழுது போக்கு வசதி, குடிநீர் வடிகாலமைப்பு, இருப்பிட வசதிகள் என்ற வகையில் அடங்கு கின்றன. இவற்றில் மக்கள் ஈடுபடுத்தப்படுவதுடன், தாமாகவே பங் கேற்றும் வருகின்றனர். இக் கிராம மக்களின் மாற்றமான செயற்பாடும், ஈடுபாடும் மிகவும் வரவேற்கத் தக்கதாக அமைவது டன், அறிவு சார்ந்தவர்களுடைய உழைப்பும் மேலும் எமக்கு நம்பிக் கை ஊட்டுகின்றன.

பூங்கா மழலைகளின் ஒவ்வொரு செயற்பாடும் எல்லோரையுமே ஈர்க்க, சிந்திக்க வைக்கும். ஒரு நாள் கனடாவில் இருந்து வந்த எமது நாட்டைச் சேர்ந்த ஒருவர் பூங்கா மழலைகளைப் பார்க்க வந்திருந்த சமயம் மனந்திறந்து தனது விமர்சனத்தை முன் வைத் தார். மாலை 5 மணிக்கு பூங்கா நிறைவடைகின்ற போது பூங்கா மழலையை அழைத்துச் செல்வதற்காக அவரின் இளையசகோதரி ஒரு வர் வந்திருந்தார். அச் சகோதரி பூங்கா மழலையை வீட்டுக்கு அழைத் துச் செல்கின்ற போது சகோதரி தேங்கி நின்ற வெள்ளத்திற்குள் ளால் செல்ல, பூங்கா மழலை வெள்ளம் படாமல் விலத்திச் சென்ற போது பூங்கா மழலையின் வளர்ச்சியினைக் கண்டு வியந்ததாகவும், அச் செயல் இத்திட்டத்தின் வெற்றி என்றும் சொன்னார். இது போல இக் கிராமத்து மக்களும், தமது குழந்தைகளின் வளர்ச்சிக் கேற்ப, மாற்றத்திற்கேற்ப, தமதும், சூழலினதும் வளர்ச்சிக்காகவும், மாற்றத் திற்காகவும் இன்று உழைக்க முற்படுவதைப் பார்க்கின்ற போது தேசியத் தலைவரின் தூர நோக்குப் பார்வையும், சிந்தனை வெளிப் பாடும் வெற்றி கண்டுள்ளது என்ற முடிவுடன் எதிர் கால செயற் பாடுகளை வளர்த்துச் செல்வதற்த அனைத்துத் தரப்பினரது ஒத் துழைப்புக்களையும் வேண்டி விடைபெறுகின்றோம்.

நன்றி

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

சி. இளம்பரிதி
அரசியல் துறைப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கா சிறுவர்களின் பாடல்கள்

ஏடு தூக்கும் சிறுவரே
நாடு காக்க எழுவீரே
பாடுபட்டு உழைத்திடின்
பயன் பெறுவோம் உறுதியே
தோல்வியடைய நேரிடின்
துவண்டு போகலாகுமோ?
தோல்விதானே வெற்றியின்
தொடக்கப் படிகள் ஆகுமே

ஏடு கூறும் உண்மையை
ஏற்று நாமும் நடந்திடின்
நாடு உயரும் அத்துடன்
நாமும் உயர்வோம் நிச்சயம்

ஏடு தூக்கிப் பள்ளியில்-இன்று
படிக்கும் சிறுவர் நாம்
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காக்களின் கொடிக் கீதம்

வானத்தை நோக்கியே வளர்கொடி
பறக்குது வாழ்த்துக்கள் கூறிடுவோம்
தலை வணங்கியே பாடிடுவோம்
வாழ்க வாழ்க வாழ்க
வாழிய வாழியவே

ஏறும் கொடியென தாயின் கொடியென
ஏற்று வணங்கிடுவோம் - தமிழ்
ஈழமணித் திரு நாட்டின் மழலைகள்
என்றும் நிமிர்ந்திடுவோம்.

பாரதில் யாவரும் ஓர் குலம் என்றுமே
பறக்கும் கொடியிதுவே -- ஒருபேரின்
ஆயிரம் பூக்களின் கூட்டினில்
விளங்கும் கொடியிதுவே

நாம் தமிழர்
நமது மொழி தமிழ்
நமது நாடு தமிழீழம்
நமது தேசியக்கொடி புலிக்கொடி
நமது தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்

# 1 – 5 வயதுகள்

இது பெற்றோரை மயக்கும் வயதுகள். குழப்படி வயதும் கூட. இந்த வயதுகளில் பிள்ளையின் உடலும் உள்ளமும் 'வேகமாக வளருகின்றன. வேகம் என்றால் எச்சரிக்கையும் வேண்டும் தானே. ஆனால், இவர்களை ஒருவரும் கவனியாது விடும் ஆபத்தும் உண்டு.

ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தை தாயின் அரவணைப்பிலே வளர்கின்றது. அந்த வயது சில இன்னல்களை எதிர் நோக்குலது பிரசித்தம். ஆகவே கரிசனை காட்டுவதற்கு பலமுறைகள் உண்டு. ஐந்து வயதின் பின் பிள்ளையைக் கண்காணிக்கப் பெற்றோருடன் ஆசிரியர் சேர்ந்து கொள்கிறார். ஆனால் 1–5 வயதினர் 'இரண்டுங் கெட்ட' வயது எவ்வையில் உள்ளனர். அதிலும் தாய் மீண்டும் கர்ப்பமுற்று குழந்தைபெற்றால் மூத்ததின் கதி 'அதோ' ஆகலாம். நல்ல வேளையாக தற்காலத்தில் சமூக விழிப்பினால், நேசரி பாடசாலைகள், முன் – பாடசாலை, சிகிச்சை நிலையங்கள், சிறுவர் போஷாக்கு நிலையங்கள் என பராமரிப்பு வசதிகள் உண்டு. இவற்றை பெற்றோர் பயன்படுத்த வேண்டும். அதை நடத்துபவர்களும் இந்த வயதினர் பற்றிய அறிவை வளர்த்துத் நமது செயல்திறனை மேம்படுத்த வேண்டும். இந்த வயதினரை வளர்ப்பது, கண்காணிப்பது, காப்பாற்றுவது இலகுவான காரியம் அல்ல.

பிள்ளை முதலாம் பிறந்தநாளைக் கொண்டாடி, இரண்டாம் வருடத்தில் கால்எடுத்து வைக்கும்போது எந்தநிலையில் இருக்கிறான்(ள்)?

குழந்தையின் நிறை சராசரி 9கிலோவாக இருக்கும். உதவியின்றி குறுகுறு என நடந்து எம்மை மகிழ்விக்கின்றது. அப்பா, அம்மா, மாமா என்கிறது. நாம் உண்ணும் உணவையே (உறைப்பு இல்லாமல்) உண்கிறது. அவருக்கு காச நோயைத் தடுப்பதற்கு பீ. சீ. ஜி. ஒருமுறையும்; தொண்டைக்கரப்பான், குக்கல், ஈர்ப்புவலி ஆகிய நோய்களைத் தடுப்பதற்த முக்கூட்டு வக்சீன் மூன்று முறைகளும் ஊசி மூலம் போடப்பட்டிருக்கும். முக்கூட்டு வக்சீன் போடும் வேளைகளில் போலியோ என்ற இளம்பிள்ளை வாதத்தை தடுக்கும் வக்சீன் வாய்மூலம் சொட்டுக்களாகக் கொடுபட்டிருக்கும். இனி, ஒன்பதாம் மாதத்தில் சின்னமுத்தைத் தடுக்கும் வக்சீனும் ஏற்றப்பட்டிருக்கும். இதனால் 1–5 வயதினர் இந்த நோய்களில் இருந்து தப்பிக் கொள்கின்றனர். சென்ற தலைமுறையினருக்கு இந்த தடுப்பு வக்சீன் அளிக்கும் முறைமை இல்லாததால் நோயுற்று வருந்தியதும் செத்து மடிந்ததும் சரித்திரம். 1–5வயதில் முக்கூட்டு வக்சீனும் போலியோ வக்சீனும் நான்காவது முறையாக அளிக்கப்பட வேண்டும். இவற்றை வழமைபோல் சிறுவர் கிளினிக்கில் பெற்றுக் கொள்ளலாம்.



கிளினிக்கில் பிள்ளையின் நிறையும் 5 வயதுவரை கண்காணிக்கப்படும். பிள்ளையின் சுகாதார வளர்ச்சிப் பதிவேடு பற்றிஇன்றைய தாய்மார் நன்கு அறிந்திருக்கின்றனர். அறியாதவர் அதைஅறிந்து கொள்ள முயலவேண்டும். பதிவேட்டிலுள்ள வரை படக்கோடு பிள்ளையின் வளர்ச்சியைக் காட்டும. வளர்ச்சி கீழ்கோட்டின் (சிவப்புக் கோடு) கீழே தாழ்ந்தால், பிள்ளையின் சுகநிலையிலும் போஷாக்கிலும் தீவிர கவனம்

பேராசிரியர்
செ. சிவஞானசுந்தரம்
'நந்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துதல் அவசியம். இப்போது சிறுவர் கிளினிக்கில் மட்டுமல்ல சிறுவர் பராமரிப்பு போஷாக்கு நிலையங்களும் உண்டு. இவற்றை பயன்படுத்துவது அவசியமாகும்

இந்தக்காலத்தில் 1–5வயதினரை சிலநோய்கள் வந்தடைகின்றன. முக்கியமாக மூச்சுக்குழல் தொற்று நோய்களையும், வயிற்றோட்டத்தையும், புழு வியாதிகளையும் குறிப்பிட வேண்டும். ஒரு பிள்ளைக்கு தடிமன் காய்ச்சல் வந்து 2–3 நாட்களில் பனடோலுக்கு காய்ச்சல் குணமாகாது விட்டால், அல்லது பிள்ளை மூச்சுவிட வில்லங்கப் பட்டால் ஒரு டொக்டரிடம் காட்டவேண்டும். அவர் தேவையானால் கூட்டுக் குளிகைகள் என்று நாம்கூறும் அன்றி பயறிக்ஸ் கொடுப்பார். அதை விடுத்து நாம் போய் மருந்துக் கடைகளில் அம்பிசிலின், ரெற்றாசைக்கிளின், பக்ரிம் என்று வாங்கி பிள்ளைக்குக் கொடுக்கப்படாது. அப்படி கண்டவர் எல்லாம் வைத்தியர் ஆனதனால் தான் மருந்து தவறாக பிரயோகப்படுத்தப்பட்டு, நோய்க்கிருமிகள் மருந்தை வென்று இரத்தத்தில் பெருகி நஞ்சை ஊற்றி செப்ரிசிமியா நிலையில் பிள்ளைகள் சாகின்றார்.

வயிற்றோட்டத்தால் பிள்ளைகள் சாகப்படாது. ஆனால் சாகின்றனர். காரணம் பராமரிப்பும் பாதுகாப்பும் போதாது. உணவு தயாரிப்பதற்கும் பகிர்வதற்கும் முன் கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவுவது, பகிர்வதற்கு அகப்பையையோ கறண்டியையோ உபயோகிப்பது, கொதித்து ஆறிய நீரையே பிள்ளைக்குக் கொடுப்பது, அசுத்தமான இடங்களில் விற்கப்படும் தின் பண்டங்களைத் தவிர்ப்பது வயிற்றோட்டத்தைத் தடுக்கவல்ல பாதுகாப்பாகும். இனி வயிற்றோட்டம் ஏற்பட்டால் அதனால் வரும் நீர் அழிவை நிறைவு செய்து நோயைத் தணித்து உயிரைக் காப்பாற்றுவதற்கு வாய் மூலம் கொடுக்கும் உப்பு சேர் கலவை உண்டு. இதனை உபயோகிக்கும் விதத்தைத் தாய்மார் அறிந்திருக்க வேண்டும். சுருக்கமாக ஒரு பக்கட்டில் உள்ள உப்புக்கலவையை ஒரு லீற்றர் நீரில் கரைக்க வேண்டும். இந்தக் கரைசலை கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு மலம் கழிதலின் பின்பும் கொடுக்கவேண்டும். ஒருதரம் கரைத்ததை 24 மணி நேரத்திற்குப் பின் உபயோகிக்கப்படாது. இந்த முதல் உதவிக்கு நோய் தணியாவிடில் பிள்ளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இரத்த நாளம் மூலம் தகுந்த உப்பு நீராகாரம் ஏற்றவேண்டி வரும்.

இந்த வயதினருக்கு வீடுகளில் ஏற்படும் விபத்துக்களும் வில்லனாகவோ யமனாகவோ வருவதுண்டு. பாதுகாப்பில்லாத கிணறு, குட்டைகள், தாழ்வாக இருக்கும் அடுப்பு, போத்தல் விளக்கு, குத்தி நிற்கும் அலவாங்கு, கூர் ஆயுதங்கள் கத்திகள், மரத்திலே தேங்காய், முதியோர் உபயோகிக்கும் இனிப்பு போல் பாவனை செய்யும் மருந்துகள் இந்த விபத்துகளுக்கு முக்கிய காரணங்கள் ஆகும். இவற்றைத் தடுப்பதற்கு சுய அறிவும் கரிசனையும் தான் தேவை.

1 – 5 வயதினரின் 'குழப்படி'. அவர்களின் ஆளுமை வளரும் உடல் துரு துரு என இயங்குகிறது. வளரும் மனத்திற்கு பல எதிர்பார்ப்புகள் உலகம் விரிகிறது. கேள்விகள் உருவாகின்றன. 'ஏன்!' என்ற சொல் அர்த்தம் காண விழைகின்றது. இந்த வேளையில் பெற்றோரும் மற்றோரும் அறிவையும் அன்பையும் அடக்கத்தையும் மேற்கொண்டு பிள்ளையை அனுசரிக்க வேண்டும். அல்லாவிடில் நமது நாட்டின் வருங்கால சந்ததியுடன் பொல்லாப்புடன் பழகுகிறீர்கள்.

எக்காரணம் கொண்டும் வலி ஏற்படும் விதமாக பிள்ளையை அடிக்காதீர்கள். பிள்ளை குற்றம் செய்தால் பெற்றோரின் அன்பான முறைப்பு போதுமானதாகும். அன்பு கொடுக்காத அடியையா தடியும் பிரம்பும் தரப்போகின்றன?

சில வேளைகளில் பிள்ளையின் உடல்நிலை, மனநிலை, பேச்சு, பழக்கவழக்கங்கள், பெற்றோர், உறவினர், ஆசிரியர் இவர்களுக்கு அப்பாற்பட்ட புதிராக இருப்பது உண்டு. இந்த அபூர்வ வேளைகளில் அதற்கு வைத்தியரின் ஆலோசனையை நாடவேண்டும். பெரும்பாலும் இப்படியான சந்தர்ப்பங்களில் மிகவும் எளிதான அன்புசார் ஆதரவுசார் பக்கபல பராமரிப்பே தேவைப்படும்.

1 – 5 வயதினரின் சீரிய பராமரிப்பு ஒரு தேசத்தொண்டு. தற்கு ஆத்மிகவியலாளர், அரசியலாளர், ஆசிரியர், மருத்துவர் ஆகியோர் பெற்றோருக்குக் கைகொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கா வைத்தியக் குறிப்பு

இன்று இப்பூங்காவானது 2ஆம் ஆண்டின் நிறைவை எட்டி நிற்கும் வேளை உண்மையிலேயே நான் மனம் நிறைவடைகின்றேன். காரணம் இங்குள்ள நிர்வாகத்தினர் போசாக்கு பூங்கா என்றால் என்ன என்பதனை நம்மால் எடுத்தியம்பப்படும் ஒவ்வொரு கருத்தினையும் ஆழமாகச் சிந்தித்து செயற்பட்டு வந்ததால் ஓராண்டில் தவழ்ந்த மழலை இன்று எடுத்தடி வைத்த நிலையல்ல, நடக்கத் தொடங்கியுள்ளது என்று சொல்வதில் பெரு மகிழ்வடைகின்றேன். இங்கே முகத்துதிக்காகவோ அல்லது பத்திரிகை விளம்பரத்திற்காகவோ நான் இதனைச் சொல்லவில்லை.

கடந்த இருமாதங்களாக நோயாளர்கள் என ஒன்று – இரண்டு பிள்ளைகள் மட்டுமே எம்மிடம் சிகிச்சை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதே.

கடந்த 9ம் மாதம் (செப்டெம்பர்) இங்குள்ள பிள்ளைகளை நாம் முழு அளவில் பரீட்சித்த வேளை சுமார் 77 பிள்ளைகளுக்கு எவ்வித உயிர்ச்சத்து இரத்தசோகை குறைபாடுகள் இருக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதே. 30 பிள்ளைகளுக்கு மட்டுமே இத்தகைய குறைபாடுகள் காணப்பட்டிருந்தன. இம்மாதம் இத்தகைய முழு அளவிலாகப் பரிசிலிக்கும்போது இப்பிள்ளைகளின் குறைகள் நிவர்த்தியாக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

எந்தக் காலத்தையும் விட கடந்த மாதமும் இந்த மாதமும் பிள்ளைகளின் நிறை சீராக அதிகரித்துள்ளதனை காணும்போதும் சகல பிள்ளைகளுக்கும் பொறுப்பான ஆசிரியை திருமதி. லதா அவர்களின் செயற்திறன் போற்றுதற்குரியதே. இவருடன் சிறார்களை பராமரிக்கும் திருமதி பரமேஸ்வரி அன்ரியும் திறம்படச் செயற்பட்டதனையும் காணக் கூடியதாகஇருந்தது. இவர்கள் பிள்ளைகளை ஆளும் திறனும் பராமரிக்கும் திறனும் ஏனைய நிர்வாகத்தினரதும் ஒத்துழைப்புமே 94 நவம்பர் மாதத்திலிருந்து சிறார்களுக்கு பெருமளவில் நோய்களற்ற நிலையும் இதனால் சிறார்கள் தமது நிறையில் சீரான முன்னேற்றத்தைக் காணக் கூடியதாகவும் இருக்கின்றது.

94' நவம்பர் மாதத்தில் 65 சிறார்கள் தம் மாதாந்த நிறையில் அதிகரித்துள்ளனர். இங்குள்ள 131 சிறார்களுள் நிறை எடுக்கும் வேளை சுமார் 43 சிறார்கள் வரவில்லை.

'94 செப்டெம்பர் மாதத்தில் சுமார் 89 சிறார்கள் தம்மாதாந்த நிறையால் அதிகரித்துள்ளதானது தொய்வுஉள்ள இடத்தினைப்பொறுப்பாசிரியரும் பராமரிப்பாளரும் நிதானித்து விட்டனர் என்பதனை துலாம்பரமாகக் காட்டுகின்றது. டிசெம்பர் மாத மாதாந்த நிறையின் வேளை சுமார் 25சிறார்கள் வருகை தரவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு இப்பூங்காவிற்கு தனியானதொரு தாதி நியமனமான நிலையில் புதிய சிறார்களுக்கு சிக்கல்கள் மட்டும் இல்லா நிலையும் போசாக்கு நிலையில் பழைய பிள்ளைகள் பூரணமடையும் நிலையும் தாதிக்குரிய நிர்வாகம் செயற்படுத்தும் என்பதனை எதிர்பார்க்கின்றோம்.

பெற்றோரும் தம் கடமையில் மேலும் உயர்ந்து நின்று சிறார்களின் போசாக்கு நிலைக்கும் நிர்வாகத்திற்கும் தமது முழு ஒத்துழைப்புந் தருவார்கள் என நம்புகின்றோம்.

பிள்ளைகளின் உடல் வளர்ச்சி முன்னேற்றம் பற்றி அட்டவணையில் (I - VI) காட்டப்பட்டுளளது.

தேவா அன்ரி



இசையும் அசைவும்



துள்ளியோடும் புள்ளினங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைகள் இங்கு களிநடனம் புரிகின்றதுவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை - I

| இல. | பெயர் | பிறந்த திகதி | சேர்ந்த திகதி | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | தி. தீபரஞ்சினி | 24 - 12 - 89 | 20 - 01 - 94 | 11.1 | 11.5 | 11.8 | 12.0 | 12.3 | 12.9 | 12.7 | 13.4 | 13.4 | 13.6 | 13.7 | — |
| 02. | பா. சுபாஜினி | 19 - 07 - 89 | 20 - 01 - 94 | 11.0 | 11.2 | 11.5 | 11.9 | 12.1 | 12.2 | 12.7 | 13.1 | 13.3 | 13.6 | 13.8 | — |
| 03. | உ. வினோபா | 24 - 12 - 89 | 20 - 01 - 94 | 14.6 | 14.3 | 15.1 | 15.5 | 15.6 | 15.8 | 15.7 | 16.4 | 16.2 | 15.8 | 16.4 | 16.7 |
| 04. | க. கயுரி | 23 - 10 - 89 | 20 - 01 - 94 | 11.5 | 11.7 | 12.0 | 12.4 | 12.6 | 13.2 | 13.2 | 13.4 | 13.9 | 14.0 | 14.3 | — |
| 05. | அ. ராஜிதா | 07 - 07 - 89 | 20 - 01 - 94 | 11.9 | 12.0 | 12.3 | 12.5 | 12.7 | 12.9 | 13.2 | 13.4 | 13.3 | 13.8 | 13.7 | — |
| 06. | ர. விஜித்திரா | 12 - 12 - 89 | 20 - 01 - 94 | 13.1 | 13.5 | 13.7 | 13.9 | 14.6 | 15.3 | 15.5 | 15.6 | 15.9 | 16.2 | 16.6 | — |
| 07. | தே. தர்சிகா | 08 - 02 - 89 | 20 - 01 - 94 | 13.5 | 13.7 | 13.9 | 14.1 | 14.5 | 15.2 | 15.2 | 15.6 | 15.8 | 16.1 | 16.6 | — |
| 08. | செ. ஜெயம் | 25 - 04 - 89 | 20 - 01 - 94 | 11.6 | 11.9 | 12.4 | 12.6 | 13.0 | 13.3 | 13.3 | 13.0 | 13.2 | 13.5 | 13.5 | 14.0 |
| 09. | செ. சந்திரரேகா | 05 - 11 - 89 | 20 - 01 - 94 | 11.1 | 11.4 | 11.6 | 11.8 | 12.2 | 12.4 | 12.6 | 13.1 | 13.4 | 13.0 | 12.7 | — |
| 10. | சு. சுரேந்தினி | 06 - 02 - 89 | 20 - 01 - 94 | 13.4 | 13.6 | 13.8 | 14.0 | 14.2 | 14.5 | 14.3 | 14.0 | 14.4 | 15.6 | 15.1 | 15.5 |
| 11. | அ. சாலினி | 27 - 10 - 89 | 20 - 01 - 94 | 13.7 | 13.9 | 14.1 | 14.3 | 14.5 | 14.8 | 14.7 | 14.7 | 14.9 | — | 15.2 | 15.4 |
| 12. | கி. பிரபாலினி | 25 - 11 - 89 | 20 - 01 - 94 | 12.2 | 12.5 | 12.7 | 12.9 | 13.2 | 13.7 | — | 13.7 | — | 14.3 | 13.8 | 14.5 |
| 13. | க. கிறிஸ்தீபா | 23 - 10 - 89 | 20 - 01 - 94 | 11.1 | 11.3 | 11.5 | 17.7 | 11.9 | 12.1 | 12.2 | 12.6 | 12.8 | — | 12.8 | 13.0 |
| 14. | வ. ரேணுகா | 04 - 09 - 89 | 20 - 01 - 94 | 11.0 | 11.4 | 11.6 | 11.8 | 12.1 | 12.3 | 12.8 | 13.3 | 13.0 | 13.0 | — | 13.4 |
| 15. | க. சுரேகா | 29 - 12 - 89 | 20 - 01 - 94 | 11.4 | 11.6 | 11.9 | 12.2 | 12.4 | 12.6 | — | 13.5 | 13.5 | — | 13.5 | 13.8 |
| 16. | கே. ரேவதி | 10 - 09 - 89 | 16 - 02 - 94 | 12.0 | 12.3 | 12.6 | 12.9 | 13.3 | 13.9 | — | 13.6 | 13.8 | 13.6 | 13.8 | 14.0 |
| 17. | உ. மயூறா | 14 - 03 - 89 | 14 - 03 - 94 | 13.5 | 13.8 | 14.1 | 14.6 | 14.9 | 15.0 | 15.7 | 16.0 | 16.2 | 15.8 | 16.3 | 16.5 |
| 18. | ஜே. திசாந்தினி | 10 - 03 - 89 | 16 - 02 - 94 | 12.0 | 12.4 | 12.6 | 12.9 | 13.2 | 13.4 | 14.0 | 14.2 | 13.8 | 14.2 | — | — |
| 19. | ஞா. லக்ஷனா | 17 - 10 - 89 | 16 - 02 - 94 | 12.1 | 12. | 12.7 | 12.9 | 13.1 | 13.3 | 13.4 | 13.7 | — | 13.8 | — | — |
| 20. | யோ. கோபியா | 06 - 06 - 89 | 16 - 02 - 94 | 13.4 | 13.9 | 14.5 | 15.0 | 15.4 | 16.0 | 16.2 | 15.9 | 16.4 | 16.5 | 17.0 | — |
| 21. | சு. சுதர்சினி | [illegible] - 89 | 22 - 02 - 94 | 14.4 | 14.9 | 14.9 | 15.1 | 15.3 | 15.6 | 16.0 | 16.5 | 16.8 | 16.5 | 17.0 | 17.3 |
| 22. | க. ஆசா | 01 - 09 - 90 | 21 - 02 - 94 | 13.0 | 13.3 | 13.6 | 13.9 | — | 14.1 | 14.2 | 13.9 | 14.4 | 14.5 | 14.7 | — |
| 23. | கு. சுகன்யா | 18 - 09 - 89 | 21 - 02 - 94 | 12.1 | 12.4 | 12.6 | 12.9 | 13.2 | 13.7 | 13.8 | 14.0 | — | — | — | — |
| 24. | சி. லோஜனா | 12 - 03 - 89 | 07 - 03 - 94 | 11.5 | 11.8 | 12.1 | 12.5 | 12.8 | 13.0 | 13.2 | 13.5 | 13.6 | 13.9 | 14.2 | 14.2 |
| 25. | ஆனந்தி | 30 - 06 - 90 | 12 - 03 - 94 | 14.2 | 14.5 | 15.3 | 15.0 | 15.3 | 15.6 | 15.9 | 16.4 | 16.0 | 16.5 | — | — |
| 26. | ஜெ. சராசாலினி | 15 - 04 - 89 | 06 - 06 - 94 | — | — | — | — | — | — | — | 16.3 | 16.7 | 16.9 | 17.1 | — |
| 27. | நிலானி | 27 - 06 - 89 | 06 - 06 - 94 | — | — | — | — | — | — | — | 15.3 | 15.2 | 15.8 | — | — |
| 28. | இ. நர்மதா | 08 - 06 - 89 | 20 - 01 - 94 | 11.6 | 11.9 | 12. | 12.4 | — | — | — | — | — | — | — | — |

# அட்டவணை - II

| இல. | பெயர் | பிறந்த திகதி | சேர்ந்த திகதி | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | சு. சுகிர்தரன் | 14-02-89 | 20-01-94 | 14.1 | 14.3 | 14.6 | 14.9 | 15.2 | — | — | — | — | — | 15.7 | — |
| 02. | ஜெ. துவாரகன் | 02-08-89 | 07-02-94 | 11.9 | 12.0 | 12.3 | 12.6 | 12.9 | 13.1 | 13.4 | 13.4 | 13.4 | 13.7 | 13.8 | 13.9 |
| 03. | தே. பிரதீபன் | 07-07-89 | 20-01-94 | 10.9 | 11.1 | 11.4 | 11.6 | 11.8 | 12.2 | 12.7 | 12.1 | — | — | — | — |
| 04. | மு. மஞ்சுநாத் | 07-05-89 | 20-01-94 | 13.9 | 14.1 | 14.4 | 14.7 | — | 15.4 | 15.7 | 16.1 | 16.3 | 16.0 | 16.2 | 16.0 |
| 05. | செ. செல்வராஜ் | 25-07-89 | 20-01-94 | 10.9 | 11.1 | 11.3 | 11.6 | 11.8 | — | 12.1 | 12.2 | 12.2 | — | 12.5 | 12.4 |
| 06. | பா. கஜேந்திரன் | 22-04-89 | 20-01-94 | 13.1 | 13.4 | 13.7 | 14.0 | 14.4 | 14.8 | 15.2 | 15.3 | 15.6 | 15.2 | 15.4 | — |
| 07. | வி. ரகுபரன் | 16-04-89 | 20-01-94 | 13.3 | 13.5 | 14.1 | 14.4 | 14.7 | 15.1 | 15.4 | 15.8 | 16.1 | 15.8 | — | 16.1 |
| 08. | செ. உதயகுமார் | 12-04-89 | 20-01-94 | 12.8 | 13.1 | 13.5 | 13.8 | 14.1 | 14.3 | 14.4 | 14.2 | 14.0 | 14.2 | — | 14.5 |
| 09. | பா. ஜெனிஸ்ரன் | 07-03-89 | 20-01-94 | 9.8 | 10.1 | 10.4 | 10.6 | 10.8 | — | — | — | — | — | — | — |
| 10. | நா. அசோக்குமார் | 01-03-89 | 20-01-94 | 14.0 | 14.2 | 14.4 | 14.6 | 14.8 | — | — | — | — | — | — | — |
| 11. | ஜெ. ஜெகரன் | 04-01-90 | 20-01-94 | 11.5 | 11.7 | 11.9 | 12.2 | — | 12.7 | 13.1 | 13.3 | 13.1 | 13.4 | 13.4 | 13.6 |
| 12. | கு. அஜந்தன் | 04-01-89 | 20-01-94 | 12.3 | 12.6 | 12.8 | 13.0 | 13.2 | 13.0 | 13.3 | 13.4 | 13.5 | 13.6 | 14.1 | 14.3 |
| 13. | ச. தனுசன் | 22-02-89 | 20-01-94 | 14.1 | 14.4 | 14.6 | 15.1 | 15.5 | — | 13.9 | — | — | — | — | — |
| 14. | நா. சுதாகரன் | 14-02-89 | 20-01-94 | 15.1 | 15.4 | 15.6 | 15.9 | 16.1 | 16.4 | 16.6 | 16.7 | 16.4 | 16.5 | 16.4 | 16.8 |
| 15. | சு. ரமேஸ் | 12-02-89 | 16-04-94 | 12.7 | 12.9 | 13.1 | 13.4 | 13.6 | 14.0 | 13.9 | 14.4 | 14.4 | 14.3 | 14.6 | 15.1 |
| 16. | சு. நிசாந்தன் | 12-02-89 | 16-04-94 | 11.3 | 11.5 | 11.7 | 11.9 | 12.1 | 12.5 | 12.5 | 12.4 | 12.9 | 12.8 | 13.0 | 13.2 |
| 17. | செ. முருகையா | 10-04-89 | 17-02-94 | 11.7 | 11.9 | 12.1 | 12.3 | — | 12.7 | 12.7 | — | — | — | — | — |
| 18. | தெ. பிரசாந் | 12-03-89 | 21-02-94 | 12.5 | 12.7 | 12.9 | 13.1 | — | 13.0 | 13.4 | 14.0 | 14.2 | 14.3 | 14.5 | 14.8 |
| 19. | இ. ரஜீவ் | 12-01-89 | 21-02-94 | 14.1 | 14.4 | 14.6 | 14.8 | 15.1 | — | — | 15.4 | 15.9 | 16.0 | 16.5 | — |
| 20. | கு. தீலீபன் | 16-08-89 | 01-06-94 | — | — | — | — | 13.2 | 13.4 | 13.4 | — | 13.5 | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை - III

| இல. | பெயர் | பிறந்த திகதி | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | ஆ. யூயின் | 92 - 02 - 19 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 02) | த. சுஜேந்திரன் | 91 - 02 - 04 | — | — | 10.9 | — | — | — | 11.2 | — | — | — | 11.9 | 12.1 |
| 03) | சு. செல்வரஞ்சினி | 90 - 01 - 24 | 11.3 | 11.4 | 11.5 | 11.7 | 11.7 | 11.8 | 12.0 | 12.3 | 12.4 | 12.5 | 12.7 | 13.1 |
| 04) | வி. சுபாஷினி | 90 - 1 - 02 | 12.6 | 12.7 | 12.8 | 13.2 | 13.3 | — | — | 13.4 | 13.7 | 13.7 | 14.3 | 14.5 |
| 05) | இ. வினோதினி | 90 - 06 - 07 | 12.5 | 12.7 | 12.8 | 13.1 | — | 13.2 | 13.2 | — | — | — | — | — |
| 06) | சு. சுரேகா | 90 - 11 - 29 | 11.5 | 11.7 | 12.8 | 12.3 | 12.9 | 12.8 | 12.3 | 12.9 | 12.9 | 13.4 | 13.7 | 13.1 |
| 07) | சி. டர்ஸா | 90 - 06 - 28 | 12.1 | 11.7 | 12.6 | 12.4 | 12.6 | 12.4 | 12.7 | 12.2 | 12.6 | 12.5 | 12.9 | 13.2 |
| 08) | நா. பிரதீபா | 90 - 10 - 01 | 11.9 | 11.8 | 12.8 | 11.7 | 12.0 | 12.3 | 12.7 | 13.3 | 13.0 | 12.9 | 13.1 | 14.0 |
| 09) | க. அர்ச்சனா | 90 - 1 - 01 | 12.6 | 12.5 | 11.7 | 13.1 | 13.3 | 13.4 | 13.5 | 14.0 | 14.1 | 14.1 | 14.0 | 14.5 |
| 10) | த. சுஜனா | 90 - 12 - 01 | 12.8 | 12.9 | 12.8 | — | — | — | 13.2 | — | 13.3 | — | 13.8 | 14.0 |
| 11) | யே. மயூரி | 90 - 02 - 28 | 13.2 | 13.5 | 12.8 | 13.6 | 13.6 | 13.9 | 14.2 | 14.1 | 14.2 | 14.5 | — | 14.9 |
| 12) | செ. தயாளினி | 90 - 11 - 26 | 11.9 | 11.7 | 12.1 | 13.3 | 10.9 | 11.4 | 11.4 | 11.6 | 11.9 | 12.1 | 12.5 | 12.5 |
| 13) | மு. நிஷாந்தினி | 90 - 03 - 17 | 12.3 | 12.5 | 12.8 | 12.8 | — | 12.4 | 13.2 | 13.3 | 13.4 | — | 13.7 | 13.9 |
| 14) | செ. மேரிஆன்ஸியா | 90 - 11 - 28 | 10.7 | 10.9 | 11.4 | 11.2 | 11.3 | 11.6 | 11.6 | 11.8 | 11.7 | 11.8 | 11.9 | 12.0 |
| 15) | சி. சத்தியரஞ்சினி | 90 - 04 - 19 | 13.3 | 13.4 | 13.6 | 13.6 | 13.3 | 13.8 | 13.6 | 14.0 | 14.2 | 14.0 | 14.5 | 15.9 |
| 16) | ந. நிரோஜா | 91 - 08 - 24 | 10.7 | 10.8 | 10.8 | 10.7 | — | 11.1 | 10.8 | — | 11.4 | 11.5 | 11.8 | 12.3 |
| 17) | அ. ஆரோக்கியநாயகி | 90 - 10 - 03 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 18) | பா. சுகி | 90 - 11 - 03 | 09.7 | 09.9 | 10.5 | 10.4 | 10.8 | — | 10.9 | 11.4 | — | — | — | 11.2 |
| 19) | சு. சுதர்ஷினி (சுரேகா) | 90 - 02 - 02 | 12.0 | 12.1 | 12.3 | — | 12.5 | 12.8 | 13.1 | 13.1 | 13.5 | 13.7 | — | 14.9 |
| 20) | ச. பிரதீபா | 90 - 02 - 17 | 11.9 | 11.2 | 13.0 | — | — | 10.3 | — | — | — | — | — | — |
| 21) | பொ. லக்ஸிகா | 90 - 04 - 25 | 11.1 | 11.5 | 11.8 | 11.4 | — | 12.2 | 12.3 | — | — | — | 12.4 | 13.4 |
| 22) | செ. றெபேக்கா | 90 - 07 - 20 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 23) | சி. சுதர்ஷினி | 90 - 06 - 25 | 11.4 | 11.6 | 11.6 | 11.4 | 12.0 | 11.3 | 11.6 | 11.9 | 11.8 | — | — | 12.4 |
| 24) | த. பவியா | 90 - 06 - 10 | — | — | — | — | — | 10.2 | 10.6 | 10.6 | 10.5 | — | 11.7 | 11.9 |
| 25) | த. பிரியா | 90 - 06 - 10 | — | — | — | — | — | 11.0 | 11.0 | 10.9 | 11.3 | — | 10.7 | 10.9 |
| 26) | சி. தர்ஷினி | 90 - 10 - 20 | 13.0 | 13.2 | — | — | — | — | — | 12.8 | 13.8 | — | 14.3 | 14.5 |
| 27) | செ. வினோதினி | 90 - 05 - 13 | 13.5 | 13.4 | 13.7 | 14.2 | — | — | 14.0 | 14.1 | 14.3 | 14.5 | 14.6 | 15.1 |
| 28) | செ. கிருஷாந்தினி | 90 - 04 - 18 | 11.3 | 11.5 | 11.8 | 11.0 | 12.4 | 12.2 | 12.2 | 12.1 | 12.4 | 12.6 | 12.3 | 13.1 |
| 29) | யே. யமுனா | 90 - 05 - 06 | — | 09.1 | 09.2 | — | 10.4 | 10.2 | 10.2 | 10.6 | 10.5 | 01.4 | 11.1 | 12.0 |
| 30) | மேரிவேளாயினி | 90 - 08 - 16 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |

# அட்டவணை - IV

| இல. | பெயர் | பிறந்த திகதி | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | செ. சைந்தினி | 90 - 07 - 09 | — | — | — | — | — | 12.5 | — | 13.1 | 13.1 | 13.2 | — | 14.0 |
| 02. | பா. லக்ஸிகா | 90 - 04 - 25 | — | — | — | 13.2 | 13.3 | 13.3 | 13.4 | 13.6 | 13.9 | 13.9 | 14.0 | — |
| 03. | செ. அலன்பேக்கின் | 90 - 04 - 20 | 12.9 | 13.0 | 13.0 | 13.2 | 13.4 | 13.5 | 13.3 | 13.6 | 14.0 | 14.2 | 14.2 | 15.1 |
| 04. | து. தனுஜா | 90 - 11 - 09 | 11.9 | 12.0 | 12.1 | 12.3 | 12.2 | 12.6 | 12.5 | 12.5 | 12.7 | 12.9 | 13.0 | 14.2 |
| 05. | கவிதா | 90 - 12 - 12 | — | — | — | — | 11.3 | 11.5 | 12.5 | 12.3 | 12.1 | 12.1 | — | — |
| 06. | ஜெ. அருள்மேரிச் செல்வி | 90 - 01 - 05 | 9.6 | 11.1 | 11.0 | 10.8 | 11.0 | 11.4 | 11.4 | 11.3 | 11.2 | 11.1 | — | 12.1 |
| 07. | பா. பிரியா | 90 - 04 - 16 | 10.5 | 10.8 | 10.9 | — | — | — | 11.2 | 11.3 | 11.4 | — | 12.0 | 12.4 |
| 08. | சி. அஜந்தனா | 91 - 09 - 28 | 10.3 | 10.5 | 10.8 | 10.6 | 11.1 | 10.8 | 11.1 | 11.3 | 11.4 | 11.2 | — | 11.8 |
| 09. | அ. மேரிஸ்ரெனா | 91 - 04 - 02 | 11.3 | 11.4 | 11.5 | 11.5 | 11.8 | 11.8 | — | 12.3 | 12.3 | — | 13.0 | 13.4 |
| 10. | செ. மீரா | 91 - 10 - 01 | — | — | — | 8.0 | 8.1 | 8.6 | 8.6 | 9.1 | 8.7 | 8.9 | 8.9 | 9.1 |
| 11. | செ. பிரசாந்தி | 91 - 07 - 24 | 9.8 | 9.5 | 9.8 | 10.0 | 9.9 | 10.1 | 10.5 | 10.4 | 10.6 | — | — | 11.0 |
| 12. | தெ. ஜந்தா | 91 - 03 - 15 | 10.0 | 10.1 | 10.3 | — | 10.7 | 10.6 | 10.4 | 11.0 | — | 10.8 | 11.3 | 11.6 |
| 13. | வா. வினோதா | 91 - 04 - 08 | 11.6 | 11.5 | 11.3 | 11.5 | 11.5 | 11.6 | 11.6 | 11.6 | — | 11.8 | 12.6 | 12.9 |
| 14. | ம. சுதர்ஷினி | 91 - 01 - 02 | 11.6 | 12.0 | 12.2 | — | 13.4 | — | 14.1 | — | 14.4 | — | 14.9 | 15.1 |
| 15. | சி. கௌரி | 91 - 03 - 29 | — | 11.5 | 11.6 | — | 12.0 | 12.1 | 12.2 | 12.1 | — | 12.4 | 13.2 | 13.6 |
| 16. | சி. டெல்ஸ்ரியா | 91 - 11 - 27 | — | 10.0 | 10.1 | — | 9.0 | 9.3 | 9.3 | 9.5 | 9.6 | 9.6 | 10.3 | 10.7 |
| 17. | சு. தர்ஷிகா | 91 - 07 - 07 | 11.0 | 12.0 | 12.4 | — | 11.8 | 11.9 | 11.9 | 12.6 | 12.1 | 11.8 | 12.1 | 12.2 |
| 18. | யாழினி | 91 - 03 - 07 | — | 9.5 | 9.6 | 10.1 | 10.3 | 10.6 | 10.5 | 10.5 | 10.5 | 10.3 | 10.9 | 11.0 |
| 19. | செ. விஜிதா | 91 - 0· - 05 | 10.4 | 10.6 | 11.4 | — | 11.4 | 11.7 | 11.7 | 12.4 | 11.9 | — | — | 12.1 |
| 20. | அ. அமிர்தமலர் | 92 - 02 - 02 | 9.2 | 9.7 | 9.2 | 9.3 | 9.3 | 9.7 | — | 10.2 | 10.6 | — | 10.4 | 10.6 |
| 21. | ச. ஜெனித்தா | 92 - 05 - 27 | — | 8.7 | 9.0 | — | 9.2 | 9.2 | 9.7 | 10.0 | 10.6 | 9.8 | 10.2 | 10.4 |
| 22. | யே. அனுஷியா | 92 - 04 - 06 | 9.6 | 10.0 | 9.9 | 10.0 | 10.3 | 10.2 | 10.4 | 10.7 | 10.9 | 10.9 | 11.1 | 11.4 |
| 23. | ந. பிரியதர்ஷினி | 92 - 01 - 14 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 24. | யே. மேரிலோஜினி | 92 - 08 - 03 | — | — | — | — | 10.4 | 10.6 | 10.7 | 10.8 | 10.9 | 11.9 | 11.1 | 12.0 |
| 25. | கு. சோதிகா | 92 - 08 - 25 | — | — | — | — | — | 9.9 | 10.5 | — | 10.8 | 10.9 | — | 11.0 |
| 26. | பு. சுரேகா | 92 - 04 - 26 | — | — | — | — | 8.1 | 8.4 | 8.3 | 8.2 | 8.2 | 8.6 | 8.9 | 9.0 |
| 27. | நி. சசிகா | 92 - 05 - 16 | — | — | — | — | — | — | — | — | — | — | — | 12.3 |
| 28. | கலைமதி | 92 - 12 - 24 | — | — | — | — | — | 11.7 | 11.9 | 12.2 | 12.2 | 12.1 | 12.5 | 12.9 |
| 29. | கலா | 92 - 10 - 16 | — | — | — | — | 9.5 | 9.6 | 10.1 | 10.7 | 10.9 | — | 10.6 | 11.1 |
| 30. | இ. நிஷாந்தினி | 92 - 11 - 06 | — | — | — | — | — | — | 10.2 | 10.5 | 10.4 | 10.4 | 11.1 | 11.4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை - V

| இல. | பெயர் | பிறந்த திகதி | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | சி. பிரதாஸ் | 91.04.07 | 11.0 | 11.3 | 11.4 | 11.5 | 11.4 | — | 11.6 | 12.1 | 12.0 | 12.3 | 12.1 | 13.2 |
| 02. | வி. டீரிதன் | 91.02.10 | — | — | 14.4 | — | — | 12.6 | 12.6 | — | 12.8 | 12.6 | — | 13.1 |
| 03. | பூ. ரசிகன் | 91.06.25 | 11.1 | 11.2 | 11.5 | 11.2 | — | 11.8 | 11.6 | 11.8 | 12.0 | 11.9 | 12.3 | 13.1 |
| 04. | பா. நிலான்ஸன் | 91.10.15 | — | — | — | 11.5 | — | 11.1 | 11.7 | 12.1 | 12.2 | 11.9 | 12.4 | 13.5 |
| 05. | க. கரன் | 91.09.05 | 08.3 | 08.6 | 08.5 | 08.5 | 08.5 | — | 08.9 | 09.5 | 08.9 | 08.9 | 09.2 | 10.5 |
| 06. | செ. சரண்ராஜ் | 91.10.09 | 11.9 | 12.1 | 12.3 | 12.5 | 12.4 | 12.5 | 12.5 | 12.8 | 13.0 | 12.8 | 13.3 | 13.5 |
| 07. | ஜெ. ஜெனார்த்தனன் | 91.01.14 | 08.2 | 08.3 | 09.7 | — | 10.0 | 10.5 | 10.5 | 10.5 | 10.8 | 11.1 | — | 12.0 |
| 08. | அ. கமிலஸ் | 91.09.08 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 09. | அ. போனாட் | 91.12.19 | 10.4 | 10.6 | 09.4 | — | 09.7 | — | — | — | — | — | — | — |
| 10. | தே. இன்பருபன் | 91.05.28 | — | — | — | — | — | — | — | — | — | 08.8 | — | — |
| 11. | ஜீ. ரஞ்சித் | 91.04.08 | 12.0 | 12.1 | 12.2 | — | — | 10.6 | 11.1 | 11.3 | 11.5 | — | — | — |
| 12. | ம. மரியராஜ் | 90.06.17 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 13. | ச. ஸ்ரீஜித் | 91.08.14 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 14. | செ. டனிஸ்ரன் | 91.01.18 | 11.0 | 11.2 | 11.7 | 12.1 | — | 12.4 | 12.4 | 12.7 | 12.8 | 12.6 | 13.2 | 13.5 |
| 15. | அ. மேரிவேஜின் | 91.03.30 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 16. | ஆ. அருண் | 92.01.23 | 08.3 | 08.4 | 10.8 | 11.1 | — | 11.2 | 11.4 | 12.1 | 12.1 | 12.4 | 12.4 | 13.5 |
| 17. | உ. திவாகரன் | 92.01.04 | — | — | 11.9 | — | — | — | — | — | — | — | — | — |
| 18. | த. அமலன் | 92.01.04 | 09.7 | 9.09 | — | 12.2 | — | 12.1 | 12.0 | 12.2 | 12.1 | 12.2 | 13.8 | 13.9 |
| 19. | அன்ரன் றெஜிமன் | 92.03.14 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 20. | பொ. டயஸ் | 92.03.17 | — | — | — | — | — | — | 08.3 | — | — | 08.9 | 09.1 | 10.0 |
| 21. | கு. மயூரன் | 91.01.04 | — | — | 09.2 | — | — | — | 11.0 | 11.0 | 12.1 | 12.0 | 11.6 | 12.5 |
| 22. | மகிஸன் | 90.03.06 | 10.0 | — | — | 09.4 | — | — | 09.5 | 09.9 | 09.8 | 09.8 | 10.3 | 10.5 |
| 23. | செ. பாஸ்கரன் | 90.08.10 | — | — | — | — | — | 10.3 | 10.5 | — | — | — | — | — |
| 24. | முகுந்தன் | 91.06.06 | — | — | — | — | 10.6 | 10.8 | 10.7 | 11.2 | 11.1 | 11.2 | 11.5 | 12.4 |
| 25. | செந்தூரன் | 91.08.08 | — | — | — | — | 09.8 | 10.0 | 10.3 | — | — | — | — | — |
| 26. | ந. லவன்ஸன் | 92.06.03 | — | — | — | — | — | — | 09.0 | 09.3 | 09.4 | — | 09.6 | 10.2 |
| 27. | சுரேஸ் | 91.05.16 | — | — | — | — | 11.5 | — | — | — | — | — | — | — |
| ※ 28. | யே. சுஜீபன் | 91.06.10 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| ※ 29. | செ. தினேஸ்குமார் | 92.07.05 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 30. | சி. ஜெகன் | 91.10.11 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணை - VI

| இல. | பெயர் | பிறந்த திகதி | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாசி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | சே. சுமன் | 90 - 12 - 07 | 11.9 | 12.0 | 12.4 | 12.5 | 12.5 | 12.8 | 12.7 | 13.0 | 12.9 | 12.8 | 13.1 | 14.0 |
| 02. | இ. ரகுமான் | 90 - 12 - 23 | 08.9 | 08.9 | 09.0 | — | 09.2 | 09.3 | 09.0 | 09.2 | 09.6 | 09.5 | 10.0 | 10.0 |
| 03. | ஸ்ரீ. துஷ்யந்தன் | 90 - 05 - 07 | 13.5 | 13.8 | 13.2 | 13.4 | 13.6 | 13.8 | 13.8 | — | 12.3 | 12.5 | 12.9 | 13.0 |
| 04. | நா. றொபின்ஸன் | 90 - 07 - 09 | 13.8 | 13.9 | 14.1 | 14.3 | 14.4 | 14.5 | 14.8 | 14.5 | 14.8 | — | — | — |
| 05. | ரா. விஜேந்திரன் | 90 - 02 - 16 | 12.7 | 12.8 | 12.1 | — | 13.1 | 13.2 | 13.5 | 13.4 | — | 13.4 | 13.4 | — |
| 06. | ந. திலீபன் | 90 - 11 - 10 | 12.5 | 12.7 | 12.5 | 12.4 | 12.6 | 12.8 | 12.9 | 13.2 | 13.1 | 13.1 | 13.6 | 14.0 |
| 07. | ர. ஜெகதீபன் | 90 - 02 02 | — | 12.1 | 12.1 | 12.0 | 12.2 | 11.9 | 12.0 | 12.2 | 12.3 | 12.3 | 12.7 | 13.0 |
| 08. | வி. ராஜீவ் | 90 - 05 - 30 | 11.9 | 12.1 | 12.4 | 12.4 | 12.8 | 12.8 | 12.8 | 13.2 | 13.2 | 12.9 | 13.8 | 13.9 |
| 09. | த. அகிலேஸ்வரன் | 90 - 03 - 02 | 13.3 | 13.1 | 14.0 | 14.3 | 14.2 | 14.2 | 14.6 | 14.9 | 14.8 | 14.8 | 15.3 | 15.4 |
| 10. | அ. மில்லர் | 90 - 07 - 11 | 11.1 | 11.0 | 11.4 | 11.5 | — | 11.7 | 12.0 | 11.9 | 12.3 | 11.6 | 12.7 | 12.5 |
| 11. | செ. டக்ஸன் | 90 - 03 - 09 | 11.3 | 11.5 | — | 11.6 | 11.9 | 11.7 | 12.0 | 12.0 | 12.3 | 12.4 | 12.6 | 12.8 |
| 12. | இ. ராஜேந்தர் | 90 - 05 - 07 | 13.1 | 13.2 | 13.6 | 13.6 | 13.8 | 13.6 | 14.0 | 14.3 | 14.4 | 14.4 | 14.5 | 15.4 |
| 13. | செ. சுரேஸ் | 90 - 12 - 31 | 11.5 | 11.5 | — | — | 12.4 | 12.0 | — | 13.1 | 12.8 | 13.2 | 13.4 | 14.0 |
| 14. | செ. குசைதாஸன் | 90 - 02 - 09 | 11.2 | 11.3 | 11.5 | — | — | — | — | — | 12.0 | 2.2 | — | 12.5 |
| 15. | யே. நிஷாந்தன் | 90 - 02 - 27 | 12.8 | 12.8 | — | — | 13.5 | 12.8 | 13.2 | 13.4 | 13.5 | 13.6 | 13.9 | 14.5 |
| 16. | பா. சிந்துஜன் | 91 - 01 - 18 | 11.1 | — | — | 11.2 | 11.6 | 11.5 | 12.3 | 12.6 | 12.6 | 12.1 | 12.7 | 13.1 |
| 17. | ச. அனுஷன் | 90 - 08 - 13 | 11.1 | 11.2 | 11.5 | 11.9 | 11.9 | 11.7 | — | 11.4 | — | — | — | — |
| 18. | த. வசந்தன் | 90 - 06 - 28 | 11.4 | 11.6 | 11.5 | 11.1 | — | 11.4 | 11.4 | 11.3 | 11.9 | 11.8 | — | 12.5 |
| 19. | நா. அரிலவன் | 90 - 05 - 07 | 10.8 | 11.0 | 11.0 | — | — | — | 11.1 | — | 11.5 | 11.8 | 12.4 | 13.1 |
| 20. | த. சுஜீபன் | 90 - 06 - 18 | 11.3 | 11.5 | 11.8 | 12.0 | 11.8 | 11.5 | 11.9 | 11.6 | 11.8 | 12.1 | 12.5 | 12.8 |
| 21. | செ. கமல்ராஜ் | 90 - 02 - 19 | 10.7 | 11.8 | 12.2 | 12.0 | 11.4 | 12.5 | 12.5 | — | 12.5 | 12.9 | 13.5 | 14.0 |
| 22. | ச. காண்டீபன் | 90 - 06 - 29 | 12.4 | 12.6 | 12.4 | 13.0 | — | — | — | — | — | — | — | — |
| 23. | பி தயாகுலன் | 90 - 01 - 09 | 13.5 | 13.7 | 14.0 | 13.6 | 13.8 | 14.0 | 14.4 | 14.7 | 15.0 | 14.6 | 14.6 | 15.3 |
| 24. | லோ. ஜோன்மொறின் | 90 - 07 - 03 | 12.0 | 12.1 | 12.4 | 12.3 | 12.3 | 12.5 | 11.5 | 11.6 | 12.8 | 12.8 | 13.4 | 14.2 |
| 25. | செ. அர்ச்சுன் | 90 - 05 - 14 | 11.0 | 11.1 | 11.2 | 11.0 | 11.3 | — | 11.6 | 12.5 | — | 12.0 | 12.4 | 12.5 |
| 26. | ந. நிக்ஸன் | 90 - 08 - 27 | — | 12.0 | 12.6 | 12.6 | 12.8 | 12.4 | 12.4 | — | 12.9 | 12.5 | — | 13.5 |
| 27. | கு. ரவீந்திரன் | 90 - 08 - 19 | 11.9 | 12.1 | 12.1 | 12.0 | 12.2 | 12.2 | 12.4 | — | — | 12.6 | 13.0 | 13.9 |
| 28. | ஜெ. ஜெயகரன் | 90 - 01 - 04 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 29. | சு. சுகிர்தரன் | 90 - 04 - 30 | 12.1 | 12.2 | 12.5 | — | — | — | 13.2 | 12.1 | 12.6 | 13.0 | 13.2 | 14.0 |
| 30. | ப. பரிதரன் | 91 - 08 - 20 | 10.1 | 09.9 | 10.4 | 10.9 | — | 11.1 | 11.5 | 12.1 | 11.9 | 12.1 | 12.4 | 13.0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூங்காவில் நிறைவு பெற்று
## புதிய தெம்புடன் பாடசாலை ஏகும்
# 1ம் ஆண்டு குழந்தைகள்

| | பெண் | பிறந்த திகதி | | ஆண் | பிறந்த திகதி |
|---|---|---|---|---|---|
| 01. | தி. தீபரஞ்சினி | 24 . 12 . 89 | 34. | லோ. ஜெஸிந்தன் | |
| 02. | பா. சுபாஜினி | 19 . 07 . 89 | 35. | ஜெ. துவாரகன் | 02 . 08 . 89 |
| 03. | உ. வினோபா | 24 . 12 . 89 | 36. | தே. பிரதீபன் | 07 . 07 . 89 |
| 04. | த. கயூரி | 23 . 10 . 89 | 37. | சு. சுகிர்தரன் | 14 . 02 . 89 |
| 05. | அ. ராஜிதா | 07 . 07 . 89 | 38. | மு. பஞ்சநாத் | 07 . 05 . 89 |
| 06. | ந. விஜித்திரா | 12 . 12 . 89 | 39. | செ. யூட்செல்வராஜ் | 25 . 07 . 89 |
| 07. | தே. தர்சிகா | 08 . 02 . 89 | 40. | பா. கஜேந்திரன் | 22 . 04 . 89 |
| 08. | செ. சந்திரரேகா | 08 . 02 . 89 | 41. | வி. ரகுபரன் | 18 . 04 . 89 |
| 09. | செ. ஜெயம் | 25 . 04 . 89 | 42. | செ. உதயகுமார் | 12 . 01 . 89 |
| 10. | சு. சுரேந்தினி | 06 . 02 . 89 | 43. | பா. ஜெனிஸ்ரன் | 07 . 03 . 89 |
| 11. | யோ. சகாயராணி | | 44. | ா. அசோக்குமார் | 01 . 03 . 89 |
| 12. | அ. சாலினி | 27 . 10 . 89 | 45. | ஜெ ஜெயகரன் | 04 . 01 . 90 |
| 13. | சி. பிரபாலினி | 25 . 09 . 89 | 46. | கு. அஜந்தன் | 04 . 01 . 89 |
| 14. | த. கிறிஸ்ரீபா | 23 . 10 . 89 | 47. | ச. தனுஷன் | 22 . 01 . 89 |
| 15. | த. ரேணுகா | 04 . 09 . 89 | 48. | நா. சுதாகரன் | 14 . 02 . 89 |
| 16. | த. சுரேகா | 29 . 12 . 89 | 49. | யோ. இருதயராஜ் | |
| 17. | ஜீ. நர்மதா | 08 . 06 . 89 | 50. | தா. யுனிஸ்ரன் | 07 . 03 . 89 |
| 18. | ந. சுதர்சினி | 08 . 03 . 89 | 51. | சு. ரமேஸ் | 12 . 02 . 89 |
| 19. | கே. ரேவதி | 10 . 09 . 89 | 52. | சு. நிசாந்தன் | 12 . 02 . 89 |
| 20. | யே. நிஷாந்தினி | 10 . 03 . 89 | 53. | செ. முருகையா | 10 . 04 . 89 |
| 21. | ஞா. லக்ஷனா | 17 . 10 . 89 | 54. | இ. ரஜீவ் | 12 . 01 . 89 |
| 22. | யோ. கோபிகா | 06 . 06 . 89 | 55. | வி. பார்த்திபன் | |
| 23. | க. ஆஷா | 01 . 09 . 90 | 56. | சு. சுதர்சன் | |
| 24. | அ. கபிராணி | | 57. | தெ. பிரசாந் | 12 . 03 . 89 |
| 25. | யோ. அஞ்சலீனா | | 58. | க வீரன் | |
| 26. | கு. சுகன்யா | 18 . 09 . 89 | 59. | வி எமல்சன் | |
| 27. | சி. லோஜனா | 12 . 03 . 89 | 60. | ச. முகிலன் | |
| 28. | சு. தர்சிகா | 08 . 02 . 89 | 61. | கு. திலீபன் | 16 . 0 . 89 |
| 29. | சி. ஆனந்தி | 30 . 06 . 90 | | | |
| 30. | ஜெ. சாரசாலினி | 15 . 04 . 89 | | | |
| 31. | உ. மயூறா | 14 . 03 . 89 | | | |
| 32. | அ. சோபியா | | | | |
| 33. | ந. நிலானி | 27 . 06 . 89 | | | |

# இசையும் அசைவும்

இ. முருகையன்

குழந்தைகளின் நலம் பேணுவது இலேசான காரியம் அல்ல. எல்லாரும் எடுத்த எடுப்பிலே அதனைச் செய்து விட முடியாது. அதற்குச் சிறப்பான தேர்ச்சி வேண்டும். பொருத்தமான ஆளுமையும் வேண்டும்.

பள்ளி முன்பருவத்துக் குழந்தைகள் பச்சைக் களிமண் போன்றவர்கள் என்று சொல்வது உண்டு. அவர்களின் உடல் மென்மையானது. உள்ளமும் அப்படித்தான். ஆகையால் அவர்களின் உடல் இலகுவில் ஊறடையக் கூடிய நிலையில் உள்ளது. சரியான புறச்சூழல் இல்லையானால், அவர்களின் மனம் நொந்து போகும்.

தக்கபடி அவர்களைக் கையாளாவிட்டால் இப்பருவத்தில் உண்டாகும் ஊறுகள் பிற்காலத்திலே கடுமையான பாதிப்புகளுக்கு ஏதுவாக அமைந்து விடும். ஆகையினாலே இந்தப் பருவத்துக் குழந்தைகளுடன் பழகிச் சீராட்டுவதைத் தமது தொழிலாக வரித்துக் கொண்டவர்கள் குழந்தை உளவியல் தெரிந்தவர்களாய் இருப்பது இன்றியமையாதது.

பள்ளி முன் பருவத்துப் பிள்ளைகளைப் பராமரிக்கும் செவிலியர்கள் ஒருபொழுதும் மறந்துவிடக் கூடாத உண்மையொன்று உண்டு. இப்பிள்ளைகளை முறைசார்ந்த பள்ளிப் பிள்ளைகள் போல நடத்த முயலுதல் தவறு. ஓடி ஆடி விளையாடி, உணவருந்தி, ஓய்வு கொண்டு உறங்கி, எழுந்து, கலந்து பழகி, பேசிப் பாடி, அளைந்து நுழைந்து பல்வேறு அநுபவங்களைப் பெறுவதற்குத் தாராளமான வாய்ப்புக்களை இந்தப் பிள்ளைகளுக்குக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு குழந்தைகளின் நலம் பேணும் முயற்சியில் ஈடுபடும்பொழுது அந்தக் குழந்தைகளின் பேச்சிலும் பாட்டிலும் ஆட்டத்திலும் கவனஞ் செலுத்தும் தேவை, மேற்கூறிய செவிலியருக்கு ஏற்படுகிறது. இங்கு தான் இசையும் அசைவும் பற்றிய தெளிவு அவர்களுக்கு உதவும்.



இசையும் அசைவும் குழந்தைகளின் முழுமையான ஆளுமை வளர்ச்சியில் எவ்வாறு துணை புரிகின்றன என்று சற்றே நோக்குவோம். கல்வியின் இலக்குகளை வகுத்துரைப்பவர்கள் அறிவு, திறன் மனப்பாங்கு என்று அவற்றைச் சுட்டுவதுண்டு. இம்மூன்றுள்ளும் இங்கு நாம் கவனிக்க வேண்டுவது திறன் என்னும் அம்சத்தை ஆக்கும். திறன்களும் பலவகைப்படும். அவற்றுள் உடலியக்கத் திறன்கள், வாழ்க்கையின் உயிர் நிலையாய் உள்ளவை.

உடலியக்கத் திறன்கள் என்பவை யாவை? குழந்தைகளைப் பொறுத்தமட்டில் நிற்பது, நடப்பது, ஓடுவது, துள்ளுவது, பாய்வது, இவை எல்லாம் சிறுகச் சிறுகப் பழகியே ஈட்டப்படுகின்றன. வாழ்வின் பல்வேறு கட்டங்களிலே புதுப்புது உடலியக்கத் திறன்களைப் பிள்ளைகள் பயின்று கொள்கிறார்கள். சயிக்கில் ஓடுதல், தட்டெழுத்து பொறித்தல் சற்று வயதேறிய பின் கற்றுக்கொள்ளப்படும் உடலியக்கத் திறன்கள். வீணை வாசிப்பிலும், பியானோ, ஓ'க'ன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி'ற்றார் என்பவற்றை வாசிக்கும் முயற்சிகளிலும் சன்னதம், கூத்து, நடனம் என்பவற்றிலும் நுண்மையான திறன்களோடு உடலியக்கத் திறன்களும் பங்கு கொள்கின்றன.

இவ்விதமான உடலியக்கத்தின்போது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புகளின் அசைவுகள் சேர்ந்து கொள்கின்றன. அந்தச் 'சோர்வு' நேர்வதற்கு தசைநார்கள் ஒன்றிணைந்து ஒத்துழைக்க வேண்டும். இதற்குப் பயிற்சிகள் அவசியமாகின்றன.

சில வகையான உடலியக்கங்களில் ஈடுபடும்பொழுது ஒரே விதமான அசைவுகள் திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன. இவை சமகால இடைவெளிகளில் மீண்டும் மீண்டும் வருகின்றன. அதாவது அவ்வித அசைவுகளில் ஒருசீர் இருக்கிறது; ஒரு தாளம் இருக்கிறது; ஓர் இசை இருக்கிறது; இவ்வாறான சீரும் தாளமும், இசையும் மனித உடல்களில் இயல்பாக ஒன்றி இருக்கும் ஒரு பண்பாகும். நாடித்துடிப்பு, கண் இமைப்பு, சாதாரணமான நடை, ஓட்டம் எல்லாவற்றிலும் இந்த இசைச் சீர்மை எவரும் கற்றுத் தராமலே அமைந்து விடுகிறது. இந்தச் சீர்மைக்கு ஊக்கம் தந்து வலியுறுத்தும் வகையிலே தொட்டிலாட்டம், ஊஞ்சலாட்டம், கும்மி, கோலாட்டம், முதலான ஆடல் அநுபவங்கள் தொடர்கின்றன. அதாவது 'இசையும் அசைவும்' உயிரினங்களுக்கு இன்பந்தரும் ஓர் ஈடுபாடாக வளர்ந்து செல்கிறது.

உயிரினங்களுக்கு மட்டுமன்றி சடப்பொருள்களுக்குக்கூட எளிமையான இசைமயமான இயக்கம் இயல்பான ஒன்றாய் இருக்கிறது. சின்னஞ்சிறிய அணுத்துகள்கள் தொடக்கம் கோள்கள், உடுக்கள் முதலான வான் பொருள்கள் வரை இந்த எளிய இசை இயக்கத்தில் 'நாட்டம்' உடையனவாய் இருக்கின்றன. பிரபஞ்ச இயக்கத்தின் ஓர் அடிப்படை அசைவுக் கோலமாகிய 'எளிமை இசை இயக்கத்தைக்' கணிதவியலாளர் விரிவாக ஆராய்ந்து அதன் நுட்பங்களை எல்லாம் கணித்துள்ளனர். இவை எல்லாம் 'இசையும் அசைவும்' எவ்வளவு முதன்மைத்திறன் வாய்ந்தது என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

குழந்தை நலம் பேணும் செவிலியர்கள் 'இசையும் அசைவும்' என்னும் செயற்பாட்டைக் கற்பிக்க முற்படும்பொழுது இந்த உண்மைகளை மனதில் இருத்துவது நல்லது. அத்துடன் பிள்ளைகளின் ஆடல்களில் எளிமையும் ஒழுங்கும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

எல்லாக் கல்வி முயற்சிகளுமே எளிமையிலே தொடங்கித்தான் கடுமையை நோக்கிப் பயணமாக வேண்டி உள்ளன. அந்தக் கற்பித்தல் விதிக்கு அமைவாக இலகுவான சிறிய சில சொற்களாலான பாடல்களுடனே தொடக்க நிலையில் 'இசையும் அசைவும்' அமையும். எல்லாரும சேர்ந்து பாடிக் கொண்டே ஆடுவதற்கு இசைவான பொருத்தமான இசையைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுதல் நன்று.

"தாளம் தாளம் தாளம்
தாளத் துக்கோர் தடையுண் டாயின்
கூளம் கூளம் கூளம்"

என்று பாடினார் பாரதியார். கூளம் என்பது குப்பை. அதில் ஒழுங்கில்லை; தாறுமாறாக சிந்தியும் சிதறியும் குவிந்தும் குழம்பியும் அது கிடக்கும்.

நாம் நமது குழந்தைகளுக்குப் பயிற்ற வேண்டியது கூளம் அல்ல; தாளம். அதன் வாயிலாக நாம் சீர்மையில் விருப்பத்தையும் நேர்த்தியான அழகின் ஈடுபாட்டையும் ஊட்டலாம். கலைஞர்களாக வருங்காலத்தில் மலர்ச்சி பெறவுள்ள மழலையர்களுக்கு மாத்திரமன்றி, ஏனைய அனைவருக்கும் வேண்டிய உடலியக்கத் திறன்களையும் முறையாகத் திட்டமிட்டுச் சரியாக வளர்த்துக் கொள்ளலாம். இவற்றுக்கெல்லாம் 'இசையும் அசைவும்' துணை நிற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் அநுபவம்

மனிதனின் வளர்ச்சிப் பருவத்தில் பல்வேறு பட்ட வளர்ச்சிகள் காணப்படும். அதில் குழந்தைகளின் வளர்ச்சிப்பருவமானது மிக முக்கியமானதாகும். வயது வந்த ஒரு மனிதனுக்கு என்ன தேவைகள் இருக்கின்றனவோ அத்தனை தேவைகளும் குழந்தைகளுக்கும் உண்டு. ஒரு குழந்தை பிறக்கும் போது அவனது அறிவு வளர்ச்சி வீதம் குறைவாக இருக்கும். 6 வயதிற்குள் அவனது அறிவு வளர்ச்சி மிக துரிதமாக வளர்ச்சியடைகின்றது. அவ்வேளையில் தான் அவனது தேவைகள் யாவும் மிகவும் சிறந்த முறையில் பூர்த்தியாக்கப்பட வேண்டும். அவர்களின் வளர்ப்பு வழி நல்ல முறையில் இருக்க நல்வழிகாட்டியாக பெற்றோரும், ஆசிரியர்களும் இருத்தல் வேண்டும்.

எமது பூங்கா ஒரு பின்தங்கிய கிராமத்தில் அமைந்துள்ளது. இங்கு வாழும் மழலைகளின் வாழ்வு சீர் அற்ற நிலையில் உந்தப்படுதல் கூடாது எமது சமுதாயம் பல்வேறு காரணங்களால் சீர்குலைந்து காணப்படுகிறது. எதிர்கால சமுதாயம் உடல் உள வளர்ச்சியின்றி காணப்படுவார்கள் என்பதை உணர்ந்த எமது தமிழீழத் தேசியத் தலைவரால் பொம்மைவெளி சிறுவர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற முதுமொழிக்கேற்ப 1993 01 . 4 அன்று பொம்மைவெளி கிராம மழலைகளிற்கு நல்வழிகாட்டி பூங்கா ஆரம்பிக்கப்பட்டது. இங்கு வாழும் குழந்தைகள் மிக ஆர்வம் கொண்ட நல்லறிவு உள்ள குழந்தைகள். இவர்களது அறிவு மழுங்கடிக்கப்படல் கூடாது. ஆரம்பத்தில் இவர்களது கல்வியறிவு, பழக்கவழக்கங்களில் குறைபாடுகள் காணப்பட்டன. ஆனால் இன்று இவர்களது நிலைமை மாறாகவுளது.



நாம் குழந்தைக் கல்வி புகட்டும் போது கற்பிப்பதற்கு வேண்டிய நிகழ்ச்சி நிரலை முன் கூட்டியே தயாரித்து செயற்படுவது முடியாத காரியமாகும். குழந்தைகளின் விருப்பத்திற்கிணங்கி அவர்களது மனமுதிர்ச்சியின் இயல்புகளைத் தெரிந்து அவர்களது தேவைகளை உடன்பட்டு கற்பித்தல் வேண்டும். நாம் மாணவர்களிற்கு கற்பிப்பது குறைவு. நாம் குழந்தைகளிடம் நிறையக் கற்கின்றோம். குறிப்பாக, 4 வயது பாலர்களுக்கு ஒரு நாள் பறவைகளின் நிறங்கள் பற்றி கற்பித்தேன். கொக்கின் நிறம் வெள்ளை என்பதை ஏற்றுக் கொண்டார்கள். அன்று மாலை பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த வேளை பக்கத்திலுள்ள வயலில் கொக்கு ஒன்றை கண்டார்கள். அது பறக்கும் போது வெள்ளை நிற செட்டைக்குள் கறுப்பு நிறமும் காணப்பட்டது. அவர்கள் அதனை உற்று நோக்கிய பின் கூறினார்கள். கொக்கு தனி வெள்ளை இல்லை கறுப்புநிறமும் சேர்ந்து காணப்படுகிறது என்று, இதிலிருந்து குழந்தைகளின் நுண்ணறிவை மதிப்பிடக் கூடியதாக உள்ளது.

திருமதி ஈ. புஸ்பலதா

எமது குழந்தைகள் கலை ஆர்வம் கொண்டவர்கள். ஒரு பாடம் குறிப்பாக ஆங்கிலச் சொற்களை மெசால்லிக் கொடுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வுநேரத்தில் உல்லாசமாக



அந்திமாலையில் ஆடிமகிழ்ந்திடும் வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவேகம், சிந்தனை
இவர்களின் உயிர்ப்பு



விளையாட்டு தமிழ் வீரத்தின்
விளைநிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அதனை ஒரு தாளக் கட்டுப்பாட்டிற்குள் கூறி அச்சொல்லைக் கூறும்போது பாடலாக்கி ஆடலுடனும் சொல்லுவார்கள். இந் நிகழ்வு அவர்களது மனதில் கல்வி விருப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்.

நாம் குழந்தைகளுடன் பழகும்போது ஆசிரியர் என்ற முறையில் நின்றால் வேற்று எண்ணந் தோன்றி குழந்தையின் தேவைகளை அறிய முடியாது இருக்கும். அவர்களோடு நாம் நல்ல நண்பனாய் நல்ல தாய் என்ற ஸ்தானத்தில் இருந்து கற்பிப்போமானால் குழந்தைகள் நல்ல மனத்துடன் இலகுவில் கற்றுக் கொள்வார்கள்.

குழந்தைகளுக்கு கற்பிக்கும்போது நாம் இசையுடன் கற்பிப்போமானால் குழந்தைகள் விரும்பிக் கற்கும். அபிநயங்களுடன் பாடுதல் நன்று. அப்போது குழந்தையின் உளவிருத்தி வளர்ச்சியடைகின்றது. குழந்தை ஆசிரியரின் ஒவ்வொரு செயலையும் மிக நுணுக்கமாக அவதானித்து அறிந்து செயல்படுபவனாவான். அவ்வேளை ஆசிரியரது ஒவ்வொரு அசைவும் மிக தெளிவானதாக இருத்தல் வேண்டும். ஒரு ஆசிரியரின் கடமையானது வகுப்பில் உள்ள குழந்தைகளின் தன்மை விருப்பு பற்றி அறிந்து அந்த அந்த குழந்தைகளிற்கேற்ப நடந்து செயற்பட வேண்டும். மாணவர்களின் இயல்பான மனப் போக்கிற்கு ஏற்ப நாம் கற்பிக்க வேணடும்.

ஒரு குழந்தை கல்வியை கற்க ஆசைப்படுவதற்கு கற்பித்தல் முறையே முதன்மையானதாகும் குழந்தைகளின் மனதில் நிலைத்து நிற்கும் அளவிற்கு கற்பிக்க வேண்டும்.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்," என பாரதியார் கூறியுள்ளார். எனவே இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த குழந்தைகளுக்கு நாம் கற்பிப்பதை மிகச் சீரானமுறையில் கற்பித்தல் வேண்டும். ஒரு குழந்தையின் மொழி வளர்ச்சியானது அவன் வாழும் சூழலிலே தங்கியுள்ளது. குழந்தையின் கல்விக் காலத்தில் பெரும்பகுதி நேரம் பாடசாலை சூழலே ஆகும். நல்ல சூழலை ஆசிரியரே அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

எமது எதிர்காலச் செல்வங்கள் அவர்களை நல்ல நோக்கோடு அன்பால் வசப்படுத்தி அவர்களது மனநிலைக்கேற்ப கற்பித்து அவர்களது ஆர்வத்தை தூண்டிவிட்டு அறிவை வளர்க்க வேண்டும். ஒரு விவேகம் கொண்ட ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்கள் முன்நிற்க வேண்டும். அப்போது ஒரு சிரான சமுதாயம் உருவாகும் என்பதில் சந்தேகம் இல்லை

*எமது பண்பாடு தான் எமது தேசத்தின் உயிர் எமது இனத்தின் ஆன்மா எமது உடல்கள் அழிந்தாலும் உடமைகள் அழிந்தாலும், எமது இனத்தின் இதயமாக இயங்கும் பண்பாட்டு வாழ்வை எவராலும் அழித்து விட முடியாது.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அநுபவம்

மனித சமுதாயம் என்னும் மாபெரும் விருட்சத்தின் உயிர் நிலையாக, ஆணிவேராக விளங்குபவர்கள் சிறுவர்களே. இன்றைய சிறுவர்கள்தான் நாளைய உலகை வழிநடத்திச் செல்லப் போகும் தலைவர்களும், மாமனிதர்களும் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடமுடியாது. எனவே எதிர்காலத்தின் சிற்பிகளான இன்றைய சிறுவர்களை உரிய முறையில் பேணிப்பாதுகாத்து வளர்க்க வேண்டியது வளர்ந்தோர் சமுதாயத்தின் தலையாய கடமையாகும். இதனைவிட முக்கியமான வேறெந்தக் கடைமையும் வளர்ந்தோர் சமுகத்திற்கு இருக்கமுடியாது என்று கூறினும் அது மிகையன்று. மனித சமுதாயம்சிறுவர்களின் முக்கியத்துவத்தை தொன்று தொட்டே உணர்ந்து வந்திருக்கின்றது என்பது உண்மையே. எனினும் அது பல் துறையிலும் மேம்பட்டுவிளங்கும் இன்றைய காலகட்டத்திலும் கூட உலகெங்கிலுமுள்ள இலட்சோபலட்சம் சிறுவர்கள், பல்வேறு விதங்களில் அவதியுற்றும், ஏன் மரணித்தும் கூட வருகின்றனர் என்பது எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத ஒரு கசப்பான உண்மையாகும்.

குழந்தையின் வளர்ச்சியில் அது கருவுற்ற நிலையிலிருந்து கருத்தரித்த பெண் ஆனவள் பேற்றுக்கு முன் தனது உடல் உள நலத்தைப் பேணுதல் அவசியம். தாயானவள் தன் சுகாதாரத்தையும் முக்கியமாகக் கவனித்தல் வேண்டும். குழந்தைக்கு தேவையான போசாக்குள்ள உணவை உட்கொள்ள வேண்டும். போசாக்கு அத்தனையும் தாய்ப்பால் கொடுக்கிறது. இப்பால் குழந்தைக்கும் தாய்க்குமிடையேயுள்ள திருப்தியையும், பாசத்தையும் ஏற்படுத்துகின்றது. தாய்ப்பாலானது கொலஸ்ரோளைக் கொண்டு காணப்படுவதால் குழந்தைக்கு பிறபொருளெதிர்க்கும் சக்தியைக் கொடுக்கின்றது.

குழந்தைக்கு ஒரு நாளைக்கு 5, 6 தடவை தாய்பால் கொடுக்க வேண்டும். கொடுக்கும் பொழுது 3 – 10 நிமிடங்கள் கொடுத்தல் அவசியம். குழந்தைக்கு 18 மாதங்கள் தாய்ப்பால் கொடுககவேண்டும். சாதாரண குழந்தைக்கு தாய்ப்பால் போதுமானதாக இல்லையெனில் அதனுடைய வளர்ச்சிக்கு தேவையான சில சத்துக்கள் சேர்க்கப்பட வேண்டும். குழந்தைகள் பிறப்பிலிருந்து 3–4 வருடங்களில் மிக வேகமாக வளரும். உணவு உட்கொள்ளும் பருவத்தில் வளர்ச்சியைத்தரும் உணவுகளை கொடுக்கவேண்டும். வளர்வதாலும் விருத்தியடைவதாலும் மிகக் கவனமாக உணவு ஊட்டப்படவேண்டும். ஏனெனில் சுலபமாகத் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காலம் இதுவே. இக்காலத்தில் தவறுகள் நிகழ்ந்தால் அது வாழ்க்கை முழுவதுமே பாதிக்கும்.



குழந்தை ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது என்ற உண்மையையும் பெற்றோர் வழிநடத்துனர்கள் உணரவேண்டும், அப்பொழுதுதான் தனித்தன்மைகது ஏற்றவாறு வளர்ச்சியில் உதவமுடியும். குழந்தைகளை விரும்பாதவர் யாருமிலர். அன்பே ஆண்டவன்

அருட்சகோதரி
தெரசில்டா அ.கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் குழந்தைகளின் களங்கமிலா அன்பே அதற்கெடுத்துக்காட்டு. மனிதன் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் தத்தளிக்கும் போது "நான் குழந்தையாகவே இருந்திருக்கக்கூடாதா?' என்று ஏங்குவதுண்டு ஏனெனில் குழந்தைப்பருவம் ஒரு இனிமையான பருவம்.

இன்னும் பிள்ளைகள் இரண்டு மூன்று வயதாகும் போது பெற்றோர் இருவரும் வேலைக்குச் சென்றால் குழந்தை பராமரிப்பில் எவ்வளவோ தாக்கம் ஏற்பட்டு பிள்ளைகள் தங்கள் வாழ்வில் பெரிய பின்னடைவை எதிர் நோக்குகின்றனர். இதனை நிவர்த்தி செய்யவே குழந்தைகளின் வாழ்வில் அக்கறை கொண்ட எத்தனையோ தொண்டர் ஸ்தாபனங்கள் சிறுவர் பராமரிப்பு விடுதிகளைத் திறந்துள்ளன. இத்தாபனங்களில் சில சில கட்டுக் கோப்புகளை உள்ளடக்கி குழந்தை நற்பண்புகளை கொண்டு வாழ இத்தாபனங்கள் பெரிதும் உதவுகின்றன. இவை னும் குழந்தை வயது ஏற ஏற நற்பண்புகளுடன் நல்ல சமூகப்பிராணியாக மற்றவர்களை அன்பு செய்து வாழும் தன்மையையும் பெற்றுவிளங்குகின்றது. குழந்தை வளர்ப்பு என்பது மிகவும் நுட்பமான ஒருகலை, கடினமான ஒரு பொறுப்பு. பெற்றோரின் உளப் பான்மையும் அவர்கள் குழந்தையின் முன் நடந்து கொள்ளும் பாங்குமே மிகவும் முக்கியமானது. குழந்தைக்கும் அன்பும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த சூழ்நிலையைப் பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையின் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். பெற்றோருக்கு பதிலாக ஸ்தாபனங்களில் உள்ளோர் இவற்றை கவனத்தில் எடுத்தல வேண்டும்.

இன்னும் இன்று பெற்றோரற்ற அனாதைச் சிறுவர்களின் தொகை நம்மத்தியில் பன்மடங்கு அதிகரித்து விட்டது. உழைப்பு வசதியின்றி உணவு, உடுப்பு, உறைவிடமின்றி அலையும் குடும்பங்களின் பிள்ளைகளும் அகதிமுகாம்களில் வசிக்கும் பிள்ளைகளும் உணவு, உடுப்பு, உறையுள் கிடைக்கும் ஊற்றுக்களை நாடி வரிசையில் நிற்கின்றார்கள், இவர்களுக்கு காருண்யம் காட்ட, பல பெரியோர்கள், பணம் படைத்தவர்கள், படித்தவர்கள், தலைவர்கள் சேவை மனப்பான்மையுடையோர் அளப்பரிய தொண்டுகள் புரிந்து இச்சிறார்களை வாழ வளர வழி சமைத்து கொடுக்கிறார்கள். இந்த சேவைகள் சிறுவர் பராமரிப்பு நிலையம், பகல் பாலர் பாடசாலை அநாதை இல்லங்கள் ஊடாக செயல்பட்டு வருகின்றன.

பெங்களுர் (இந்தியாவில்) கார்மேல் பாலர் பராமரிப்பு நிலையத்தில் என் ஒரு வருட அனுபவம்: பெங்களுர் சேரிப்பகுதி மக்கள் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்துபவர்கள் தாய்மாரும், தந்தைமாரும் வேலை செய்தால்தான் அன்றாட வாழ்வை நடத்தலாம். குழந்தைகளை வீட்டில் வைத்து பராமரிக்க எவரும் அற்ற நிலையில் சில பெற்றோர்கள் தத்தழித்த போது பெங்களுர் கார்மேல் பராமரிப்பு பாலர் நிலையம் உதவிக்கரம் கொடுக்க முன் வந்தது. இந்த நிலையத்தில் ஒரு வருடம் சேவையாற்ற எனக்கும் வாய்ப்பு கிட்டியது. காலையில் பெற்றோர் 7.30 மணியளவில் சிறார்களை பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைத்து விட்டு வேலைக்கு சென்று மாலை 4.30 மணியளவில் மீண்டும் தங்கள் சிறார்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். ஆறு மாதக்குழந்தைகள் முதல் மூன்றுவயதுச் சிறுவர்கள் வரை இந் நிலையத்தில் பொறுப்பேற்கப்பட்டார்கள். காலையில் சிறார்களை நிலையத்திற்கு அழைத்து வந்தவுடன் குளிப்பாட்டி உடை மாற்றி காலை உணவு கொடுத்து நிலையத்தில் பொறுப்பேற்கப்படுவார்கள். அத்துடன் விளையாட்டு, தேகப்பயிற்சி என்பனவற்றின் ஊடாக மகிழ்விக்கிறார்கள், மாதா மாதம் குழந்தைகளின் எடையை கணிப்பதன் மூலமும் தாய்மாருக்கு கருத்தரங்குகள் நடாத்துவதன் மூலமும் தாய் சேய் நலனில் மிகவும் முன்னேற்றமும் வளர்ச்சியும் காணக் கூடியதாக இருந்தது. இன்னும் கொழும்பு கார்மேல் பெத்தலகேம் பாலர் பராமரிப்பு நிலையத்திலும் இப்படியான அனுபவத்தை அனுபவிக்க இன்னுமோர் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தியா, இலங்கை பராமரிப்பு நிலையங்களின் வசதிகுறைவுகளினால் பல கஷ்ரங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. நெதர்லாந்து, தாய்லாந்து நாடுகளை தரிசித்தபோது பாலர் பராமரிப்பு நிலையங்களை தரிசிக்க வாய்ப்பு கிடைத்தது.

ஆனால் அங்கு சேவை செய்ய வாய்ப்புக் கிடைக்காவிடினும் அங்கே உள்ள நிறுவனங்களின் நடைமுறைகளை கவனிக்கக் கூடியதாக இருந்தது. வசதிகள், சொகுசுகள் நிறைந்த நிறுவனங்கள், வசதி படைத்தோருக்காக அமைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட நிறுவனங்கள். ஆனால், அன்பு சொரியப் படாத பராமரிப்பு நிலையங்களாகவே காணப் பட்டது.

கடமையைச் செய்ய முயலும் போது பல் வேறு இடர்பாடுகளை எதிர் கொள்ள வேண்டி வரும். அவற்றைக் கண்டு சோர்வடைந்தால் சமூக எதிர்கால நல்வாழ்வு நலிவுறும். அதனால் பாதிப்படைவது எமது எதிர்காலச் சமூகம் என்பதை நன்கு புரிந்து கொண்டால் நாம் அவர்களுக்காக எத்தகைய தியாகங்களையும் செய்ய பின்னடைய மாட்டோம். சிறுவனே எதிர்கால வாழ்வைச் சமைப்பவன் எதிர்கால உலகம் சீரும் சிறப்புமாகப் பொலிய அதை ஆக்கிப்படைக்கும் சிற்பிகள், கைத்திறன் படைத் தவர்களாகவும், அறிவு மிக்கவர்களாகவும், கூட் டுறவு கொண்டவர்களாகவும், தேசப்பற்றுள்ள வர்களாகவும், தியாகிகளாகவும் உண்மைத் தொண்டர்களாகவும் அமையவேண்டும். இன் றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்க ளும், சமுதாயத்தைக் கட்டி எழுப்புபவர்களும். இன்றைய சிறுவர்களை நாளைய மனிதர்களாக ஆக்கிப் படைக்கும் நற்பணியை எதிர்பார்ப்பின் றிச் செய்ய முனைவோமாக.



நாளை வரலாற்று நாயகர்கள் பூத்துக் குலுங்கும் வண்ண சோலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ அறிக்கை

01. காலப்பகுதி:- 01.01.1994 – 31.12.1994 வரை

02. இயங்கும் நாட்கள்:- ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்கள்

03. இயங்கும் நேரம்;- காலை 7.00மணி மாலை 5மணி வரை

04. சிறுவர்களின் வரவு;- 1) பராமரிப்புப் பகுதி–106 சிறுவர்கள்
11) பாலர் பாடசாலை 47 சிறுவர்கள்
மொத்த வரவு 153 சிறுவர்கள்.

05. சிறுவர்களின் வயது;- 1) பராமரிப்புப் பகுதி 1½ – 04 வயது
11) பாலர் பாடசாலைப் பகுதி 05 வயது

06. சிறுவர்களின் வதிவிடம்:- புதுக்குடியிருப்பு, பொம்மைவெளி, சூரியவெளி, நாவாந்துறை, செபியன்வீதி, ஓட்டுமடம்.

07. சிறுவர்களின் குடும்பநிலை;- வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பச் சிறுவர்கள்

08. மருந்துகள் வழங்கும் பகுதி:-
1) யாழ். மாநகர சுகாதாரப் பகுதி
11) யாழ். மாநகர சித்த மருத்துவப் பகுதி
111) நடமாடும் மருத்துவப் பகுதி

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைப்படி இங்குள்ள சிறுவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றோம். வாரத்தில் ஒருநாளும், அவசியம் ஏற்படும் பொழுது சிறுவர்களை பார்வையிட்டு சிகிச்சை அளிப்பதுடன் அறிவுரைகளையும் வழங்கி வருகின்றோம்.

மேலும், யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியிலிருந்து மருந்துகள், மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுதல், இரத்தப் பரிசோதனை செய்தல், சிறுவருடைய பெற்றோருக்கு நோய் பரவும் விதம், அவற்றைத் தடுக்கும் விதம் என்பவற்றை அறிவுரைகள் மூலம் தெரியப் படுத்துகின்றோம்.

பெரும்பாலான நோய்களுக்கு சித்த மருந்துகளும், அவசியம் ஏற்படும்போது ஆங்கில மருந்துகளும் கொடுத்துச் சிகிச்சை அளிக்கப் படுகின்றது. தீவிரமான நோய்களுக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

## சிறுவர்களின் பொதுவான நோய்கள்

ஆரம்ப காலத்தில் பெரும்பாலான சிறுவர்கள் ஆரோக்கியம் குறைந்தும், சுறுசுறுப்பு அற்றும், அடிக்கடி நோயினால் பீடிக்கப்பட்டும் காணப்பட்டார்கள். கீழ்க்காணும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அவையாவன குடற்கிருமி நோய், சுரம், சளி, இருமல், பல்வியாதி, கண்நோய், காயம், வயிற்றோட்டம், சரும ரோகங்கள், (சொறி, சிரங்கு) செங்கண் மாரி ஆகியன.

வைத்திய கலாநிதி
இ. தெய்வேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்குளிப்பான், சின்னமுத்து போன்ற நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களை யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி சிகிச்சையளிக்கப்பட்டது.

**1994 ஆம் ஆண்டு சிகிச்சை பெற்ற சிறுவர்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| தை | — | 17 சிறுவர்கள் |
| மாசி | — | 17 சிறுவர்கள் |
| பங்குனி | — | 19 சிறுவர்கள் |
| சித்திரை | — | 16 சிறுவர்கள் |
| வைகாசி | — | 12 சிறுவர்கள் |
| ஆனி | — | 13 சிறுவர்கள் |
| ஆடி | — | 14 சிறுவர்கள் |
| ஆவணி | — | 10 சிறுவர்கள் |
| புரட்டாதி | — | 22 சிறுவர்கள் |
| ஐப்பசி | — | 21 சிறுவர்கள் |
| கார்த்திகை | — | 28 சிறுவர்கள் |
| மார்கழி | — | 20 சிறுவர்கள் |

ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஒரு சில சிறுவர்கள் அடிக்கடி நோயினால் பீடிக்கப்பட்டார்கள் ஆனால், தற்பொழுது அச்சிறுவர்கள் நோயினால் பீடிக்கப்படுவது குறைவாக உள்ளது. மேலே காட்டப்பட்ட நோயாளர் புள்ளி விபரத்தின்படி கடைசி மூன்றுமாதங்களும் குளிர்காலம் ஆகையால் சிறுவர்கள் சாதாரண தடிமன், இருமல், சளியால் பீடிக்கப்பட்டார்கள். இத்துடன் இரத்த சோகையினால் 15 சிறுவர்களும், உயிர்ச்சத்துக்கள் குறைபாட்டால் 17 சிறுவர்களும் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஆரோக்கியமாக அண்ணளவாக 80 சிறுவர்கள் உள்ளார்கள்.

**அவதானிப்பு**

1. சிறுவர்களின் வளர்ச்சியில் முன்னேற்றம், சுறுசுறுப்பு, செயல்திறன், என்பன 1993ம் ஆண்டு உள்ள சிறுவர்களை விட சிறப்பாக உள்ளது.

2. இந்நிலையத்தில் சுத்தம், சுகாதாரம், பழக்க வழக்கங்கள் கடைப் பிடிக்கப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

3. குறிப்பிட்ட 20சிறுவர்கள் மட்டுமே அடிக்கடி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

4. இக்கால கட்டத்தில் பலவித தொற்று நோய்கள் (செப்ரிசேமியா, மலேரியா, வயிற்றோட்டம், டெங்குக் காய்ச்சல்) இருந்தும் அவற்றால் பாதிக்கப்படவில்லை.

5. குறைந்த போஷாக்குடைய சிறுவர்கள் அண்ணளவாக 30 பேர் வரை உள்ளனர்.

7. அண்ணளவாக எல்லாச் சிறுவர்களும் 1 கிலோ 100 கிறாம் வரை நிறை கூடிக் காணப்படுகிறார்கள்.

8. இந்நிலையத்தில் ஒரு சில சிறுவர்களின் நிலைப்பாடு:-

1. பொக்குளிப்பான், சின்னமுத்து, இவற்றால் பீடிக்கப்பட்ட சிறுவர்கள்- 03

1. செ. அலன்பேக்கின், (வயது- 04) நாவாந்துறை.
2. செ. ஜேம்ஸ் மில்லர், (வயது- 04) நாவாந்துறை.
3. க. செல்வறஞ்சன், (வயது- 04) பொம்மைவெளி.

இச்சிறுவர்களை அவதானிக்கும் போது ஆரோக்கியம் குறைவாகவும், சுகாதாரப் பழக்க வழக்கங்கள் குறைந்தும் காணப்பட்டமையால் இந்நோயினால் பாதிக்கப்பட்டார்கள்.

2. குடற்கிருமி நோய்:-

அனேக சிறுவர்கள் குடற்கிருமி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், சி. துஷ்யந்தன் (வயது 04) என்பவர் இந்நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தார். ஏனெனில் 3 மாதத்திற்கு ஒருமுறை பூச்சிமருந்து கொடுத்தாலும் வாயினாலும், மூக்கினாலும் கிருமி வெளியேறி மிகவும் அவஸ்த்தைப்பட்டதனால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தலை முடி நிறமாற்றம்:

போஷாக்கு குறைபாட்டினால் இரு சிறுவர்களின் தலைமுடி (தீபரஞ்சினி–5வயது, கா. கரன் – 3 வயது) கறுப்பு நிறமற்றதாக (செம்பாட்டு நிறம்) ஆரம்பத்தில் காணப்பட்டது. தற்பொழுது இச்சிறுவர்களின் தலைமுடி கருமை நிறமாகக் காணக் கூடியதாக இருக்கின்றது.

4. வலிப்பு:

ஒரேயொரு சிறுவன் (இ. இராமன்– வயது– 4) வலிப்பு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார். இவரின் ஆரம்பநிறை 8 கிலோ 900கிறாம். தற்பொழுது இவ்வருட முடிவில் இவரின் நிறை 10கிலோ. இவரின் வளர்ச்சி மந்த வளர்ச்சியாகக் காணக்கூடியதாக உள்ளது. ஆனாலும், அவரில் முன்னேற்றம் காணக்கூடியதாகஉள்ளது.

இவ்வாறு நிலைமையை சுருக்கமாகக் கூறினால் 75 வீத சிறுவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும், மனோபலம் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இச்சிறுவர்களுடைய எதிர்காலம் மிகவும் உன்னத நிலையை அடையுமென எதிர்பார்க்கின்றேன்.



அன்னம் அருந்துவதற்கு ஆயத்தமாக......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

செய்துபார்



## சிறுவர் பாடல்

மழையே மழையே போ! போ! போ!
இன்னொரு நாளைக்கு வா! வா! வா!
சின்ன ராகுல் விளையாடுகிறான்
அதனால் போய் நீ வருவாயே.

(மொ—ர்: செம்பியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசம் இரண்டு
கண்டுபிடியுங்கள்





பாவம்
மீனுக்கு
வழி
காட்டுங்
கள்

# 24. 11. 94 அன்று நடைபெற்ற யாழ்மாவட்ட பூங்காப் பணியாளர்களின் தராதரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் விபரம்

75ம், 75க்கு மேற்பட்ட புள்ளிகள் — அதிவிசேட சித்தி
55க்கும், 75க்கும் இடைப்பட்ட புள்ளிகள் — விசேட சித்தி
40க்கும், 55க்கும் ,, ,, — சாதாரண சித்தி
39ம், 39க்கு கீழ்ப்பட்ட ,, — திருப்தியின்மை
என அழைக்கபபடும். (குறிப்பிடப்படும்)

| இல. | பெயர் | பூங்காப் பெயர் | நிலை | சித்தி |
|---|---|---|---|---|
| 01. | க. வேலாயுதம் | சுன்னாகம் பூங்கா | நிர்வாகப்பொறுப்பாளர் | அதிவிசேட சித்தி |
| 02. | யா. மரியநாயகி | நவாலிப் பூங்கா | ,, ,, | சாதாரண சித்தி |
| 03. | ஏ. பிரான்சிஸ் | பொம்மைவெளிப்பூங்கா | ,, ,, | அதிவிசேட சிததி |
| 04. | நா. சச்சிதானந்தம் | துன்னாலைப்பூங்கா | ,, ,, | சாதாரண சித்தி |
| 05. | மு. பாரிமகன் | உடுப்பிட் டிப்பூங்கா | ,, ,, | விசேட சித்தி |
| 06. | அ. சிறிக்குமார் | சிறுப்பிட்டிப்பூங்கா | ,, ,, | ,, ,, |
| 07. | ச. ஜெயசிங்கம் | லவனிதாகுடியிருப்பு | ,, ,, | ,, ,, |
| 08. | விக்னேஸ்வரன் | கைதடிநாவற்குழி | ,, ,, | ,, ,, |
| 09. | சர்வநாயகி | கரவெட்டி | ,, ,, | ,, ,, |
| 10. | மு. பத்மசிறி | சுன்னாகம்பூங்கா | ஆசிரியர் | அதிவிசேட சித்தி |
| 11. | செ. கலைச்செல்வி | சுன்னாகம்பூங்கா | ,, | சாதாரண சித்தி |
| 12. | செ. சுமதி | ,, ,, | ,, | ,, ,, |
| 13. | மா. யோகமலர் | ,, ,, | ,, | ,, ,, |
| 14. | சு. றேனுகா | ,, ,, | ,, | ,, ,, |
| 15. | ம. தேவிகா | நவாலி பூங்கா | ,, | விசேட சித்தி |
| 16. | பெ. முத்தழகி | , ,, | ,, | சாதாரண சித்தி |
| 17. | சி. காஞ்சனா | பொம்மைவெளிப்பூங்கா | ,, | விசேட சித்தி |
| 18. | சி. சகாயசீலி | ,, ,, | ,, | திருப்தியின்மை |
| 19. | இ. கோபினி | துன்னாலைப் பூங்கா | ,, | விசேட சித்தி |
| 20. | ப. கிருபநாயகன் | ,, ,, | ,, | ,, ,, |
| 21. | த. தங்கேஸ்வரி | உடுப்பிட்டிப் பூங்கா | ,, | ,, ,, |
| 22. | செ. சுரேஸ்ராணி | உடுப்பிட்டிப் பூங்கா | ஆசிரியர் | விசேட சித்தி |
| 23. | ஜெகலோகராணி | ,, ,, | ,, | சாதாரண சித்தி |
| 24. | ச. குமுதினி | இருபாலைப் பூங்கா | ,, | விசேட சித்தி |
| 25. | செ. லதா | ,, ,, | ,, | சாதாரண சித்தி |
| 26. | சுசீலாவதி | ,, ,, | ,, | ,, ,, |
| 27. | வை. சந்திரா | சிறுப்பிட்டி பூங்கா | ,, | அதிவிசேட சித்தி |
| 28. | க. சுமதி | ,, ,, | ,, | சாதாரண சித்தி |
| 29. | வி. மனோரஞ்சினி | ,, ,, | ,, | ,, ,, |
| 30. | நா. அருந்ததி | ,, ,, | ,, | திருப்தியின்மை |
| 31. | ர. பேபி | கரவெட்டி பூங்கா | ,, | சாதாரண சித்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | சி. சிவசக்தி | ,, ,, | ,, | ,, |
| 33. | சரஸ்வதி | ,, ,, | ,, | திருப்தியின்மை |
| 34. | க. நந்தினி | லவனிதா குடியிருப்பு | ,, | விசேட சித்தி |
| 35. | அ. மேரிடிரக்கல | ,, ,, | ,, | ,, |
| 36. | பெ. சுஜாதா | ,, ,, | ,, | சாதாரண சித்தி |
| 37. | வி. வசந்தகுமாரி | ,, ,, | ,, | ,, |
| 38. | எம். பரமநாயகி | ,, ,, | ,, | ,, |
| 39. | யசோதரா | கைதடி-நாவற்குழி | ,, | விசேட சித்தி |
| 40. | சி. ரூபன் | ,, ,, | ,, | சாதாரண சித்தி |
| 41. | ம. சகுந்தலாதேவி | சுன்னாகம் பூங்கா | பணியாளர் | திருப்தியின்மை |
| 42. | திருஞானம் | உடுப்பிட்டி பூங்கா | ,, | விசேட சித்தி |
| 43. | க. லலிதாதேவி | சிறுப்பிட்டி பூங்கா | ,, | சாதாரண சித்தி |
| 44. | மு. அஞ்சலாதேவி | ,, ,, | | திருப்தியின்மை |
| 45. | றயித்தா | கரவெட்டி பூங்கா | ,, | சாதாரண சித்தி |
| 46. | பிலோமினா | லவனிதா குடியிருப்பு | ,, | விசேட சித்தி |
| 47. | பெனடிக் | கைதடி நாவற்குழிபூங்கா | பணியாளர் | சாதாரண சித்தி |
| 48. | அஞ்சலாதேவி | ,, ,, | | திருப்தியின்மை |
| 49. | ம. மனோரஞ்சிதமலர் | சுன்னாகம் பூங்கா | பராமரிப்பாளர் | ,, |
| 50. | ம. கிறிஸ்ரீனா | நவாலி பூங்கா | ,, | விசேட சித்தி |
| 51. | பா. மலர் | சிறுப்பிட்டி பூங்கா | ,, | ,, |
| 52. | ம. மரியராணி | லவனிதா குடியிருப்பு | ,, | அதிவிசேட சித்தி |
| 53. | காணிக்கைமேரி | ,, ,, | ,, | விசேட சித்தி |
| 54. | க. யோகம்மா | நாவலி பூங்கா | சமையலாளர் | ,, |
| 55. | ஜெ. ரதீஸ்வரி | இருபாலைப் பூங்கா | ,, | சாதாரண சித்தி |
| 56. | த. பூமணி | சிறுப்பிட்டி பூங்கா | ,, | அதிவிசேட சித்தி |
| 57. | செ. பூமணி | ,, ,, | ,, | விசேட சித்தி |
| 58. | மேரி அஞ்சலா | லவனிதா குடியிருப்பு | ,, | அதிவிசேட சித்தி |
| 59. | க. லட்சுமி | கைதடி-நாவற்குழி | | விசேட சித்தி |
| 60. | மு. தவேந்திரன் | பொம்மைவெளி பூங்கா | பண்ணையாளர் | ,, |
| 61. | சு. கருப்பையா | கைதடி நாவற்குழி | | ,, |
| 62. | வ. சர்வநாயகி | சுன்னாகம் பூங்கா | ஆசிரியர் | அதிவிசேட சித்தி |
| 63. | ப. பவானிமலர் | ,, ,, | ,, | விசேட சித்தி |
| 64. | க. வனஜா | நவாலிப் பூங்கா | ,, | அதிவிசேட சித்தி |
| 65. | சி. புஸ்பலதா | பொம்மை வெளி பூங்கா | ,, | ,, |
| 66. | ஐ. அழகேஸ்வரி | இருபாலைப் பூங்கா | நிர்வாகி | திருப்தியின்மை |
| 67. | ம. இந்துமதி | ,, ,, | ,, | ,, |
| 68. | ஜெயந்தி | கைதடி நாவற்குழி | பராமரிப்பாளர் | ,, |
| 69. | ஜெயகௌரி | ,, ,, | ,, | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர் காணல்

யாழ்ப்பாணம் - பொம்மைவெளி சிறுவர் போஷர்க்கு பராமரிப்பு பூங்காவின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் மலருக்காக சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் நேர் கண்டேன். முதலில் அங்கு பணிபுரியும் பணியாளர்களை நேர் காண்பதற்கு பூங்காவினுள் நுழைந்தேன். உடனடியாக நான் வந்த வேலையைத் தொடங்க முன்னர் ஒரு தடவை பூங்காவை சுற்றிப் பார்க்க விரும்பினேன்.

என்ன அற்புதம்; எவ்வளவு வளர்ச்சி! பிரமித்துப் போனேன். குறுகிய காலத்திற்குள் இவ்வளவு பெரிய வளர்ச்சியா? என்னால் நம்பமுடியவில்லை. இந்தச் சோலையில் பூத்துக் குலுங்கும் மழலைகள் கொடுத்து வைத்தவர்கள் என என் மனதலைகள் எழுந்து ஆர்ப்பரித்தன.

எனது நேர்காணலுக்காக முதலில் சிரேட்ட ஆசிரியர்கள் இருவரைச் சந்தித்தேன்.

திருமதி ஈ. புஸ்பலதா அவர்கள் 86ம் ஆண்டு தொடக்கம் 93ம் ஆண்டு வரை கலட்டியில் பாலர் கல்விக்கழகம் நடாத்தும் பாலர் பாடசாலையில் கடமை புரிந்திருக்கின்றார். க. பொ. த. உயர்தரம் வரை படித்திருக்கின்றார். 10.04.93 தொடக்கம் பூங்காவில் கடமை புரிகின்றார்.

திருமதி ஸ்ரீவிஜயம் வசந்தமலர் அவர்கள் 89ஆம் ஆண்டு தொடக்கம் 93ஆம் ஆண்டு வரை பொம்மைவெளி பாலர் பாடசாலையில் கடமைபுரிந்துள்ளார் இவர் க. பொ. த. சாதாரண தரம் வரை படித்துள்ளார். 17.03.94. தொடக்கம் பூங்காவில் கடமை புரிகின்றார்.

* நீங்கள் இங்கு ஆசிரியையாக வந்து கடமை புரியக் காரணம் என்ன?

தமிழீழத்தில் சேவை செய்ய வேண்டும் என்பதே என்பெரு விருப்பம். அதிலும் இந்தக் குழந்தைகள் மத்தியில் எமது கடமையைச் செய்கிற திருப்தி இருக்கின்றதே அதுவே பேரின்பம்.

* இப்பூங்காவில் குழந்தைகள் எத்தனை பிரிவாகப் பராமரிக்கப் படுகின்றார்கள்?

90ஆம் ஆண்டு, 91ஆம் ஆண்டு, 92, 93ஆம் ஆண்டு, பிறந்த அடிப்படையில் மூன்றுபிரிவாக இயங்குகின்றது, இனிவரும் காலங்களில் நான்கு பிரிவாக இயங்கும்.

* குழந்தைகள் இங்கு வரும்போது என்ன நிலையில் இருந்தார்கள்; தற்போது என்ன நிலையில் இருக்கிறார்கள்? இடைப்பட்ட முன்னேற்றம் பற்றிக் கூற முடியுமா?

நேர் காண்பவர்
கலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூந்தளிர்கள் பயிலும் பூங்கா

அவர்கள் வரும்போது போஷாக்கின்மையால் நலிந்து போனவர்களாகவும் சராசரி வளர்ச்சி விகிதம் அற்றவர்களாகவும், தனது எதிர்காலத்தை நிர்மாணிக்கக்கூடிய சக்தி இல்லாதவர்களாகவும் மிகவும் சோர்ந்து போய் இருந்தார்கள்.

ஆனால் தற்போது இக்குழந்தைகளின் அபரிமிதமான வளர்ச்சியை விபரிப்பதானால் எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் சொல்லலாம்.

நல்ல போஷாக்குணவுகளை பெற்று தேக ஆரோக்கியத்துடன் உள்ளனர். நல்ல பழக்கவழக்கங்களைப் பழகி சமூகத்தில் நல்ல பண்புள்ள பிரஜையாக உருவாகின்றனர்.

ஐந்து வயது முடியும் முன்னரே எழுதவும், வாசிக்கவும் கணிதம் செய்யவும் ஆங்கில எழுத்துக்களை எழுதும் அளவிற்கு கல்வியில் அடிப்படை அறிவைப் பெற்று உள்ளனர்.

உடற்கல்வி, விளையாட்டுக்களில் நல்ல தேர்ச்சி பெறுகின்றனர், விளையாட்டு என்று சொல்கின்றபோது ஊஞ்சல், பந்தாட்டம், பசுவும் – புலியும், நடைபயிலல், சர்க்கஸ், கெவி, துப்பாக்கி சுடுதல் என்பனவற்றுடன் சுய விளையாட்டுக்களிலும் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

ஆக்கத்திறனில், கலைத்திறனில், கூட மிக முன்னேற்றமடைந்துள்ளனர். குறிப்பாக நடனம், பாட்டு, கைவேலை அபிநயம், அபிநயப்பாடல், உரையாடல் என்பனவாகும்.

எமது குழந்தைகளிடம் மிக குறைந்தளவாகக் காணப்படும் தொழிநுட்ப அறிவில் முன்னேற்றமான அறிதுறியைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

* பாதிக்கப்பட்ட குழந்தைகள் யாரும் ஆரம்பத்தில் சேர்ந்துள்ளார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்; ஆரம்பத்தில் நடக்க இயலாமல் நான்கு குழந்தைகள் இருந்தார்கள். அவர்களது தேக ஆரோக்கியம் மிகவும் தளர்ந்து போயிருந்தது. எமது கவனிப்பின் காரணமாக ஆறு மாதத்தில் நல்ல நிலைக்கு வந்துள்ளனர். இன்று எல்லாத்துறைகளிலும் அவர்களும் முன்னேறியுள்ளார்கள்.

* எல்லோரும் சிறு குழந்தைகள்; இவர்களது கடமைகளை கவனிக்கும்போது தங்களுக்கு கஸ்டம் ஏற்படுவதில்லையா?

அப்படி ஒருநாளும் இல்லை. எங்களுக்குத் தரப்பட்ட நேர அட்டவணைப்படி எல்லாம் நடக்கின்றது. திட்டமிட்டு வேலை செய்கின்றோம். ரீச்சர் என்ற முறையில் பழகுவதில்லை. ஒரு தாய் என்ற முறையிலேயே எங்களிடம் பழகுகின்றார்கள். நாங்களும் அப்படியே தான் அரவணைத்துக்கொள்கின்றோம். அவர்கள் சிலநேரங்களில் அன்புடன் கோபப்பட்டுக்கொள்வார்கள். அவர்களுக்கு விரும்பியதெல்லாம் நாம் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

சிலவேளைகளில் குழந்தைகள் தங்கள் வீட்டில் நடக்கின்ற நல்லது, கூடாத விடயங்களைக் கூடச் சொல்வார்கள். தகப்பனார் குடிகாரனாக இருந்தால் அதனால் பாதிக்கப்பட்ட குழந்தை வீட்டில் நடைபெறும் சொல்லக் கூடாத சம்பவங்களை கூட சொல்லி துயரப்படும்.

* பூங்காவில் கடமைபுரிகின்ற மன உணர்வுகளைப் பற்றி ஏதும் கூறமுடியுமா?

ஆரம்பத்தில் எங்களுக்கு ஒரு வேலை கிடைத்திருக்கின்றது என்றுதான் நினைத்தோம். ஆனால் போகப்போகத்தான் இதன் மகிமையும், தாக்கமும் எங்களைப் பற்றிக் கொண்டது. ஒரு நாள்கூட வீட்டில் நிற்க முடிவதில்லை. அத்தியாவசிய தேவை காரணமாக ஒருநாள் லீவு எடுத்தாலும் பூங்காவின் நினைப்பு எங்களை விட்டுப்போவதில்லை, எமது தேவையையும் பொருட்படுத்தாமல் அரைகுறையாக பூங்காவிற்கு வந்துவிடுவோம். அந்தளவிற்கு இந்தக்குழந்தைகள் எம்மை ஆட்கொண்டுவிட்டார்கள். எமது சிந்தனை, செயல், உழைப்பு, எல்லாமே இந்தக் குழந்தைகளுக்காகவே நாம் அர்ப்பணித்து விட்டோம். ஞாயிற்றுக்கிழமை என்றாலே எம்மனதிற்குள் போராட்டம் தான்.

* குழந்தைகளின் உடல், உள வளர்ச்சிகளில் ஏதும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றதா?

இல்லை; உடல் நிலை, நோய் தடுப்பு முறைகளை கவனிக்க ஒவ்வொரு திங்கள் தோறும் சித்த வைத்திய அதிகாரி செல்வி சபாரத்தினம் அவர்கள் வந்து பார்வையிடுகின்றார்.

* நடமாடும் வைத்திய சேவைப் பிரிவு மாதமிருமுறை வந்து கவனிக்கிறார்கள்.

குடும்பநல பிரிவு மருத்துவ மாது ஆகியோரும் வந்து பார்வையிடுகிறார்கள். அத்துடன் மருந்துகளையும் தருகிறார்கள். அனைவரும் தேவையான மருத்துவ வசதிகளை அளிக்கின்றார்கள்.

அநேகமாக எல்லாம் குறைவின்றி நடக்கும்போது குழந்தைகளுக்கு என்ன குறை? உளவியல் ரீதியாக மிக மனமகிழ்வுடன் இருக்கின்றார்கள்.

* பூங்காவில் பூத்துக்குலுங்கும் மழலைச் செல்வங்களைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

ஒன்று மட்டும் நிச்சயம். எமது சுதந்திர தமிழீழத்தின் சிற்பிகளாக உருவாக்கம் எடுத்துள்ளவர்கள் இவர்கள் தான், எமது தாயகத்தின் எண்ணக்கருத்துகளுக்கு வடிவம் கொடுக்கப் போகின்றார்கள். இப்பூங்காவில் பயிலும் குழந்தைகள் அனைவரும் நூறு வீதம் பெறுபேறுஉடையவர்களாகவே காணப்படுகிறார்கள்.

**சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவில் பயிலும் குழந்தைகளின் தாய்மாரை நேர் கண்டபோது:**

முதலாமவர்: திருமதி. ஜெ. பவளநாயகி, வயது 34, கணவர் கமம் செய்கின்றார். ஏழுவயது குழந்தை சமீபத்தில் நோயினால் இறந்துள்ளது, தற்போது துவாரகன் வயது05, பூங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் பயில்கின்றார் சொந்த இடம் மண்டைதீவு. இடம் பெயர்ந்து பொம்மை வெளியில் வசிக்கின்றார்.

இரண்டாமவர்:- திருமதி. செ. ரேணுகா தேவி வயது 34, கணவரைப் பிரிந்து வாழ்கிறார். ஐந்து பிள்ளைகளின் தாயார். விஜிதா என்ற பெண்குழந்தை பூங்காவில் பயில்கிறார். சொந்த இடம் வடலிஅடைப்பு. தற்போது பொம்மைவெளியில் வசிக்கின்றார்.

மூன்றாமவர்:- திருமதி த. ஜெயந்தி வயது 27. கணவர் விபத்தில் இறந்துள்ளார். கிறிஸ், தீபா என் பெண் பிள்ளைகள் பூங்காவில் பயில்கிறார்கள். சொந்த இடம் மயிலிட்டி. தற்போதுபொம்மை வெளியில்வசிக்கின்றார்

நான்காமவர்:- திருமதி. பே. இந்திராணி வயது 26, சொந்த இடம் மட்டக்களப்பு. இராணுவ நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். கணவர் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளார். நான்கு பிள்ளைகள். உமா என்ற பெண்குழந்தை பயில்கின்றார். பொம்மை வெளியில் வசிக்கின்றார்.

* நீங்கள் சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்காவிற்கு உங்கள் குழந்தைகளை அனுப்பக் காரணம் என்ன?

எங்களது குழந்தைகளும் சமூகத்தில் நல்ல பிரஜைகளாகவும், புத்தி ஜீவிகளாகவும் வாழ வேண்டுமென்ற ஆசைதான் காரணம். மற்றது எமது குடும்ப கஷ்டநிலை, இரண்டு பிரச்சனைகளும் தீர்ந்து விடுகின்றது.

சுற்றுப்புற சூழலில் எதுவுமே தெரியாமல் நிற்கும் குழந்தை மிக எளிதில் கெட்டுப் போய் விடுகின்றது. இவை எல்லாம் தவிர்க்கப்படுகின்றது. ஒரு பிள்ளையின் அடிப்படை மூளை, மன வளர்ச்சியாகும். இது இங்கு பாதுகாக்கப்படுவதும் ஒரு காரணந்தான்.

* குழந்தைகளிடம் என்ன முன்னேற்றத்தைக் கண்டுள்ளீர்கள்?

எல்லா வகையான முன்னேற்றத்தையும் கண்டுள்ளோம்.

பழக்க வழக்கத்தில் படிப்பில் எல்லோரிடமும் பழகுவதில், ஏன் எங்களுக்கு அறிவுரை கூட சொல்கிறார்கள்.

வீட்டில் எங்களது பெரிய பிள்ளைகளுக்கு தெரியாதவற்றைக் கூட இவர்கள் சொல்லிக் கொடுப்பார்கள். எங்களுக்குப் பார்க்கின்ற போது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

* குழந்தையை பூங்காவிற்கு அனுப்பி விட்டு வீட்டில் இருக்கும்போது உங்கள் மனம் என்ன நிலையில் இருக்கும்?

ஆரம்பத்தில் எங்களுக்கு ஏக்கமாகத் தான் இருந்தது. சமூகத்தில் ஒரு மாதிரியாகக் கதைத்தார்கள். எங்கட இயலாமையினால் பிள்ளைகளை விட்டிட்டு வீட்டில் இருப்பதாக குற்றம் சுமத்தினார்கள். ஆனால் போகப்போக எல்லோரும் சரியென ஏற்றுக்கொண்டு தங்கட குழந்தைகளையும் பூங்காவிற்கு அனுப்பினார்கள். இது எமது மனஉணர்வுக்கு மிக உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தந்தது.

* நீங்கள் குழந்தைகளை காலை 7.00மணி முதல் மாலை 5.00 மணி வரை பூங்காவில் விடுகிறீர்கள். பின்னர் வீடு வரும்போது என்னமாற்றத்தைக் காண்கிறீர்கள்.

நல்ல உற்சாகமாக இருப்பார்கள். வீட்டை வந்தவுடன் பூங்காவில் நடந்த எல்லாவற்றையும் சொல்லுவினம். சாப்பாட்டில் இருந்து படிச்சது வரைக்கும், விளையாட்டிலிருந்து ஆக்கத்திறன் வரைக்கும், பாட்டிலிருந்து அபிநயம் வரைக்கும் தாங்கள் செய்ததை மீண்டும் செய்து காட்டுவினம். நல்ல சந்தோஷமாகத்தான் இருக்கும்.

* நோய்கள் ஏதுவும் வருவதுண்டா?

பெரிய அளவில் நோய்கள் எதுவும் வருவதில்லை. காய்ச்சல் வரும். அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குழந்தைகளை அனுப்புவதால் வேறு என்ன நன்மைகள் ஏற்படுகின்றது?

வேலைக்கு ஒழுங்காகச் செல்ல முடிகின்றது. ஒரு குழந்தைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைப்பதை விட ஒரு பெற்ற தாய்க்கு வேறு என்ன நன்மை கிடைக்க வேண்டும்.

* குழந்தைகளின் முன்னேற்றம் பற்றி பெருமையாக சொல்லுகிறீர்கள்; இவர்கள் எதிர்காலம் பற்றி ஏதாவது திட்டமிட்டுள்ளீர்களா?

ஆம், இந்தச் சிறுவர் போஷாக்கு பூங்காவின் நடவடிக்கைகளைப் பார்த்தபிறகுதான் எங்களுக்கு ஒரு வாழ்வு இருக்கெண்டது தெரியுது. எங்கட பிள்ளையளும் சமூகத்தில் பெரிய ஆட்களாக வருவினம், என்ர மகனும், மகளும் டாக்டராகவும், இஞ்சினியராகவும், ரீச்சராகவும் வருவினம் என்ட நினைப்புத்தான் வருகிறது. அதனால் தான் எங்கட பிள்ளைகளுக்காக ஏதும் சேர்த்துவைக்கவேண்டியிருக்கு, எல்லாத் தாய் தகப்பனுக்கும் இது ஒரு படிப்பினையாப்போச்சு.

* நல்லாச் சாப்பிட்டு போஷாக்கோட இருக்கினம், இவர்களின்ர அறிவு வளர்ச்சி எபபடி இருக்கு, வீட்டில வெளியில ஏதும் வித்தியாசங்கள் தெரியுதா?

நல்லாத் தெரியுது. அந்த நாளில மூன்று வயதுப் பிள்ளையை வெளியில விடப்பயம். ஆனால் இந்தப் பிள்ளைகள் வெளியில வந்து தங்கட வேலையைச் செய்வினம், குறிப்பாக என்னுடைய பிறவுண் றோட்டிலிருக்கும் உறவினர் வீட்டில் 3 வயதுக்குழந்ைதையை விட்டுவிட்டு வந்துவிட்டேன். மீண்டும் நான் கூட்டி வரச் சுணங்கிவிட்டது. எனது மகள் நேராகவே வீடு வந்து விட்டது. யாராவது நீங்க எங்க இருக்கிறது என்று கேள்விகேட்டால் உடனடியாக நாங்கள் பூங்காவில் இருக்கிறம் என்று துணிச்சலாகப் பதில் சொல்லுவினம்

* இந்தச் சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்கா பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

உண்மையில எங்கட தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். எத்தனையோ விதமான போராட்டங்களுக்கு மத்தியில் நாங்கள் பெத்த பிள்ளைகளுக்கு உதவ யாரும் இல்லாமலிருந்த போது எமது தலைவர் இப்படி நல்ல முடிவு எடுத்து எங்கட பிள்ளைகளையும், நம்மட சமூகத்தில் உயர்வாக வாழ வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அவருக்கு நன்றிகூற விரும்புகிறோம்.

* திருமதி. சிவகுமார் யோகலட்சுமி (வயது37) பூங்காவில் சமையல் வேலை செய்யும் பணியாளரிடம் நேர் கண்டேன்.

* உங்கள் குடும்ப விபரத்தைச் சொல்ல முடியுமா?

ஆம். எனது சொந்த இடம் வரணி. வரணி மகாவித்தியாலயத்தில் படித்துள்ளேன். 9 ஆம் வகுப்புவரைதான், தையல், நெசவு வேலைகளும் தெரியும். கணவர் நீரிறைக்கும் இயந்திரம் வைத்துதொழில் புரிகின்றார். 2 பெண்களும், 3 ஆண்களும் எனக்குண்டு. பெண்பிள்ளைகள் இருவரும் பூங்காவில் பயில்கின்றார்கள், மூன்று ஆண்கள் நாவலர் மகாவித்தியாலயத்தில் பயில்கிறார்கள். வீட்டு வசதி இல்லாதபடியினால் கணவரின் சொந்த இடமான பொம்மைவெளியில் வசிக்கின்றேன்.

* இங்கு எப்போது வேலைக்கு வந்தீர்கள்? என்ன காரணம்?

ஆரம்பத்தில் பகுதி நேரமா வந்து உதவி செய்து கொண்டிருந்தேன். பிறகு இங்கு வேலை செய்வதே மனதுக்கு திருப்தியாகப் போய்விட்டது. 93 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் நிரந்தரமாகச் சேர்ந்து கொண்டேன்.

* இங்கு வேலை செய்வதனால் குடும்ப வேலை பாதிக்கப்படவில்லையா?

இல்லை; இங்குள்ள நிம்மதி வீட்டில் இருப்பதில்லை. இதனால் இந்த வேலையை என்னால் விட்டுவிட முடியாது. பிள்ளைகளைப் பார்க்காமல் ஒருநாள கூட வீட்டிலிருக்க முடியாதுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூஞ்சோலையில் பூங்குயில்கள்



விளையாட்டுத் திடலில் வீரசாதனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைகள் இங்கு மீண்டும் பிறந்தது



சொந்த மண்ணில் சுயஉழைப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இது ஒரு கடினமான வேலை; உங்களுக்கு கஸ்டமாக இல்லையா?

சிரமம் இருப்பதாக தெரியவில்லை. எனக்கு உதவியாக ஒருவர் இருக்கின்றார். தேவையான உதவிகள் கிடைக்கின்றன. குறிப்பாக பொருண்மிய மேம்பாட்டு கழகத்தின் அடுப்பு இருப்பது பெரிதும் உதவியாக இருக்கிறது.

* எவ்வாறு வேலை நடைபெறுகின்றது என்று சொல்ல முடியுமா?

நேர அட்டவணைப்படி சாப்பாடு வழங்கப்பட வேண்டும். காலை 6.30 மணிக்கு வந்து வேலை தொடங்கி விட வேண்டும். இதில் முக்கியம். சுகாதார முறைப்படி சாப்பாடு தயார் செய்ய வேண்டும். அதோடு எங்களுடைய கடமை உணர்வும் மிக முக்கியம்.

* பூங்காவின் செயற்பாடுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எப்போதும் எங்களுக்குப் பெருமைதான். எங்கட சமுதாயத்தில இந்தப் பிள்ளைகள் நாளை வளர்ந்து மிகப்பெரிய பதவி ஆற்றப் போகின்றார்கள். அதனால் தான் என்மனமும் மிகவும் பூங்காவைப் பற்றியே எண்ணத் தூண்டுகிறது.

எனது கணவரும் ஆரம்பத்தில் வேறு எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் அவரே இப்போ இந்தப் பூங்காவைப் பற்றி புகழ்ந்து தள்ளுகிறார். பார்க்கிற எல்லோரும் அதிசயப்படுகிறார்கள் வீட்டில் வளர்கிற பிள்ளைகளை விட இங்கு பயிலும் பிள்ளைகள் சகல வகையிலும் திறமை சாலிகளாகவே இருக்கிறார்கள்.

* பூங்காவில் பயிலும் பிள்ளைகளைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

இந்தப் பிள்ளைகள் எதிர்காலத்தில் எமது தேசத்தை நிர்மாணிக்கக்கூடிய வல்லவர்கள் ஆக உருவாகுவார்கள் என்பது மட்டும் உண்மை. அதனால் தான் நான்எல்லா கவலைகளையும் மறந்து இன்பமாக வேலை செய்கிறேன்.

* யாழ் பொம்மைவெளியில் அமைந்துள்ள சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்காவின் அபிவிருத்திபற்றி தெரிந்துவைத்திருக்கும் யாழ் வணிகர் கழகத் தலைவர் திரு. செ. வே. சிற்சபேசன் அவர்களிடம் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா திட்டம் பற்றி உங்கள் பார்வை எப்படி இருக்கின்றது என்றுசொல்ல முடியுமா?

பேரினவாத அரசின் வெறியால் உளவியல் ரீதியாக பெற்றோர் அனைவரும் பாதிக்கப்பட்டிருந்தனர். தமது பிள்ளைகளுக்கு எதிர் காலத்தில் ஒரு வளமான வாழ்வு கிடைக்காது என எண்ணி இருந்தனர். அது மட்டுமல்ல பெற்றோரின் மனதில் மிக ஆழமாக வேரூன்றி இருந்த தாழ்வு மனப்பான்மை தகர்த்தெறியப் பட்டிருக்கிறது. மிகவும் பின்தங்கிய வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருந்த பெற்றோர் தமது பிள்ளைகள் கல்விகற்று உயர்ந்த நிலைக்கு ஒருநாளும் வரமுடியாது என்றும் தங்களைப் பாதுகாக்க யாருமில்லை என்றும் நம்பினர். ஆனால் இவை எல்லாம் இன்று பொய்யாகி பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் புதிய வாழ்வு உதயமாகியுள்ளது.

கலாநிதி க. குணராசா அவர்கள் நிர்வாக சேவையில் மூத்த நிர்வாகி, முற்போக்கு எழுத்தாளர், யாழ் பிரதேச செயலர் என்ற வகையில்! இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் மக்கள்படும் துன்ப துயரங்களை மிக ஆழமாக புரிந்து கொண்டவர். அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்து நேர் கண்டேன்.

* யாழ் பொம்மை வெளி சிறுவர் பூங்கா பற்றி தங்கள் கருத்தென்ன?

இரண்டாவதுஈழயுத்தம் தொடங்கிய பிறகு, பெற்றோரும், குழந்தைகளும் பெரிதும் பாதிப்புற்றனர். இதற்கு முன்னர் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் சில இயங்கி வந்தன. இதற்கான நிதி உதவிகள் ஐம்பது வீதம் அரசிடம் இருந்து கிடைத்து வந்தன. மற்றும் சட்டதிட்டங்கள் கூட இருந்து வந்தன. ஆனால் அவை யாவும் இன்று முழுவதுமாக நின்று விட்டன.

(51 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்உளப் போசாக்கு

### வாழ்த்து

சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் பணியை அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வறிய நாடுகளில் வறுமை யில் வளரும் குழந்தைகள்- சிறுவர்கள் போசாக்குள்ள உணவின்றி வாழ்ந்தும், வாழாமல் இருப்பதை, வளர்ந்தும், வளராமல் இருப் பதை நாம் அறிவோம். போசாக்கு குன்றியதால் இறந்த குழந்தை களின் எண்ணிக்கையையும், நோய்வாய்ப்பட்டிருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையையும் நாம் உணர்ந்துள்ளோம். அதிலும், திடீரெனத் திணிக்கப்பட்ட ஒரு போரின் சூழலில் ஆள்வோரின் ஆட்சி அதிகாரத் துர்ப்பிரயோகத்தினால் சிறுபான்மை இனமொன்றைப் படிப்படியாக அழிக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டுச் செய்யும் பல செயல்களும். சிறுவர்களின் போசாக்கு உணவையும் தடை செய்தது ஒரு மனிதாபி மானமற்ற கொடிய செயல். இங்ஙனம் பாதிக்கப்பட்ட குழந்தை கள்- சிறுவர்கள் பரிதாப நிலை கண்டு ஆவன செய்ய முன்வந்த அனைவரையும் பாராட்ட வேண்டும். தேவைகளைச் சந்திப்பதுதான் பணி. மனித அடிப்படைத் தேவையொன்றை உரிய காலத்தில் சந் தித்து செய்யும் இப்பணி அர்த்தமுள்ள பணி. ஒரு வயது துவங்கி ஐந்து வயது நிறைவான குழந்தைகளும், சிறுவர்களும் இந்தப் போசாக்கு உணவுத் திட்டத்தில் பங்கு கொண்டு பயன்பெற்று வரு வதை அறிகின்றேன். இவர்கள் பொதுவாக காலை 7.30 மணி துவங்கி மாலை 5 மணி வரை பொம்மை வெளி சிறு வர் போசாக்குப் பூங்காவில் செலவிடுகிறார்கள். இவர்களு டைய பாடத்திட்டமும் அவர்களுக்கேற்ப அமைக்கப்பட்ட தாகவே தோன்றுகிறது. உணவுப் போசாக்குடன், அறிவுப் ''போசாக்''கும், உடற்பயிற்சிப் ''போசாக்'கும் இவர்கள் பெறுவது இவர்களின் வளர்ச்சிக்கு உதவும் என்பதில் கிஞ் சித்தும் ஐயமில்லை.



### பராயத்துத் தேவைகள்

இங்கு வரும் குழந்தைகளையும், சிறார்களையும் இரு பராயங்களுள் பார்க்கலாம்.

(அ) சிறுவர் பருவம்.

(ஆ) விளையாட்டுப் பருவம்.

மனித வளர்ச்சிப் பருவப் படிமுறையில் மிகமுக்கியமான முதல் மூன்று பருவங்களுள் இரண்டு மேற்குறிப்பிடப்பட்ட பருவங்கள். இப்பருவங்களுள்தான் (0-6-7 வயது), மனித ஆளுமையின் அடித்தளம் அத்திவாரமாகின்றது. இதிலிருந்து இப்பருவங்களின் முக்கியத்துவம் புலனாகின்றது.

அருட்கலாநிதி
சா.ம. செல்வரட்ணம் அ.ம.தி
(கரவையூர்செல்வம்)

அப்படிப்பட்ட பருவங்களின் முக்கியமானதும் அதிக மானதுமான துயிலெழுந்த நேரத்தை இச்சிறார்கள் போசாக்கு பராமரிப்புப் பூங்காவில் செலவிடுகின்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னென்றால், இப்பூங்காவில் பணிபுரியும், பராமரிப்போரின் கடமையும், பொறுப்பும் எவ்வளவு முக்கியமானதென்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். இக்குழந்தைகளின் ஆளுமையை ஆக்குவதும், அழிப்பதுவும் அவர்கள் பொறுப்பில் உண்டல்லவா? தாய் தந்தையருக்கும் இப்பொறுப்பில் பெரும் பங்குண்டல்லவா?

## சிறுவர் பருவம்

ஊரத் தொடங்கிய குழந்தைகள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதைப் பார்க்கின்றோம். ஆபத்துக்களை அறியாத இக் குழந்தைகள் விஷப் பரீட்சைகளில் கூட அறியாமல் ஈடுபடலாம். இந்த சுய கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதும், மட்டுப்படுத்துவதும், ஆற்றுப்படுத்துவதும், பராமரிப்போரும் பெற்றோரும் இக்கட்டுப்பாடுகளும் மட்டுப் படுத்தலும் அளவுக்கு மீறி விட்டால் இக்குழந்தைகளின் சுயமதிப்பு பாதிக்கப்படும். சுய நம்பிக்கையும் அதனால் பாதிப்படையும் இதனால் சந்தேகங்கள் எழும். வெட்கமும், இழிவுணர்வும் தலை தூக்கும். இப்பருவ வளர்ச்சிக்குரிய அச்சம் ஒரு சுதந்திர உணர்வுக்கும், சந்தேகம்- வெட்கம்- இழிவு போன்றவற்றுக்குமிடையே ஏற்படும் ஓர் உளப் போராட்டமாகும். இப்போராட்டத்தில் எங்கு அதிகமாகத் தாக்கப்படுகின்றோமோ அங்குதான் பருவ வளர்ச்சிக்கு ஊக்குவிப்போ அன்றேல் தடையோ அமைகின்றது. சுதந்திரம் அதிகமாக உறுதிப்படுத்தப்பட்டால் பருவ வளர்ச்சிக்கு ஊக்குவிப்பாக அமையும். சந்தேகம்- வெட்கம்- இழிவு அதிக அளவு உறுதிப்படுத்தப்பட்டால் பருவ வளர்ச்சி குன்றிவிடும். பருவ வளர்ச்சி உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலோ அன்றேல் பாதிக்கப்பட்டு குன்றிய நிலையிலோதான் குழந்தை அடுத்த பருவத்தை எட்டித் தொடுகின்றது.

## விளையாட்டுப் பருவம்

அடுத்த விளையாட்டுப் பராயத்தில் சிறுவர்கள் நிறைய முயற்சி எடுக்கிறார்கள், அறிய முயற்சிக்கிறார்கள், அதையும் விரைவாகச் செய்ய முயல்கிறார்கள். புதிய உத்திகளையும் நுட்பங்களையும் கற்றுத்தேற முயற்சி எடுக்கும் பராயமிது. அதேவேளை பெற்றோரின், சமூகத்தின், தங்கள் கலாச்சாரத்தின், மதத்தின் ஒழுக்க முறைகளையும் இவர்கள் அறிய வருகின்றார்கள். ஆகவே தங்கள் முயற்சிகளுக்கு எதிரான தடைகளையும் எதிர்ப்புக்களையும் உணர ஆரம்பிக்கின்றார்கள். இவர்களிடையே ஒரு போராட்டம், ஒரு புறம் எல்லைகள் அற்ற ஆசைகள்; அவற்றை நிறைவேற்ற ஒரு துடிப்பு; செயற்பட ஓர் ஆர்வம். மறுபுறம் பெற்றோரினதும், சமூகத்தினதும் ஒழுக்கங்களும், கட்டுப்பாடுகளும், இங்குதான் மனச்சாட்சி உருவாகின்றது. ஆகவே இப்பராயத்தில் குற்ற உணர்வும் உருவாக இடமுண்டு. முயற்சிக்கும் குற்ற உணர்வுக்கும் இடையே ஓர் உளப் போராட்டம், முயற்சிகள் உறுதிப்படுத்தும் பொழுது பருவ வளர்ச்சி ஏற்படுகின்றது. குற்ற உணர்வுகள் தாக்கும் பொழுது பருவ வளர்ச்சி குன்றிக் குறைகின்றது.

இவற்றையே உளச்சமூக வளர்ச்சியென உளவியலாளர்கள் கூறுகின்றனர். உளவியல் வளர்ச்சிக்கு எரிக்எரிக்சன் அளித்த பெரிய பங்களிப்பு இது. இந்த அறிவின் அடிப்படையில் வளரும் குழந்தைகளுக்கும், சிறார்களுக்கும் ''உளப் போசாக்கு''ம் அளித்தால் குழந்தைகள், சிறார்களின் நிறைவான வளர்ச்சிக்கு வழிகோலுமல்லவா?

பெற்றவர் பலர் தங்கள் பொறுப்புக்களை உணராமல் இருப்பது கவலைக்குரியது. பெற்றோருக்குரிய அறிவு, பிள்ளை வளர்ப்பு பற்றி அறிவு கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளைப் பெற்றவர்களும் பிள்ளைகளை வளர்ப்பவர்களும் உளவள அடிப்படை அறிவில் விழிப்புணர்வு கொள்வது அவசியம்.

பெற்றோரே உங்கள் குழந்தைகள் மட்டில் பொறுப்பென்ன? சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்காவிலே சிறந்த மலர்களாக மொட்டுவிழ்ந்து மலரும் உங்கள் குழந்தைகள் உங்கள் பராமரிப்பில் தான் இரவில் உறங்குகின்றன. எனவே அக்குழந்தைகள் என்றும் வாடா மலராக பிரகாசிக்க மலரைக் காக்கும் கவசங்களாக நீங்கள் திகழ்வதோடு எதிர்கால சந்ததியினரை ஆரோக்கிய முன்னவர்களாக உருவாக்குவதற்கு உங்கள் உடல் உள ஒத்துழைப்பை நல்குங்கள்.

வளரட்டும் உங்கள் பணி.
பரவட்டும் உங்கள் சேவை.
சிறக்கட்டும் உங்கள் சிந்தனை.

# பிள்ளைகளும் விளையாட்டும்

"ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்திருக்கல் ஆகாது பாப்பா"
என்றார் பாரதியார்

பாலர்களின் மனவிருப்பம் விளையாட்டே. விளையாடாத குழந்தை, குழந்தையே இல்லை என்னும் அளவிற்கு விளையாட்டும் பாலரும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். விளையாட்டின் மூலம் சிறுவர்கள் எதிர்கால வாழ்க்கைக்குத் தயாராக்கப் படுகிறார்கள். விளையாட்டிற்கு பாலர்களை வற்புறுத்தவே தேவையில்லை. அவர்களாகவே விரும்பி விளையாடுவார்கள். இதன் மூலம் பிள்ளைக்கு இன்பமும், திருப்தியும், மனக்குதூகலமும் ஏற்படுகின்றது. விளையாட்டு சிறுவரின் வளர்ச்சிக்கு கூடுதலான சந்தர்ப்பங்களைக் கொடுக்கின்றது. இதன் மூலம் பிள்ளை தனது சுற்றாடலைக் கற்றுக் கொள்ளுகின்றது. விளையாட்டுக்கள் பல வகைப்பட்டன. அவற்றுள் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற விளையாட்டுக்கள் கட்டி எழுப்புகின்ற விளையாட்டுக்கள், திருமாண விளையாட்டுக்கள், அழித்தல் விளையாட்டுக்கள் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

விளையாடுவதன் மூலம் பிள்ளைகளின் உடல், உள, அறிவு சமூக, அழகியல், மொழி எண்ணக்கரு என்பனவும் வளர்சியடைகின்றன. பொதுவாக சிறுவர்கள் எல்லாவகையிலும் வளருவதற்கு விளையாட்டே உதவுகின்றது. உடல் வளர்ச்சியுடன் இணைந்தவாறு மொழி சமூக அறிவியல் வளர்ச்சியும் ஏற்படுகின்றது.

விளையாட்டின் மூலம் உடல் வளர்ச்சியடைகின்றபோது தசை நார்களின் இணைப்பு, செயற்பாடு என்பனவும் விருத்தியடைகின்றன, உடற்பயிற்சியும், உடலின் இணைந்து செயற்படும் தசை நார்கள், கை, கால்கள் என்பனவற்றின் இணைந்த செயற்பாட்டை அபிவிருத்தி செய்கின்றன. விளையாட்டின் மூலம் உள இயக்க வளர்ச்சியின் போது உடலின் மெல்லிய பாகங்களின் கட்டுப்பாடும், உடல் உறுப்புக்களின் அசைவும் ஏற்படுகின்றது. கைகளையும் கண்களையும் இணைத்துக்கொள்கின்ற செயற்பாடு "ஒழுங்கமைப்புத் திறன்" எனக் கூறப்படுகின்றது.

விளையாட்டின் மூலம் மொழி வளர்ச்சியடைகின்றது. பேச்சுத் திறன் விளையாட்டில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது விளையாட்டின் மூலம் குழந்தைகள் தமது கருத்துக்களை தெரிவிக்கவும், கருத்துக்களைப் பரிமாறுவதன் மூலம் மொழியை அபிவிருத்தி செய்யவும் முடிகிறது. வாசிப்பு முன்பயிற்சி, எழுத்து முன்பயிற்சி கூட மொழி அபிவிருத்தியில் அடங்குகின்றது. விளையாட்டின் மூலம் அறிவு வளர்ச்சி ஏற்படுகின்றது. முதன்முறை கிடைக்கின்ற புதிய அனுபவங்கள், அவதானம், ஆராய்ச்சி, கேள்வி கேட்டல், புதிர்களை இணைத்தல் மூலம் சிந்தனை ஆற்றல்என்பன அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன.

மண், நீர் என்பனவற்றுடன் விளையாடுவதனால் பிள்ளைகள் கூடுதலான அனுபவங்களைப் பெறுகின்றனர். உருவம், அளவு என்பவற்றை அடையாளம்காண்பதுடன் தொடர்புள்ள செயற்பாடுகளின்

எஸ். சி. எஸ்.
சிதம்பரநாதன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(முறைசாராக் கல்வி)
கல்வித்திணைக்களம்
வலயம் - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பிள்ளைகளின் உள்ளம் வளர்ச்சியடைகின்றது. விளையாட்டின் மூலம் மனவெழுச்சி வளர்ச்சியடைகின்றது. அன்பு, பாதுகாப்பு, வரவேற்பு உளத்திருப்தி என்பவற்றை முன்னேற்றுதல் மனவெழுச்சி வளர்ச்சியினுள் அடங்கும் விளையாட்டின் மூலம் தன்னைப்பற்றியும் உணர்வுகள் பற்றியும் மேலதிக தன்னம்பிக்கை ஏற்படுகின்றது.

விளையாட்டின் மூலம் சமூக மயமாக்கல் இடம் பெறுகின்றது. தனி விளையாட்டின் பின் பிறபிள்ளைகள், செயற்பாடுகள், வாய்ப்புக்கள் என்பவற்றின் மூலம் பாலர்களின் உலகம் விரிவடைகின்றது. இணைந்து செயற்படுதல், பகிர்ந்து கொள்ளுதல், ஏனையோரை ஏற்றல் என்பன சமூக மயமாக்கத்திற்கு மிகவும் அவசியமாகும். நட்பு, சண்டை, கோபம் என்பவற்றின் மூலம் பிள்ளைகள் சமூகப் பழக்கத்திற்கு உட்படுகின்றனர். விளையாட்டின் மூலம் அழகியல் வளர்ச்சி ஏற்படுகின்றது. காட்சி, ஒலி, உணர்வு, அழகினை நயத்தல் என்பன மூலம் பெறப்படுகின்றன.

விளையாட்டில் பிள்ளைகள் வாழ்க்கையுடன் தொடர்புடைய பல் வேறு கருத்துக்களையும் வளர்த்துக்கொள்ளுகின்றனர். விளையாட்டு சுமுகமான ஒரு சூழலை ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் சிறந்த நோக்கினை வளர்க்க வாய்ப்பேற்படுகின்றது. தலைவனைப் பின்பற்றுதல், அவனது தீர்மானத்தை ஏற்றல், விளையாட்டுப் பொருட்களை மதித்தல் போன்ற சிறந்த நோக்கினை எய்தலாம்.

சுருங்கக்கூறினால் விளையாட்டின் மூலம் குழந்தைகள் பூரண வளர்ச்சியைப் பெறுகின்றனர். இதனை எத்தனை பெற்றோர் உணர்ந்துள்ளனர் என்பதே கேள்வியாகும். குழந்தைகள் சகல ஆற்றல்களும் பெறவேண்டுமானால் மொழி



எண் – வாசிப்பு – எழுத்து எண்ணக்கருவளர்ச்சியை ஆரோக்கியமாக பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அவர்களை நன்றாக விளையாட விடுங்கள், அப்பியாசப் புத்தகத்தை எழுதி நிரப்பு, கருத்து விளங்காமல் பாடமாக்கு. எண்ணுக்குரிய எண்ணக்கரு வளர்சியடையும் முன்பே வாய்ப்பாடும், கூட்டல்கழித்தலும் என்றுபிள்ளைகளை வதைக்காதீர்கள். அவர்களுக்கு கல்வியைச் சுமையாக்காதீர்கள்,

குழைந்தகளின் புத்தி விருத்தி, மொழி விருத்தி, கணித எண்ணக்கருவிருத்தி ஆகியவை யாவும் உளவியல் ரீதியாக நேசமான சூழ்நிலையிலேயே அபிவிருத்தியடைகின்றன. நேசமான சூழலை உருவாக்குவது விளையாட்டு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

எமது மக்களுக்கு ஒருசுபீட்சமான எதிர்காலத்தையும், நிரந்தரமான அமைதியையும், சுதந்திரமான வாழ்வையும் பெற்றுக்கொடுக்க எமது இயக்கம் தொடர்ந்தும் போராடும்.

தமிழீழ தேசியத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போசாக்கு பூங்கா விளையாட்டு விழா



யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்காக்களில் வதியும் 1200 இளஞ் சிறார்களின் விளையாட்டு விழா 19-10-94 அன்று யாழ்கொக்குவில் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது.

சின்னஞ்சிறிய மொட்டுகளாம் சிறுவர்கள் தமது அழகுநடை காட்டி, ஆற்றலைக்காட்டி அறிவைக் காட்டிப் பார்வையாளரைப் பரவசமூட்டினார்கள். இவ்விழாவை ஏற்பாடுசெய்த தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி அவர்களிடம் இவ் விழாவின் முக்கியத்துவம் பற்றிக் கேட்டபோது அவர் சொன்னார், ''போர் அனர்த்தங்களால் வாடும் 3 – 5 வயதுக்குட்பட்ட சிறார்களை அழைத்து அவர்களுக்குப் போஷாக்கான உணவூட்டி உடை வழங்கி, கல்வி, வைத்திய சேவைகளை வழங்கி வருகிறோம். தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் எண்ணத்தில் உதித்த இத்திட்டத்தினால் 1200 சிறுவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஒன்று உடற் கல்வியாகும். அவர்கள் இக் கல்வி மூலம் உடலையும், உள்ளத்தையும் ஆளக் கற்றுக்கொள்கிறார்கள். இசையுடன் ஒத்திசைவு பெறக் கற்றுக்கொள்கிறார்கள். இவர்களின் ஆற்றலை வளர்ப்பதற்கும், சிறுவரிடம் அபிவிருத்தி செய்யப்படும் மனப்பண்புகளையும்'விருத்தி செய்யவும் விளையாட்டு விழாக்கள் பெரிதும் உதவுகின்றன எனும் அடிப்படையில் இவ் விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்'' என்றார்.

கடந்த ஒரு வருடமாக வளர்த்தெடுக்கப்பட்ட இவ்விளஞ் சிறுவர்களின் விளையாட்டு விழாவைப் பார்த்த எவரும் அன்றைய பொழுதை பயனுள்ள இனிய பொழுதாகவே கழித்திருப்பர். ஓட்டம், பாய்தல், பந்துஎறிதல் கொடி அஞ்சலோட்டம், நத்தை ஓட்டம், தவளை, தாரா நடைகள் எனப் பல்வேறு விளையாட்டுக்கள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. விளையாட்டு நிகழ்ச்சிகளை கல்வித் திணைக்கள அலுவலர்களும், ஆர்வலரும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்ச்சியின் இடைவேளையின்போது காஷ்மீரத்தில் குங்குமப்பூ மலர்ந்ததுபோல நீலமும் இளநீலமும் கலந்த ஆடைகளை அணிந்தவாறு 216 சிறுவர்கள் மைதானத்தின் மத்தியில் வந்து தமது கைகளில் உள்ள மலர்ச்செண்டுகளை இசைக்கேற்ப அசைத்தவாறு உடற்பயிற்சியிலீடுபட்டனர். இக் காட்சியைப்பார்த்த எல்லோர் வாயும், மனமும், புளகாங்கிதமடைந்த நிலையிலேயேயிருந்தது. அத்துணைச் சிறப்பாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

அடுத்த நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வினோத உடைப்போட்டியில் ஆமை, ஏதிலிகள் குடும்பம், முதலுதவிக் குழு, பனைமரம் மரங்களைக் காப்போம் இவை போன்ற பல்வேறு வேடங்களைத் தாங்கிய வண்ணம் சிறுவர்கள் அரங்கை வலம் வந்தார்கள். தீர்ப்பு வழங்கும் நடுவர்களை திணறடிப்பதுபோல ஒவ்வொரு நிகழ்ச்சியும் அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விளையாட்டு விழாவுக்கு பிரதமவிருந்தினராக வருகை தந்திருந்த தமிழ்ச்செல்வன் அவர்கள் பேசும்போது; தமிழீழத்தில் போராட்ட சூழலினால் எந்த ஒரு சிறுவருமே பாதிப்படையாது அவர்களின் ஆற்றல்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் எனும் தேசியத் தலைவரின் உன்னத இலட்சியம் நிறைவேறுவதையிட்டு தான் மகிழ்வதாகக் கூறினார். சிறுவர் போட்டிக்கும் – பராமரிப்புத் திட்டத்துக்கும் விளையாட்டு விழாவை நிறைவாக்கிய ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள் ஏனைய எல்லா வித ஒத்துழைப்பையும் வழங்கிய பொது நிறுவனங்களையும் தனிப்பட்டவர்களையும் பாராட்டுவதாகக் கூறினார். சான்றிதழ்கள், பரிசுகள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கும் நல்லதோர் விழாவைப் பார்த்த அனுபவத்துடன் வீடு திரும்பினோம்.

சுப்பிரமணியம்
நன்றி சாளரம் பிரதிக் கல்விப்பணிப்பாளர்.

### யாழ் மாவட்டத்திலுள்ள பூங்காக்களின் விபரம்

| இல. | பூங்காவின் பெயர் | மொத். பிள். | பணி. கள் |
|---|---|---|---|
| 01. | பொம்மை வெளி– யாழ். | 175 | 12 |
| 02. | துன்னாலை– கரவெட்டி | 69 | 07 |
| 03. | சுன்னாகம் தெற்கு-சுன். | 144 | 12 |
| 04. | சிறுப்பிட்டி– கோப்பாய் | 137 | 10 |
| 05. | கைதடி–நாவற்குழி–கைதடி. | 100 | 09 |
| 06. | நவாலி– சண்டிலிப்பாய் | 101 | 08 |
| 07. | லவனிதா குடியிருப்பு– நாவ. | 83 | 08 |
| 08. | இருபாலை கோப்பாய் | 74 | 08 |
| 09. | இலக்கணவத்தை உடுப்பிட்டி | 91 | 08 |
| 10. | இராஜகிராமம்–கரவெட்டி | 109 | 10 |

# யாழ் மாவட்ட சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காக்களுக்கிடையிலான

# சிறுவர் விளையாட்டு விழா – 1994

வி. ரகுபரன் நின்று நீளம் பாய்தல் 1ம் இடம்
குடைத் தாரா 2ம் இடம்

சி. லோஜனி பழம் பொறுக்குதல் 3ம் இடம்
வேக நடை 1ம் இடம்
சமநிலை 3ம் இடம்

ரமேஸ் தவளைப் பாய்ச்சல் 2ம் இடம்
நத்தை ஓட்டம் 2ம் இடம்
பந்தெறிதல் 3ம் இடம்

கொடியஞ்சல் 1ம் இடம்
நின்று நீளம் பாய்தல் 1ம் இடம்
தானியப்பை எறிதல் 3ம் இடம்
இரயில் பெட்டி இணைதல் 3ம் இடம்

மு. நிஷாந்தினி குடைத் தாரா 1ம் இடம்

அர்ச்சனா நத்தை ஓட்டம் 1ம் இடம்
தவளைப் பாய்ச்சம் 1ம் இடம்

லோ. ஜோன்மொறின் பானம் அருந்துதல் 2ம் இடம்

சே. சுமன் நின்று நீளம் பாய்தல் 1ம் இடம்

அருண்மேரிச் செல்வி வேகநடை 1ம் இடம்

அருள்மேரிச் செல்வி 25மீ ஓட்டம் 2ம் இடம்

அருள்மேரிச் செல்வி பழம் பொறுக்குதல் 1ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயது 4 வெற்றி வீரர்கள்

முதலாம் இடம்; அ. பிரதீப் –11 புள்ளிகள் – நாவற்குழி பூங்கா
இரண்டாம் இடம்; 1) அ. பரதீஸ்– 08 புள்ளிகள் – நவாலி தெற்கு பூங்கா
2) க. அரியதாஸ்– 08 புள்ளிகள் – துன்னாலை தெற்கு பூங்கா
3) ஜெ. அருள்மேரிச்செல்வி 08 புள்ளிகள் – பொம்மைவெளி பூங்கா

## வயது 5 வெற்றி வீரர்கள்

முதலாம் இடம்: சி. லோஜனா – 09 புள்ளிகள் – பொம்மைவெளிப் பூங்கா
இரண்டாம் இடம்; 1) தி. ரமேஸ் – 08 புள்ளிகள் – நவாலி தெற்கு பூங்கா
2) வி. ரகுபரன் – 08 புள்ளிகள் – பொம்மைவெளிப் பூங்கா

## சிறுவர் போசாக்கு பூங்காக்களின் நிலை

| இடம் நிலை | பூங்கா | பெற்ற புள்ளிகள் | குறிப்பு |
|---|---|---|---|
| * 01 | பொம்மைவெளிப் பூங்கா | 90 புள்ளிகள் | வெற்றிக்கேடயம் பெற்றது |
| * 02 | நவாலி தெற்கு பூங்கா | 81 புள்ளிகள் | வெற்றிக்கேடயம் ,, |
| * 03 | துன்னாலை தெற்கு பூங்கா | 79 புள்ளிகள் | வெற்றிக்கேடயம் ,, |
| * 04 | சிறுப்பட்டி பூங்கா | 56 புள்ளிகள் | வெற்றிக்கிண்ணம் ,, |
| | நாவற்குழி பூங்கா | 56 புள்ளிகள் | வெற்றிக்கிண்ணம் ,, |
| * 06 | சுன்னாகம் தெற்கு பூங்கா | 43 புள்ளிகள் | வெற்றிக்கிண்ணம் ,, |
| * 07 | உடுப்பிட்டி பூங்கா | 42 புள்ளிகள் | — |
| * 08 | லவனிதாகுடியிருப்பு பூங்கா | 20 புள்ளிகள் | — |
| * 09 | இருபாலை | 03 புள்ளிகள் | — |

| பூங்கா அமைவிடம் | நிறம் | வட்டம் / கோட்டம் |
|---|---|---|
| (அ) பொம்மைவெளி | இளம் சிவப்பு | யாழ்ப்பாணம். |
| (ஆ) துன்னாலை | பச்சை | கரவெட்டி. |
| (இ) சுன்னாகம் | கருநீலம் | உடுவில். |
| (ஈ) சிறுப்பிட்டி | இளநீலம் | கோப்பாய். |
| (உ) நாவற்குழி | செம்மஞ்சள் | கைதடி. |
| (ஊ) நவாலி | சிவப்பு | சண்டிலிப்பாய். |
| (எ) லவனிதா குடியிருப்பு | மண்ணிறம் | தீவகம். |
| (ஏ) உடுப்பிட்டி | மஞ்சள் | உடுப்பிட்டி. |
| (ஐ) இருபாலை, | ஊதா | கோப்பாய். |
| (ஒ) இராசகிராமம் | சாம்பல் | கரவெட்டி. |

---

முதலில் முயற்சி செய்யுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம், முதலில் உழையுங்கள், பிறகு ஓய்வெடுக்கலாம். முதலில பலவீனத்தை அகற்றுங்கள். பிறகு துணிவைப்பெறலாம். முயற்சி, உழைப்பு, துணிவு ஆகிய மூன்றினால் ஆரம்ப காலத் துன்பத்தை வென்று ஆழமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

– ஜேம்ஸ் ஆலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு 1994

| நிகழ்வு | நடந்த திகதி | நிகழ்வில் கலந்து சிறப்பித்த விருந்தினர் | நிகழ்வின் கலை நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|---|
| 1. | 14-02-94 | 1. கலாநிதி க. குணராசா யாழ். உதவி அரசாங்க அதிபர்<br>2. திருமதி சர்வேஸ்வரன் யாழ் பிரதேச பாதுகாப்பு வைத்திய சேவை வைத்தியர்<br>3. திரு. கரிகாலன் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப் புலிகள்<br>4. யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சொலமன் சூ. சிறில் | 1. அபிநயப் பாடல் (வண்ணத்துப் பூச்சி)<br>2. சிறுவர் பாடல்<br>3. அபிநயப் பாடல் (றெயின் வருகுது)<br>4. சிறு நாடகம் (கூடிவிளையாடு பாப்பா)<br>5. கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'ஏடு தூக்கும் ஏறுவர்' |
| 2. | 14-03-94 | 1. திரு. தெய்வேந்திரம் யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி<br>2. திரு. சிவராசா கிராம சேவையாளர்<br>3. திரு. கு. சிவலிங்கம் சுகாதாரக் கல்வி அதிகாரி யாழ் மாநகர சபை<br>4. திரு. திருக்குமரன் வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் | 1. அபிநயப் பாடல்கள்<br>1. பாட்டுக் கச்சேரி<br>2. புள்ளிப் புள்ளி மானே<br>2. கிராமிய நடனம்<br>3. கவிதை<br>4. சிறுவர் பாடல்<br>5. கும்மி<br>6. மயில் நடனம்<br>7. கண்ணன் நடனம் |
| 3. | 15-04-94 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி விக்கினேஸ்வரமூர்த்தி<br>திருமதி கந்தசாமி<br>திரு. செந்தமிழன் யாழ் வட்டப் பொறுப்பாளர் | 1. வரவேற்பு நடனம்<br>2. காவடி நடனம்<br>3. அபிநயப் பாடல்கள்<br>1. புள்ளி புள்ளி மானே<br>2. மின்னி, மின்னி<br>3. கியாங் கியாங் குருவி<br>4. உடற்பயிற்சி (3 வயது)<br>5. கிராமிய நடனம் (அரிவுவெட்டு)<br>6. கிராமிய நடனம்<br>7. மீனவ நடனம்<br>8. கோலாட்டம்<br>9. அபிநய நடனம்<br>10. உடற்பயிற்சி (4வயது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4. | 20-05-94 | திரு. பொ. பாலசிங்கம் யாழ் மாநகரசபை ஆணையாளர்<br>டாக்டர் கெங்காதரன்<br>திரு. சு. செல்வநாயகம் அதிபர் வண்ணார் பண்ணை சிறி வைத்தீஸ்வராவித்தியாசாலை<br>திரு. செந்தமிழன் யாழ் வட்டப்பொறுப்பாளர் | 1. வரவேற்பு நடனம்<br>2. கோலாட்டம் (கோலாடுவோம்)<br>3. குறத்தி நடனம் (கூடைமுறம் கட்டி)<br>4. அபிநய நடனம் (டெஸ்சிப் பாப்பா)<br>5. கும்மி (எங்கள் தமிழீழம்)<br>6. கதை (அபிநயம்)<br>7. அபிநய நடனம் (வெள்ளிநிலா)<br>8. அபிநயம் (பட்டணத்தைப் பார்க்க)<br>9. கண்ணன் பாடல் |
| 5. | 31-08-94 | டாக்டர் கெங்காதரன்<br>திரு. கனகராசா (அதிபர்- மிலக்வைற் தொழிற்சாலை) | 1. தீப நடனம்<br>2. கோலாட்டம்<br>3. கவிதை<br>4. கும்மி<br>5. உழவர் நடனம்<br>6. அபிநயப் பாட்டல்<br>7. மீனவ நடனம்<br>8. கண்ணன் நடனம்<br>9. அபிநயப் பாடல் |
| 6. | 14-09-94 | திரு. ச. பரம்சோதி வெங்கடேஸ்வரா உரிமையாளர் | 1. அஞ்சலி நடனம்<br>2. சிறுவர் பாடல்<br>3. கதை கூறல்<br>4. மீனவ நடனம்<br>5. அபிநயப் பாடல்<br>6. உடற்பயிற்சி<br>7. கரகம்<br>8. உரையாடல்<br>9. காவடி<br>10. சிறுவர் பாடல் |
| 7. | 31-10-94 | யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர்<br>யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர்<br>J/85 கிராமசேவையாளர்<br>J/88 கிராமசேவையாளர்<br>திரு. விக்கினேஸ்வரா கடை உரிமையாளர் (யாழ்) | 1. மாவீரர் அஞ்சலி நடனம்<br>2. கவிதை<br>3. அபிநயப் பாடல் (வண்ணாத்திப் பூச்சி)<br>4. உரையாடல்<br>5. கவிதை<br>6. கதை<br>7. கிராமிய நடனம்<br>8. காவடி ஆட்டம்<br>9. அபிநயப்பாடல் (பூங்காச் சிறுவர்கள்)<br>10. மீனவ நடனம்<br>11. பாட்டு<br>12. நீதிநூல் கூறல் |
| 8. | 30-11-94 | திரு. பொ. செந்தமிழன் யாழ்ப்பாண வட்டப் பொறுப்பாளர் | 1. அஞ்சலி நடனம்<br>2. கவிதை<br>3. சிறுவர் அபிநயப்பாடல்<br>4. அபிநயப் பாடல்<br>5. றபான் நடனம்<br>6. அபிநய நடனம்<br>7. காவடி ஆட்டம்<br>8. அபிநய நடனம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிவூட்டும் பாதையிலே கல்வி வளர்ச்சிக் கழகம்



முதியோர் கல்வி பெற்று முழுமைகாணத் துடிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னமிட்டு அன்பு செய்யுங்கரங்கள்



தமிழீழம் மலர்வதை எதிர்நோக்கும் மலர் விழிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த பெற்றோர் சந்திப்பு - 1994

| | சந்தித்த திகதி | சந்திப்பின் போது கலந்து கொண்ட பிரமுகர்கள் | கலந்துகொண்ட நிகழ்வில்முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் | கலந்துகொண்டபெற்றோர்களின்எண்ணிக்கையும் அவர்களால் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளும், |
|---|---|---|---|---|
| 01. | 28-02-91 | தேவா அன்ரி. நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள். | 1. பிள்ளைகளின் சுத்தம் 2. பிள்ளைகளின் சூழலின் சுகாதாரம் பேணல் 3. பிள்ளைகளின் வரவு – ஒழுக்கம் | 61 பெற்றோர்கள் பனிகாலமாக இருப்பதனால் சரியான நேரத்திற்கு நித்திரை விட்டு எழும்பாததால் நேரத்திற்கு அனுப்ப முடிவதில்லை எனக் கூறினார்கள். |
| 02. | 22-03-94 | 1. கிராமசேவையாளர்கள் 2. யாழ் மாநகரசுத்திகரிப்பு பரிசோதகர் 3. குடும்ப நல உத்தியோகத்தர். ,4 குடும்ப நல உதவியாளர்கள் | 1. மலேரியாநோய் வராமல் தடுப்பதற்கான ஆலோசனைகள் | 68 பெற்றோர் |
| 03. | 12-04-94 | குடும்பநலப்பிரிவு | 1. சுகாதாரம் சம்பந்தமான கருத்துகள் | 48 ,, |
| 04. | 13-05-94 | 1. சுகாதார கல்வி அதிகாரி. 2. தொற்று நோய் தடுப்பு அதிகாரி. 3. குடும்பநலஅதிகாரி 4. பயிலுனர். | 1. நோய்காணும்குழந்தைகளை உடன் அறியத்தரல்வேண்டும் 2. கிராமத்தின் சூழலைப் பாதுகாக்க வேண்டியது 3. குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் கவனம் | 62 பெற்றோர் |
| 05. | 13-07-94 | திரு. லோகநாதன் | 1. கலந்துரையாடலின்நோக்கம் 2. அன்றாட வாழ்வில் சுகாதாரம் பேணல் | 52 பெற்றோர் |
| 06. | 13-08-94 | யாழ் வட்டப்பொறுப்பாளர் திரு. செந்தமிழன் | 1. பாலர் பாடசாலையில் படிக்கும் மாணவர்களின் மாலை நேரத்தின் செயற்பாடு | 49 பெற்றோர் |
| 07. | 13-09-94 | 1. யாழ் மாவட்டசிறுவர் போசாக்குபூங்காவின் பொறுப்பாளர் திரு. குட்டி. 2. யாழ்மாவட்டசுகாதாரக் கல்வி அதிகாரி | 1. சிறார்களின் உடல் ஆரோக்கியம் 2. பெற்றோரின் ஆலோசனைகளையும் கூறுவதற்கான சந்தர்ப்பம் 3. பெற்றோரின் கவனம் | 50 பெற்றோர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 08. | 13-10-94 | பொது சுகாதார விரிவுரையாளர் திரு. ஜெகநாதன் | 1. குழந்தை வளர்ப்பு முறை<br>2. குடும்ப கட்டுப்பாடு குடும்ப நலத்திட்டம்<br>3. வாழ்க்கைத்திறன்கல்வி நிலையத்தில் தும்புத் தொழில் கற்பித்தல் | 38 பெற்றோர் |
| 09. | 24-11-94 | 1. சுகாதாரக் கல்வி அதிகாரி, அவரது உதவியாளர்களும் | 1. நோய்த் தடுப்பு ஊசிகளின் முக்கியத்துவம் | 47 பெற்றோர் |
| 10. | 17-12-94 | 1. சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. விஸ்வலிங்கம்<br>2. யாழ் பல்கலைக் கழக மாணவிகள் இருவர் | 1. வயிற்றோட்டம், மலேரியா பரவாமல் தடுப்பது பற்றிய ஆலோசனைகள் | 57 பெற்றோர் |

## (தமிழ்) ஈழம் எங்கள் நாடு

ஈழம் எங்கள் நாடடா – தமிழ்
ஈழம் எங்கள் நாடடா
முப்புறமும் கடலடா
மூத்த தமிழ் நாடடா
ஆறு உண்டு பாரடா – அங்கு
மீன் பாயும் தானடா
கலையுண்டு காணடா – கல்விச்
சாலைகள் பலவடா
முத்துண்டு தானடா – முல்லைச்
சிரிப்பெங்கும் கேளடா
வயலுண்டு பாரடா – வான்
மழை பெய்யும் நாடடா
களம் உண்டு தானடா – கயவர்
தலை உருளும் நாடடா
துணிவுண்டு தானடா – தடை
எதிர்த்து நிற்கும் நாடடா
செந்தமிழர் வீடடா – அவர்
செயல்திறனும் மேலடா
மானம் போற்றும் நாடடா – மறவர்
படையுண்டு தானடா
பார் புகழும் பாரடா – தமிழ்
ஈழம் எங்கள் நாடடா

கே. எஸ். சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(39ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் நலிவடைந்து பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு காலம் அறிந்து சேவை ஆற்ற சிறுவர் போஷாக்கு பராமரிப்பு பூங்கா உருவாகியுள்ளது மிகவும் பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

* பூங்கா பற்றி தூர நோக்கில் எப்படி சிந்திக்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?

இப்படிப்பட்ட பூங்கா நடத்துவது லேசான காரியமல்ல. தனிமனிதனாலோ அல்லது நிறுவனங்களாலோ கூட இயலாத காரியம் ஆனால் இந்தப்பணி தொடர வேண்டும். அதற்காக ஒரு நிதியம் உருவாக்கப்படவேண்டும்.

நம்பிக்கையூட்டக்கூடிய ஸ்தாபன ரீதியாக, பாதுகாப்பாக நிதியம் அமைதல் நன்று.

இந் நிதியத்திற்கு உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் எமது மக்களிடம் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளலாம். எமது மக்களுக்கு தார்மீக பொறுப்புண்டு.

பெற்றோர் பராமரிப்பு முறை உலக ரீதியாக வளர்ச்சி கண்டுள்ளது. இதுவும் இங்கு நடைமுறைக்கு வருவது மிகவும் நல்லது.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த வெள்ளையர் ஒருவர் கிளிநொச்சியில் வசிக்கும் ஒரு குழந்தைக்கு பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றேன்.

பூங்கா பற்றி எம்மக்களின் அபிப்பிராயம் என்ன?

போஷாக்கின்மை, கல்வி, நற்பழக்கம் எதுவுமில்லாமல் இருந்த தம் குழந்தைகள் இன்று இவை எல்லாம் நீங்கி பூரண ஆரோக்கியத்துடன், வளர்ச்சி கண்டுள்ளதை பெருமையோடு நினைக்கின்றனர்.

பூங்காவினால் பெற்றோர், குழந்தை உறவு முறை பாதிக்கப்படுமா??

இல்லை. பின்தங்கிய பகுதியில் இப்படி முறை வந்தது வரவேற்க வேண்டியது. நவீன உலகில் தவிர்க்க முடியாதது. பாதிப்பு எதுவும் வரும் என நினைக்கவில்லை.

* நீங்கள் ஒரு முற்போக்கு எழுத்தாளர், அறிவியல் ரீதியாக தொழில் நுட்ப ரீதியாக எமது இனம் சிந்திக்க வேண்டுமென பல மேடைகளில் பேசுகிறீர்கள் அந்த வகையில் இந்தச் சிறுவர்களின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டுமென விரும்புகின்றீர்கள்?

உலகச்சிறுவர் கல்வி முறையை நவீன வசதிகளுடன் புகுத்த வேண்டும்.

படிப்பு முறைக் கல்வி இல்லாமல் விளையாட்டு முறைக் கல்வி வேண்டும்.

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க தலைவர் ம. ஜெகநாதன் அவர்கள் பூங்கா பற்றி கூறும்பொழுது.

எம்தேசத்தில் பேரினவாத அரசின் கொடுமைகள் நாலா புறமும் கட்டவிழ்த்து விடப்பட்டன. போரினால் தொழிலின்றி அவஸ்தைப்பட்ட பெற்றோருக்கு ஆறுதலாக அமைந்து விட்டது

நாளைய சமூகத்தில் உயர்வு, தாழ்வு இல்லாத சமத்துவநிலை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

காலமறிந்து தேவையறிந்து இப்பணி தொடரப்பட்டுள்ளதால் பல தலைமுறைக்கு தொடர இருந்த ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

* எல்லாப் பூங்காக்களுக்கும் சென்று பார்த்திருப்பீர்கள் என்ன முன்னேற்றத்தை அவதானித்திருக்கிறீர்கள?

இப்பூங்கா எதிர்கால நோக்கில் நாளையமனிதனை கால தேசவர்த்த மானங்களுக்கு ஏற்ப உருவாக்கும் சீரிய பணியினைச் செய்து வருகிறது.

அதற்கேற்ப சிந்தனைகள் கொண்ட மலர்களாக மலர்வதையும் காண முடிகிறது.

மனிதனது பரிணாம வளர்ச்சியில் 1–5 வயதுக்குட்பட்ட காலம் மிக முக்கியமானது. எதிர்கால வாழ்வுக்கு தேவையான முழு அத்திவாரம் போடப்படுகிறது.

* பூங்காவின் திட்டங்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

இப் பூங்காவை மையமாகக் கொண்டு புதிய விழிப்புணர்வு கொண்ட மாதிரி நகரம் உருவாகுவதை மனக்கண்முன் காண்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையும் விளையாட்டும்

குழந்தை ஒரு அசையும் உயிரினம். இது சிந்திக்கக் கூடியது. உணரக் கூடியது. குழந்தையின் வளர்ச்சி அதனுடைய பரம்பரை அலகுகளோடு தொடர்புடையதாயினும், அவ் வளர்ச்சியினதும் தரம், அளவு, சிறப்பு என்பன அக்குழந்தைக்குக் கிடைக்கும் சுற்றாடல் அனுபவங்களையும் சந்தர்பங்களையும் பொருத்தே அமையும்.

பாடசாலைக்குச் செல்லமுன் குழந்தைகளின் பல்வேறுபட்ட அபிவிருத்திகளும் அவனை எதிர்கால உறுதிமிக்க பிரஜையாக்குவதை அவதானிக்கலாம்.

### உடல் அபிவிருத்தி

ஒரு குழந்தையின் எதிர்காலமே அவனது உடல் வளர்ச்சியில் தான் தங்யுள்ளது. வயதுக் கேற்ற உயரம், நிறை என்பன ஒவ்வொரு குழந்தையின் வயதிற்கேற்றவாறு இருத்தல் அவசியம். தமிழீழச் சிறார்களின் உடல் அபிவிருத்தி தொடர்பான தரவுகள் ஒழுங்காக நிர்ணயித்தல் இன்றியமையாதது.

### உடல் அசைவு அபிவிருத்தி

ஒரு புதிதாகப் பிறந்த குழந்தையின் அசைவு, அல்லது தொழிற்பாடு அக் குழந்தையின் உடலிலுள்ள தசைகளினிடையேயுள்ள தொடர்புகளையும், கட்டுப்பாடுகளையும். பொறுத்திருக்கும். குழந்தை வளர்ச்சியடையும்போது அவைகளின் செயற்பாடுகளிலும் முன்னேற்றமும், துரிதமும் காணப்படும்.

### அறிவுவளர்ச்சி



உடல் வளர்ச்சி குழந்தையில் ஏற்படும்போது அறிவு வளர்ச்சியும் ஏற்படுகிறது. ஆனால் இவ் அறிவு வளர்ச்சியின் அளவு, துரிதம் என்பன குழந்தைகளிடையே வேறுபாடாக இருப்பதை அவதானிக்கலாம். இவ்வளர்ச்கி வேறுபாடு அக் குழந்தை வளரும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வை பொறுத்தே அமைவதை அவதானிக்கலாம். எனவே அக் குழந்தை பெறும் சந்தர்ப்பங்கள், வளங்களைப், பொறுத்தே அறிவு வளர்ச்சி நடைபெறுகிறது. அக் குழந்தை பெறும் தகவல்கள். அத்தகவல்ளைப் பிரித்தறிந்து அக் குழந்தை எடுக்கும் இறுதி முடிவுகளே அறிவு வளர்ச்சியின் அளவு கோலாக இருப்பதினை அவதானிக்கலாம், இவை யாவற்றிற்கும் இக் குழந்தை ஆரோக்கியமாக இருத்தல் தேண்டும்.

### கற்றல்

குழந்தை புதிய விடயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறது எனவே புதிய தகவல்களைப் பெற்று முடிவுகளை எடுக்கும் ஆர்வம் கற்றலுக்கான நாட்டத்தை காட்டுகிறது. குழந்தைகள் எப்போதும் வினாக்களை கேட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கலாம். எனவே ஒரு குழந்தையின் சுற்றாடலில் காணப்படும் விடயங்கள் முடிவில்லா

த. அருணகிரிராஜா
உதவி கல்விப்பணிப்பாளர்,
உடற்கல்வி.

சவால்களை அக் குழந்தைக்கு ஏற்படுத்தும். ஒரு பிரச்சனை சந்தோசமாகவும் விருப்பமாகவும் தீர்க்கப்படுமானால் அக் குழந்தையும சந்தோசமாகவும் விருப்பமாகவும் கற்கும். இவ்வாறான சந்தர்பங்களைப் பெற்றுக்கொள்ள குழந்தைக்கு ஊக்குவித்தல் நடைபெறவேண்டும்.

குழந்தைகள் தமது சுற்றாடலிலுள்ள மிருகங்கள், பொருட்கள், மரங்கள், பூக்கள், அலைகள், காற்றுப்போல பாவனை செய்வதற்கு விரும்புவார்கள். இப் பாவனைகள் யாவும் கற்பனையில் குழந்தைகள் செய்பவை. வளர்ந்தவர்கள் போல் நடத்தையில் காணப்படுவார்கள். தாம் விரும்புபவைபோல் செயற்படுவார்கள். இவையாவும் ஒழுங்குபடுத்தப்பட்டு சரியான தீர்வை குழந்தை பெறுவதற்குத் தேவையான செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

குழந்தையின் வயது கூடக் கூடக் சமூகத்தில் அது தன்னை ஈடுபடுத்திக் கொள்கிற தன்மையை அவதானிக்கலாம். மற்றவர்களுடன் சேருகின்ற, ஒன்று கூடி செயற்படுகின்ற நண்பர்களைச் சேர்க்கின்ற, அவர்களோடு கூடிக் குதூகலிக்கின்ற பண்புகள் அதிகரிக்கும். பின்பு ஒரு குறிப்பிட்ட மாதிரிநடத்தையை ஏற்றுக்கொள்கின்ற, மற்றவர்களின் நடத்தைகளைத் தானும் அனுசரித்துச் செல்லும் மனப்பாங்குகள் வி.த்தியடைவதை அவதானிக்கலாம். தான் காணப்படுகின்ற கூட்டத்தினுள், தலைமைத்துவத்தைப் பெற்றக் கொள்கின்ற மாற்றங்கள் அச் சிறுவயதில் ஏற்படுவதை அவனது சமூக அபிவிருத்தி மாற்றங்கள் துல்லியமாக எடுத்துக் காட்டும். இம் மாற்றங்களின் அளவு, வேகம் ஒவ்வொரு குழந்தையிலும் தனித்துவமானது, வேறுபட்டது எல்லோருக்கும் பொதுவாகக் கருதமுடியாது. குழந்தை தனது அசைவுகளுக்கேற்றவாறு வளர்ச்சியடைதல் வேண்டும் எனவே அதனது தசைகள், எலும்புகள் உறுதியானவையாக உருத்தல் அவசியம், உடல் செயற்பாட்டிற்கு அவனது அமைப்பு முக்கியம். விளையாட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட இச் செயற்பாடு குழந்தையினது உடல் சேதன வளர்ச்சிகளுக்கு மிகவும் இன்றியமையாதது.

அது மாத்திரமல்லாது தனது வயதுக்கேற்ப ஒழுக்கம், ஒழுங்கு போன்றவற்றை விளையாட்டுத் துறையினூடாக அறிந்துகொள்ள—அனுபவிக்க வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. எனவே விளையாட்டுத்துறை குழந்தைக்கு ஒழுங்குபடுத்தப்பட்டதாக அவனது வளர்ச்சிக்கேற்றதாக அமைதல் மிகவும் இன்றியமையாதது.

விளையாட்டிற்கூடாக சந்தோஷம், சிறந்த விளையாட்டு மனப்பாங்கு, நல்ல உடல் அமைப்பு, சுகாதாரம் கொண்ட வாழ்க்கை, விரைவான மனத்திறன் தன்னம்பிக்கை, சுயகட்டுப்பாடு, குழுவில் அல்லது சமூகத்தில் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழும் மனப்பாங்கு என்பன சிறுவயதிலேயே அபிவிருத்தியடைய வாய்ப்புக்கள் உண்டாகும்.

குழந்தைகளை மைதானத்தினுள் அனுப்பி விளையாடும்படி விட்டால் தமக்குள்ளே தாமே அணிகளாகப் பிரிந்து தனது அணி எதிர் அணியென விளையாடுவதை அவதானிக்கலாம். விளையாட்டுக்களினது விதிகளை தமக்கேற்றவாறு தமது சுற்றாடலுக்கேற்றவாறு தாமே அமைத்துக் கொள்வர்.

குழு விளையாட்டுக்களில் குழந்தைகள் அதிகளவு விருப்பமும் மகிழ்ச்சியுமடைவதை அவதானிக்கலாம். கட்டுப்பாடில்லாத, விதிமுறைகள் தளர்த்தப்பட்ட அதிகளவு சந்தோஷமே நோக்கங்களைக் கொண்ட விளையாட்டுக்களாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

போதியளவு இடமுள்ளதாக, தேவையான விளையாட்டு உபகரணங்கள் கொண்டதாக விளையாட்டுக்களுக்கான வசதிகள் இருத்தல் அவசியம். ஒவ்வொரு விடயத்திலும் குழந்தையின் பாதுகாப்பு இன்றியமையாதது.

குழந்தைகள் நாள் முழுவதும் விளையாட விரும்பும். அவர்களுக்கு வாழ்க்கையே. அவர்களது நடத்தையே விளையாட்டுத்தான். விளையாட்டிற்குரியநேரத்தை ஒழுங்குபடுத்தி குழந்தைக்குப் போதிய ஓய்வு வசதி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்களில் பாவிக்கப்படும் திறன் அவனது உடல், உள வளர்ச்சிக்கேற்றதாக இருத்தல் அவசியம். எனவே அதற்கேற்றவாறு விளையாட்டுக்கள், விதிமுறைகள் அமைதல் வேண்டும். உடல் அவயவங்கள் ஈடுபடுகிற விளையாட்டுக்களில் தொடுகை மூலம், காணுவதன் (பார்வை) மூலம், உளப் பயிற்சிகள் தொடர்பானவை, கற்பனை செய்கின்றவை எனப் பல்வேறு அனுபவங்களைக் குழந்தை பெறும். தாள லயங்களைப் பாவித்து, பாவனை செய்கின்ற விளையாட்டுக்களைக் குழந்தைகள் மிகவும் விரும்புவர். மற்றவர்களுக்குத் தலைமை தாங்குகின்ற, கட்டளைகளுக்குப் பணிந்து குழுக்களாக எல்லோரும் சேர்ந்து செய்கின்ற விளையாட்டுக்கள் மிகவும் இன்றியமையாதவை. பாவனை செய்யும் செயற்பாடுகள், சூழலுக்கேற்றவாறு வாழும் முறைகள் விளையாட்டினூடாகக் குழந்தை போதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும்.

ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்திருத்தலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா — ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு — பின்பு
கனிவுகொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு — என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா.

மகாகவி பாரதியார்

எமது குழந்தைப் பூங்காக்களில் வளரும் குழந்தைகளது எதிர்காலம் அவர்கள் விளையாட்டினூடாகப் பெறும் அனுபவங்களிலேயே அதிகம் தங்கியுள்ளது. தமிழீழத்தின் சிறந்த நற்பிரஜையாக எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திக்க' 'சமாளிக்க' 'வெற்றிகொள்ள' இந்த அனுபவங்களே அத்திவாரங்கள்.

# காட்டில் நடந்த நாடகம்

காட்டில் மிருகங்கள் எல்லோரும் சேர்ந்து ஒருபோட்டி நாடகத்தைநடத்தினர். அந்த நாடகத்திற்கு பிரபலநடிகரான நரியார் தலைமை வகித்தார். நாடகப் போட்டியில் முதல் பரிசு பெறுபவர்களுக்கு வாழைக் குலை காத்திருந்தது. இந்த நாடகத்தைப் பார்ப்பதற்கு காட்டிலுள்ள மிருகங்கள் எல்லாம் வந்திருந்தன. வாழைக் குலையை தலைவரான நரிக்குப் பக்கத்தில் வைத்தனர். நாடகம் தொடங்கியது.

முதலில் அரிச்சந்திரா என்னும் நாடகத்தைப் போட்டார்கள். அந்த நாடகத்தில் சிங்கம் அரிச்சந்திரனாகவும்; பெண்சிங்கம் மனைவி சந்திரமதியாகவும், தேவதாசனாக மானும் நண்பர்களான அயலாத்துப் பிள்ளைகள் நரிக்கூட்டங்களும், சத்திய கீர்த்தியாக ஒட்டகமும் நடித்தன.

நாடகத்தில் அயலாத்துப் பிள்ளைகளான நரிக்கூட்டங்கள் தேவதாசனை தற்பை (புல்) அறுப்பதற்காகக் காட்டிற்கு கூட்டிச் சென்றார்கள். அந்த தேவதாசனுக்கு பாம்பு ஒன்று புற்றுக்குள் இருந்து கடித்தது, உடனே தேவதாசனாகிய மான், அண்ணா, அண்ணா என்று கத்தியது. நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மிருகங்கள் எல்லாம் காட்டுக்குள் ஓடிச் சென்று பார்த்தன. தலைவர் நரியார் இது தான் சமயம் என்று வாழைப்பழம் முழுவதையும் தின்று விட்டு ஓடிமறைந்தது. காட்டுக்குள் ஓடிச் சென்ற மிருகங்கள் திரும்பி வந்து பார்த்த போது தலைவர் நரியையும் வாழைக் குலையையும் காணவில்லை என அறிந்தன. நரியார் வாழைப்பழங்களை தின்றுவிட்டு ஓடிய விடயம் எல்லா மிருகங்களுக்கும் தெரிய வந்தது. அப்போது தான் ஒரு கள்வனை தலைவனாக வைத்திருந்ததை எண்ணி எல்லா மிருகங்களும் வெட்கமும் வேதனையும் அடைந்தன.

— பாபு —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவேட்டின் பார்வையில்

18 . 03 . 94

இன்று காலை 10.00 மணியளவில் இச்சிறுவர் நிலையத்தினை பார்வையிட்ட போது எதிர்கால சமுதாயத்தின் அத்திவாரம் பலமாக இருப்பதை எண்ணி உள்ளம் பூரிப்படைந்தேன். பூங்கா அமைப்பும் சாலச்சிறந்தது. இருந்தும் நிழல் தரக்கூடிய வகையில் மரங்கள் நடுவது சிறந்தது என நம்புகிறேன்.

மற்றைய சிறுவர்களுக்கும் (வெளியில் இந்நிலையம் தொடர்பான விளக்கம் இல்லாதவர்கள்) இவ்வசதிகளைச் செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

இப்படிக்கு
செஞ்சோலை

04 . 04 . 94

மனதை நெகிழ வைக்கும் இச்செயல்பாடு எமது மக்களுக்காக விடுதலைப் புலிகள் மாத்திரமே செய்ய முடியும் என்பது ஒரு எடுத்துக் காட்டு.

எம். எஸ். ஸ்ரன்ஸ்சியஸ்
மன்னார் மாவட்டம்.

03 . 07 . 94



பொம்மைவெளிப் பூங்காச் சிறுவர்களின் துரிதம், ஆர்வம் இவை கண்டு நான் வியப்படைகிறேன். அத்தோடு இவர்களின் பேச்சு பாடல் எல்லாமே என்னைக் கவர்ந்தன. அவர்களின் வாழ்வு வளம் பெற எங்களால் ஆன உதவிகள் செய்வோம். அவர்களுக்கு எங்களின் வாழ்த்துக்கள். ஆசிரியர் மாணாக்கருக்கும் நல்லாசிகள் கூறுகிறோம்.

திருமதி. செல்வராணி புவனேஸ்வரன்,
ஜேர்மனி.

09 . 07 . 94

இந்நிலையத்தை எமது பாடசாலை ஆசிரியர்கள் மூவருடன் இன்று பார்வையிட்டேன். பிள்ளைகளிடையே காணப்படும் ஊக்கம், கற்கும் முனைப்பு, நற்பழக்க வழக்கங்கள், தமிழிலும், தமிழ் மண்ணிலும் உள்ள பற்று இவை யாவையும் போற்றற்குரியவை. இவ்வரிய சேவையைச் செய்துவரும் இந்நிலைய நிர்வாகிகளுக்கு தமிழினமே கடப்பாடுடையது. இங்குள்ள சிறுவர்களின் வாழ்வு மலர நிலையம் வளர, இங்கு சேவையாற்றும் தொண்டர்கள் மனநிறைவுடன் தொண்டாற்ற ஆண்டவன் ஆசீர்வதிப்பானாக.

எமது நல்லாசிகள் என்றென்றும் இந்நிலையத்துக்குரித்தாகுக.

க. கோபாலகிருஷ்ணன்
அதிபர்,
நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன்
இழந்தோர் பாடசாலை கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 . 07 . 94

இந்நிலையத்தை இன்று நான் பார்வை யிட்டேன். இலண்டனில் 13 வருடமாக வாழ்ந்த நான் இன்று தான் மிகவும் சிறுவர் சிறுமிகளின் பாடல்களைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். நான் இலண்டன் சென்று இந்நிலையத்திற்கு என்னால் ஆன உதவிகளைச் செய்வேன். எனது மனம்கனிந்த நல்வாழ்த்துக்கள் இந்த நிலை யத்திற்கு என்றும் உரித்தாகட்டும்.

இங்ஙனம்
சி. சிவானந்தன்

12. 07. 94

இன்று நானும் எனது மனைவியும் இந் நிலையத்தைப்பார்வையிட்டோம். இங்குள்ள குழந்தைகளின் பழக்கவழக்கங்கள் மிகவும் உயர்ந்தவையாகக் காணப்படுகின்றன. ஒவ் வொரு குழந்தையின் முகத்திலும் மிகுந்த சந் தோசம் காணப்படுகின்றது. இங்குள்ள ஆசிரியர் களின் சேவையை நாங்கள் மிகவும் பாராட்டு கின்றோம். இந்நிலையம் என்றும் வளர்ந்து இன்னும் பல குழந்தைகளின் எதிர்காலத்தை வளப்படுத்த எங்கள் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
அன்புடன்,
திரு. திருமதி விநாயகமூர்த்தி
(பிரான்ஸ்)

21 . 07 . 94

இன்று அதிகாலை நான் இவ்விடத்தைப் பார்வையிட்டேன். மிகவும் அதிசயமாகவும், மகிழ்ச்சியாகவும் எனக்கு இருந்தது. காரணம் பிள்ளைகளின் ஊக்கமும் முன்னேற்றமும், இப் படி இன்னும் பல முன்னேற்றங்கள் வளரவேண் டும். அதற்கான உதவிகளைச் செய்ய வேண் டும், என்பது எனது ஆசை அதற்கான நட வடிக்கைகளை மேற்கொண்டு செய்வேன்.

நன்றி

சாந்தி
கொலண்ட்

சிறுவர் போசாக்குப் பூங்காவை ஒரு வருடத்திற்கு முன்பு பார்த்ததைவிட மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளதைப் பார்க்கும்போது மிக வும் மகிழ்ச்சியாகவுள்ளது. இங்கு குழந்தைகள் ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப் படுகின்றார்கள். குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் உற்சாகமானதும் உணர்வு பூர்வமான சேவையும் மிகவும் மகிழ்ச்சி தரு கின்றது. மேலும் சிறிய சிறிய குறைகளை நிவர்த்தி செய்து முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்ல வாழ்த்துகின்றேன்.

நன்றி

இப்படிக்கு
க. ப. தமிழ்ச்செல்வன்
07 . 10 . 1994

01 – 09 – 94

இன்று போசாக்கு பராமரிப்பு பூங்காவுக்கு சென்றிருந்தோம். அதன் வளர்ச்சி மிகவும் வளர்ந்திருந்தது. இன்றைய நிலைமையில் இப் பூங்கா மிகவும் முக்கியமானது. இதன் வளர்ச் சிக்கு என்றும் எங்களால் ஆன உதவிகளை வழங்குவோம்.

இப்படிக்கு,
ச. கோபால்
(இத்தாலி)

இப்பொழுது எமது தமிழீழத்தைப் பொறுத்த வரை போசாக்குக்கூடிய உணவுகளை குழந்தை கள் உண்பது மிகவும் அரிதாக இருப்பதை அநேகமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. அப்படி இருக்கும் போது இப்படியொரு பரா மரிப்பு இல்லத்தை உருவாக்கியவர்களுக்கு எனது நன்றிகள். இதை இன்னும் சிறிது விரிவுபடுத்தி மேலும் பல குழந்தைகளை ஏற்று பராமரிக்க வேண்டும் என்று கேட்டு பல இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றுவதையிட்டு நன்றியுடன் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
க. பாலச்சந்திரன்
(ஜேர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் போசாக்கு உணவுத்திட்ட
# நோக்கமும் குறிக்கோள்களும்

**நோக்கம்**

ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் மற்றும் சமூக பொருளாதார காரணிகளாலும் பாதிக்கப்பட்டு வரும் சிறுவர்களின் உடல் உள நலனை விருத்தி செய்து ஆரோக்கியமான அறிவுள்ள நற்பிரசைகளாக உருவாக்குவதற்கு அடித்தளமிடுவது.

**குறிக்கோள்கள்**

01. பாதிப்புற்றுள்ள சிறுவர் வாழும் பிரதேசங்களையும், குடும்பங்களையும் சிறுவர்களையும் இனம் காணல்.

02. இனங்காணப்பட்ட பிரதேசங்களின் முன்னுரிமை அடிப்படையில் போசாக்கு உணவுப் பூங்காக்களை அமைத்தலும் சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கி உடல் வளர்ச்சியுற உதவுதல்.

03. சிறுவரின் உடல் நலத்தைப் பாதிக்கும் நோய்களிலிருந்து பாதுகாத்தலும், நோய்வாய்ப் பட்டவர்களுக்குரிய சிகிச்சைகள் மூலம் உடல் நலம் பேணுதலும்.

04. உடல் நலத்தைப் போலவே உள நலமும் முக்கியமாதலால் சிறுவரின் உள நலனைப் பேணுவதற்கும் உடல் வளர்ச்சிக்கும் உதவுதல்.

05. போசாக்குப் பூங்காவுக்கு வரும் சிறுவர்களின் கல்வி விருத்திக்கான முன்பள்ளிப் பாடசாலையை அமைத்துப் பொருத்தமான கல்வி ஏற்பாடு செய்தல்.

06. சிறுவர் பள்ளிக்குச் செல்லும் காலம் வரையிலான முன் பள்ளிக்கல்வியைத் தொடர்ந்து கற்க ஏற்பாடுகளைச் செய்தல்.

07. சிறுவர் பூங்காவுக்கான காய்கறி, பால், தானியங்களையும் பெறுவதற்கேற்ற சுயதேவை நிறைவுப் பண்ணைகளை நடாத்துதல் தமது பிள்ளைகளின் உடல், உள நலத்தை தாமே பேணிக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்குமான கல்வியறிவைப் பெற்றோரிடம் விருத்தி செய்தல்.

08. போசாக்குஉணவு நிலையங்களில் கடமையாற்றும் பொறுப்பாளர், பராமரிப்பாளர், ஆசிரியர், பண்ணைஉதவியாளர், சமையலாளர் ஏனையோரின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையிலான சேவைக் காலக் கல்வியளித்தல்.

09. பாதிப்புற்றுள்ள சமூக அங்கத்தவர்களுக்காக உழைக்கும், உதவும் சமூக உணர்வை யாவரிடமும் வளர்த்தெடுத்தல்.

10. சிறுவர்களை நமது நாட்டின் தேசிய இறைமைக்கும் விருத்திக்கும் "பாடுபடக்கூடிய ஆரோக்கியமான அறிவிடல் மிக்க, இனப்பற்றுள்ள, கூட்டு உணர்வுடையோராக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டறிக்கை

## அறிக்கையின் அறிமுகம்

உலகிலே முப்பது சதவீதமானவர்கள் போசாக்கற்றவர்களாகவும், கல்வியறிவு அற்றவர்களாகவும் இருக்கின்றனர். அவற்றுள் விடுதலைக்காக போராடிய நாடுகளிலும், போராடுகின்ற நாடுகளிலும், வறிய நாடுகளிலும் தான் அதிகமாக காணப்படுகின்றனர்.

இவ்வகையான தாக்கத்தில் இருந்து மீள பல நாடுகளில் சிறுவர்களுக்கான போசாக்கு ஊட்டல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வந்ததுடன் தமக்கென வர்த்தக குறியை ( Trademark ) ஏற்படுத்தும் நோக்கிலும். மேலும் விளம்பர நோக்கிலும் பல நிறுவனங்கள் போசாக்கு ஊட்டல் திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகின்றன.

விடுதலைக்காக போராடிவருகின்ற தமிழீழ தேசமானது இன்று சிங்கள இனவாத அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட பல்வேறு முனைகளிலும் முயன்று போராடி வரும் இவ்வேளையில், எம் நாட்டின் சிற்பிகளான இன்றைய சிறார்கள் போராட்டத்தின் விளைவாக போசாக்கு அற்றவர்களாக இருக்கக்கூடாது என்ற நோக்கில், அமைக்கப்பட்டதுவே சிறுவர் போசாக்கு பூங்காக்கள்.

உலக விடுதலை போராட்ட வரலாற்றில் போராட்டம்நடக்கும் வேளையில் இவ்வகையான செயற்பாட்டில் முனைந்தது உலகிலே "தமிழீழ தேசமே" இப்பூங்காக்களில் முன்னோடிப் பூங்காவான பொம்மை வெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் இரண்டாம் ஆண்டு நிறைவின் அறிக்கையின் அறிமுகமே இதுவாகும்.

### முகவுரை

தமிழீழ தேசமானது தன் விடிவிற்காக பல்வேறு முனைகளிலும் போராடி வருகின்றது. எதிரியானவன் முன்னேறும் வழிகள் ஒவ்வொன்றையும் அடைக்கமுயலுகிறான்.

இந்நாட்டின் எதிர்கால சிற்பிகளான இன்றைய சிறார்களை உடல், உள ரீதியாக தாக்கப்பட்டு மடிவதையோ அன்றி வாழ்வழி தெரியாதவர்களாகவோ ஆக்குவதே அவற்றில் ஒன்று ஆகும் இந்நோக்கத்தை முறியடிப்பதற்கும். எம் நாட்டின் சிறார்கள் போசாக்குள்ளவர்களாகவும், சிறந்த கல்வியறிவு, உடல் உள ரீதியான முதிர்வு உடையவர்களாக மாற்றியமைக்கும் நோக்குடனும் தமிழீழ தேசிய தலைவரின் எண்ணத்தை நிறைவேற்றும் முகமாக தொடங்கப்பட்டதே பொம்மைவெளி சிறுவர் பூங்காவாகும்.

பொம்மை வெளியானது பின்தள்ளப்பட்ட கிராமமாகவும், தற்போது பல்வேறு இடங்களிலும் இருந்து போரின் விளைவாக தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறி, இடம் பெயர்ந்த மக்கள் பெரும்பாலும் குடிஅமர்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தில் அன்றாட கூலித் தொழில் செய்பவர்களே அதிகம் அதுமட்டுமல்லாது குடும்ப தலைவனும் தலைவியும் சேர்ந்து தொழில் செய்தால் மட்டுமே குடும்பபாரத்தை சுமக்கும் நிலை, இவ்விடத்துச் சிறுவர்களே. வீட்டில் இருக்கும் குழந்தைகளை பராமப்பதால் பாடசாலை செல்வதில்லை. இதனால் படிப்பறிவற்றவர்களாகவே இருந்தனர்.

தமிழீழ தேசத்தில் இவ்வகையான கிராமங்கள் பல உண்டு. முன்னேற்ற வேண்டுமென்னும் முயற்சியில் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் கிராமம் இதுவாகும். இதன் வளர்ச்சியின் மையக் கருவானதுவே சிறுவர் போசாக்கு பூங்கா. இப்பூங்காவின் இரண்டாம் ஆண்டு நிறைவின் அறிக்கையின் வெளிப்பாடு இக்கிராமத்தின் வளர்ச்சிப் பாதையேயாகும்.

### பூங்காவை சுற்றியுள்ள கிராமமும் மக்கள் தொகையும்

| | | குடும்பங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | 1993 | 1994 |
| (1) | பொம்மை வெளி | 35 | 64 |
| (2) | புதிய குடியிருப்பு | 50 | 48 |
| (3) | சூரிய வெளி | 109 | 202 |
| (4) | வசந்தபுரம் | 15 | 32 |
| (5) | சாப் நகர் | 20 | 21 |
| (6) | செழியன் வீதி | 41 | 42 |
| (7) | அராலி வீதி | 30 | 42 |

### சிறுவர்களின் உடல் உளவளர்ச்சியில் 2 ஆண்டுகள்

சிறார்களின் உளவளர்ச்சியை மையமாகக் கொண்டு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சதுரங்கம், கரம் தொலைக்காட்சி விளையாட்டுகள், போன்றவை குறிப்பிடக் கூடியவையாகும். ஒவ்வொரு சிறுவனும். தன் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு தன் ஆக்குத்திறனை வளர்ப்பதற்கும் ஏற்ற வகையில் உபகரணங்கள் நிறைந்து இருக்கின்றன. நிறைவான மனிதனாக வளர்வதற்கேற்றவகையாக அவைஉதவுகின்றன. இரண்டு ஆண்டுகளின் வளர்ச்சிப் போக்கில், ஒவ்வொரு சிறுவனும் உளரீதியாக வளர்வதற்கான சாதனங்களை கையாளுவதில் திறமை பெற்றிருக்கிறான்.

உள விளையாட்டிற்கான சாதனங்கள் பொருந்தியபூங்காவும் இரண்டாம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

வர்ணங்களாலான சித்திரங்களும் சுவர்களில் வரையப்பட்டுள்ளது.

மேலும் நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. இது ''கண்'' வடிவில் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆண்டு 1 படிப்பதற்கேற்ப பூங்காவின் வயது வந்த சிறார்கள் தங்கள் பள்ளிப் படிப்பிற்காக காலை நேரம் பாடசாலை சென்று திரும்பியபின்னர் மீண்டும் மாலையில் உள ரீதியாக பயிற்சிகளும் கலைப் பயிற்சிகளும் பெறும் வகையில் மீண்டும் இங்கு வருகின்றனர். மேலும் இக்கிராமத்தவரின் ஆக்கங்களின் ஒரு பகுதி இரண்டாம் ஆண்டு விழாவில் மேடையேறவுள்ளது. இங்கு மக்களின் கலை ஆர்வத்தை வளர்ப்பதற்கு கலை பண்பாட்டுக் கழகம் தனது பணியை நடைமுறைப் படுத்தி வருகிறது. மேலும் மகிழ்வூட்டக் கூடிய வகையிலும், தம் சூழலிலுள்ள பறவைகள், மீன்கள் மிருகங்களை நேரில் கண்டு அவர்களின் வாழும் பாதையினையும் அறிவதற் கேற்ற வகையில் முயல் வெள்ளெலி, குரங்கு, மயில், வான்கோழி, பன்ரம்கோழி மீன் வளர்கப்படுகின்றது.

### பூங்காவிற்கு பின்னூட்டும் அமைப்புக்கள்

1. யாழ் மாவட்ட பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள்.
2. வர்த்தகர்கள்
3. ஆங்கில மருத்துவ சங்கம்
4. இந்து குருமார் ஒன்றியம்
5. சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
6. யாழ் மாவட்ட வெதுப்பக சங்கம்

### பூங்கா சிறார்கள்

ஆரம்பத்தில் வசதிகள் குறைவாக காணப்பட்டதினால் பெருமளவில் சேர்த்துக் கொள்ளப் படவில்லை இரண்டாம் ஆண்டு ஆரம்பத்தில் பூங்கா விரிவாக்கப்பட்டு மேலும் இரண்டு வீடுகள், இட அமைப்பு, குசினி வசதிகள் அமைக்கப்பட்டதன் பின்னர் மேலும் சிறார்கள் இணைந்துள்ளன.

93ம் ஆண்டுசிறார்களின் எண்ணிக்கை 99.

94ம் ஆண்டு

மொத்த சிறார்களின் எண்ணிக்கை 175.

## இணைந்துள்ள குடும்பங்களின் மாத வருமானம்

மொத்த குடும்பங்கள் 175

1. 1000/– கீழ் வருமானம் பெறுவோர் 48%
2. 1000/– 1500/– வருமானம் பெறுவோர் 23./.
3. 1500/– – 2000/– ,, 16./.
4. 2000/– மேல் ,, 13./.

## சிறுவர் பூங்காவை மையமாகக் கொண்ட மேம்பாடு

சிறுவர்களை உள உடல் ரீதியாக வளர்ச்சியினை ஏற்படுத்தினால், அச்சிறார்களை சூழவுள்ள, அவர்களின் பெற்றோர், சகோதரர்கள், சமூகம், சமூக சூழல் அத்தனையும் மேம்படுத்த வேண்டியநிலை ஏற்படும். அதனூடாக சமூக முன்னேற்றமும், தேசியரீதியிலான சமூகமாற்றமும் ஏற்படுகிறது. 2 வயது முதல் 5 வயது வரையிலான சிறுவர்கள் வாரத்தில் 6 நாட்கள், காலை 7மணி முதல் மாலை 5மணி வரையிலான நேரத்தைத் தவிர்ந்த மற்றைய நேரங்களில் அச்சிறார்கள் தம் பெற்றோர், சகோதரர்கள், அயலவர்களுடனேயே பழகுகின்றது. பூங்காவில் வளரும் பிள்ளைகளுக்கேற்பவும் அதன் அறிவு வளர்ச்சிக்கேற்பவும், கிராமத்தை முன்னேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பெற்றோர், சமூகம், சூழல் அபிவிருத்தி பெறுவதற்காக பூங்காவை மையமாகக் கொண்டு பின்வரும் செய்திட்டம் முன்வைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.

1. வாழ்க்கைத் திறன்:– (i) கல்விவளர்ச்சிக் கழகம் (ii) பணியாளருக்கான புத்தாக்கப் பயிற்சி
2. கைத்தொழில் பயிற்சி
3. கலைக் கூடம்
4. நூலகம்
5. வடிகால் அமைப்பு
6. சுகாதார மருத்துவ சேவை
7. விளையாட்டுப் பூங்கா மைதானம்
8. சூழல் பாதுகாப்பு திட்டங்கள்
9. உற்பத்தி வியாபார நிறுவனங்கள்
10. சேமிப்பு

## வாழ்க்கைத் திறன்

இக் கிராமத்தின் கல்வியறிவு, அறிவியல் செய்திகள், அன்றாட செய்திகள் தம் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக வழி தெரியாதோரே அநேகம். இவர்களின் வாழ்வை அறிவியல் தொழில் நுட்பத்தின் ஊடாக வளர்ப்பதற்கான ஓர் நிலையமே வாழ்க்கைத் திறன் நிலையம் அத்துடன் கிராமிய முகாமைத்துவப் பயிற்சியும் அமைத்தல். இந்நிலையத்தில் கல்வியறிவூட்டல், அறிவியல் ரீதியான செய்திகளை அறியத்தரல். அன்றாட நிகழ்வுச் செய்திகளின் தொகுப்பாகவும், சமூக உணர்வினை ஏற்படுத்தல், குடும்ப நலனைப் பேணுவதற்கான பயிற்சியினை அளித்தல், குடும்ப நலன்களுக்கான ஆலோசனைகள் வழங்கல் போன்றவையாக இருத்தல்.

இவ்வகையான பயிற்சியின் மூலம் பூங்காவின் சிறார்களின் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அப்பெற்றோர்கள் தம்மை ஆக்கிக் கொள்ள உதவும். இந்நிலையமானது. 25–05–94ல் ஆரம்பிக்கப்பட்டது. வாரத்தில் 4நாட்கள் மாலை 6 மணி – 8 மணி வரையான நேரத்தில் நடைபெறுகின்றது. ஆரம்பத்தில் 11 ஆண்களும் 8 பெண்களும இணைந்து கொண்டனர். இணைந்த போது கேள்விக் குறியுடன் காணப்பட்டவர்களாயினும் ஆண்டு நிறைவின் போது தமது தேவைக்கான அறிவினை மேம்படுத்தியுள்ளனர்.

மேலும் ஆசிரியையின் குறிப்பிலிருந்தும் கிராமத்தவர்களின் அறிவு வளர்ச்சியின் ஆர்வத்தை அறியக் கூடியதாக இருப்பதால் தற்போது கூடுதலானோர் பங்கேற்று வருகின்றனர்.

## கல்வி வளர்ச்சிக் கழகம்

இங்கு பாடசாலைசெல்லும் இக் கிராமத்துப் பிள்ளைகள் அங்கு முழுமையான கல்வியினைபெற முடியாதவர்களும், மாலை நேரங்களில், பணத்தை கொடுத்துக் கல்வி கற்க முடியாதவர்களுமே பலர். இவர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதற்கான மாலை நேர வகுப்புக்களும், இரவில்



தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையில் புதுயுகப் பூக்கள் புன்னகைபுரிய
பூபாள ராகம் புவியிசை பரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில்கல்விகற்க வசதியற்றவர்களும், இரவில் இருந்துகல்வி கற்பதற்கேற்ப வசதிகள் செய்யப் பட்டுள்ளது.

இக் கழகத்தில் 2ம் ஆண்டு முதல் 6ம் ஆண்டு வரையிலான மாணவர்களே பெருமளவில் இணைந்துள்ளார்கள். இவர்களுக்கு தேசிய மட்டத்திலான அறிவியல் கருத்துரைகளும் வழங்கப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் பூரணமான அறிவியல் இளைஞர் கூட்டத்தை இக் கழகம் அமைத்துள்ளது.

காலப் போக்கில் சமூக உணர்விற்கேற்பவும் தேசியப் பற்றுள்ள சமுதாயத்தை மேம்படுத்துவதற்கு இக் கழகமானது உதவுகின்றது.

எதிர்காலத்தில் இக் கிராமத்திலே ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையான வகுப்புக்கள் அடங்கிய ஓர்ஆரம்பப்பள்ளியினை அமைக்கவுள்ளோம். இச் சிறார்கள் இங்கேயே கல்வி கற்கக் கூடிய விதத்தில் அமைவதுடன் வளர்ச்சிக்கான பாதையினையும் நாம் அமைத்துக் கொடுக்க வழிவகுத்துள்ளோம்.

## பணியாளர்களுக்கான புத்தூக்கி பயிற்சி

இப் பயிற்சியானது மாவட்ட ரீதியாக சகல பூங்காக்களின் பணியாளர் ஒன்றிணைந்து மாதம் ஒருமுறை ஒவ்வொரு பூங்காவிலும், செயல் முறை மற்றும் விளக்க பயிற்சிகள் கொடுக்கப்பட்டு அவர்களின் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டது. நவீன முறையிலானதும் சர்வதேச ரீதியான அறிவியல் வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் சிறார்களைப் பராமரித்தல், உடல் பயிற்றுதல், உளப் பயிற்சி என்பனவும் போதிக்கப்பட்டது.

இப் பயிற்சிகள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகிய திரு ச. சுப்பிரமணியம், திரு இ. சிவானந்தன் ஆகியோராலும் மற்றும் திரு ச. அருணகிரிராசா திருமதி பொன்மலர் ஆகியோராலும் வழங்கப்பட்டது.

94ம் ஆண்டில் நடந்த பணியாளருக்கான பரீட்சையில் சித்தியடைந்தோரில் மாவட்ட ரீதியாக 1ம் இடத்தை இப் பூங்காவின் நிர்வாகி, ஆசிரியர் பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இப் பூங்காவில் 6ம், 9 11ம் மாதங்களின் மாதாந்த புத்தூக்கி பயிற்சிகள் நடைபெற்றது குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

## சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| அட்டவணை | I | 28 |
| ,, | II | 20 |
| ,, | III | 30 |
| ,, | IV | 30 |
| ,, | V | 30 |
| ,, | VI | 30 |
| மொத்தம் | | 168 |

### (1) கைத்தொழில் பயிற்சி

கயிறு திரிக்கும் பயிற்சி தற்போது மூன்று மாதங்களாக நடைபெற்று வருகின்றது. இதில் 20க்கு மேற்பட்டோர் பயிற்சி எடுக்கின்றனர். இப் பயிற்சியாளர்கள் எதிர் காலத்தில் இங்கு நிறுவப்பட்டுள்ள "கேடில்ஸ் தும்புத் தொழிலகத்தில்" இணைந்து செயலாற்றுவதுடன், கிராமத்தில் கைத்தொழில் ஆக்கத்திற்கு வழிஅமைத்தவர்களாகவும் திகழ்வர். தங்களினதும், கிராமத்தினதும் வளர்ச்சிக்காக இவர்கள் உழைப்பார்கள். நிறைவான வாழ்வினை அமைக்க இது உதவுகின்றது.

### (2) தையல் பயிற்சி

இக் கிராமத்தில் இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தையல் பயிற்சியினை அளிப்பதன் மூலமும், யாழ் நகரை அண்டிய கிராமமாக இருப்பதாலும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதுடன், இக் கிராமத்திலேயே தையல் நிலையங்கள் அமைத்து உள்ளூரில் வேலை வாய்ப்பைப் பெறக்கூடிய இளைஞர் குழாம் உருவாகுவதுடன் தேசியநலனுடன் இணைந்தவர்களாகவும் இருக்க வழிஏற்படும்.

### (3) நூலகம்

சிறியோர் முதல் வயது வந்தோர் வரையிலான அனைவரும் தத்தம் அறிவுக்கு அனைத்து திறனுடையவர்களாக, மாற்றுவதற்கு அறிவியல், சமூகவியல், இலக்கியம் முதலான நூல்களை படிப்பதற்கேற்றவாறு நூலகம் ஒன்று மாநகர சபையின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது

### (4) சுகாதார சேவை

இது இரண்டு விதமாக கணிக்கப்படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நோய் வராமல் தடுப்பதற்கான சேவைகள்
2. நோய்க்கான மருத்துவ சேவைகள்

1. நோய் வராமல் தடுப்பதற்கான சேவையில் அன்றாடம் சூழலை பாதுகாத்தல், மலசலகூட வசதி, நன்னீர் வசதிகள், தாய் சேய் மருத்துவ சேவைகள், சுகாதாரச் சீர்கேட்டினை நிவர்த்தி செய்யும் பிரச்சாரங்கள் போன்றவை இடம் பெறும்.
2. மருத்துவ கூடம் அமைத்தல்.
கிராம மக்களிற்கான மருத்துவ சுகாதார சிகிச்சைகளை, வழங்கலும் சேவை அளித்தலும்

## (5) விளையாட்டுப் பூங்கா விஸ்தரிப்பு

பூங்காவின் சிறார்கள் மட்டுமல்லாது கிராமத்தின் சிறுவர்கள், இளைஞர்கள் அனைவரும் உடல் வளர்ச்சிக்கேற்றவாறு விளையாட்டுத்திடல் மற்றும் உள்ளக விளையாட்டுகள் போன்றவற்றை விரிவாக்கம் செய்வதுடன் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுக்களையும் அறிமுகப்படுத்தி சமூக கூட்டுணர்வினையும் வளம்படுத்தல்

## (6) உற்பத்தி, வியாபார நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளது

(1) வெதுப்பகம்
(2) உதவும் கரங்கள்
(3) தையல் அகம்
(4) கேடில்ஸ் தும்புத் தொழிலகம்
(5) பண்ணைகள்

### வெதுப்பகம்

கிராமத்து மக்களுக்கு சுத்தமான வெதுப்பி கிடைக்கக் கூடிய வகையில், கிராமத்திலே ஓர் வெதுப்பகம் திறப்பதற்கான சகல ஏற்பாடுகளும் இந்த ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ் வெதுப்பகமானது பூங்காவின் சிறார்களுக்கு தேவையான சுத்தமான பிஸ்கட்வகைகளும தயாரிக்க எண்ணியுள்ளது. யாழ் நகரை அண்டிய கிராமமாதலால் நகரத்திலும் பாண், பணிஸ் போன்றவை உற்பத்தி செய்து விற்பனை செய்வதால் வருமானத்தை ஈட்டி பூங்காவின் தேவைக்கும், வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

### உதவும் கரங்கள்

இந் நிலையமானது இக்கிராமங்களின், அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்கின்றது உழைப்பை உறிஞ்சும் வகையில் அத்தியாவசிய பொருட்களை கூடிய விலைக்கு வாங்கிய மக்கள், இன்று, சேமிக்கக் கூடிய வகையில் உழைப்பு மிச்சப்படுத்தப் படுவதுடன்; தரமான பொருட்களாக இருப்பது கிராமத்து மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுகின்றது. மேலும் இக் கிராமத்தில் வசிப்போரில் ஒரு சிலர் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்.

### தையல் அகம்

பயிற்சி பெற்ற பெண்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் காலப்போக்கில் கிராமத்தின் தேவைக்கும் அண்டியுள்ள நகரத்தின் தேவைக்கேற்ப அடைகளை தைத்து வழங்கமுடியும். அத்துடன் கிராமத்தின் இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கலாம்.

### கேடில்ஸ் தும்புத்தொழிலகம் – கிளை

வாழ்க்கைத்திறன் நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களும், மற்றும் தொழில் செய்யக் கூடியவர்கள், இணைந்து இத் தொழிற்சாலையினை நடாத்துகின்றனர். இதனால் தொழில் வாய்ப்பினை இக் கிராமம் பெற்றுள்ளது. உற்பத்திகளை சந்தைப்படுத்த கேடில்ஸ் தும்புத் தொழிற்சாலை பொறுப்பேற்றுள்ளது.

### பண்ணைகள்

தற்போது பூங்கா சிறார்களுக்கான பால், முட்டை கீரை வகைகளை உற்பத்தி செய்து வருகின்றது. இப்பண்ணையிலே 20 பரப்பளவு காணியில் பாலிற்காக 5 மாடுகளும் முட்டைக்காக 100 கோழிகளும் வளர்க்கப்படுகின்றது. மேலும் கீரை, பழ வகை தேவைக்காக வாழை பப்பாசி, அகத்தி போன்ற நிரந்தர பயிர்களும் கீரை வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது இங்கு தனியாக நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்கி விரிவாக்கம் செய்யவுள்ளோம்.

பூங்காவின் தேவையை மட்டுமல்லாது கிராமத்தின் தேவைகளின் ஒரு பகுதியை பூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | உற்பத்திசெய்யும் சாதனம் | தற்போதைய நிலை எண்ணிக்கை | உற்பத்தியளவு நாளொன்றுக்கு | எதிர்கால எண்ணிக்கை | விரிவாக்கலில் உற்பத்தி நாளொன்றிற்கு |
|---|---|---|---|---|---|
| 01. | பசு (பால்) | 05 | 14 போ | 16 | 70 லீற். |
| 02. | கோழி (முட்டை) | 100 | 20 முட் | 500 | 300 |
| 03. | இறைச்சிக்கோழி | — | — | 100 | மாதம் 200 கிலோ |
| 04. | மரக்கறி | 03 பரப்பு | 05 கி. | 04 பரப்பு | 10 கிலோ |
| 05. | பழமரம் | 02 பரப்பு | — | 04 பரப்பு | — |
| 06. | கீரை வகை | 01 பரப்பு | — | 02 பரப்பு | — |

செய்யக்கூடிய வகையில் பண்ணையை விரிவாக்க வுள்ளோம். அத்தோடு பூங்காவானது தனது சொந்தக்காலில் நிற்பதற்கான ஒரு வருமானத்தைத் தேடும் முயற்சியில் இப்பண்ணையூடாக, வெளியூர் முட்டை, பால், மரக்கறி பழவகைகளைப் பெற்று கிராமத்து மக்களுக்கு குறைந்த இலாபத்துடன் விநியோகம் செய்யவுள்ளோம்.

1. வெதுப்பகம்
2. உதவுங்கரங்கள்
3. கேடில்ஸ் தும்புத் தொழிற்சாலை
4. தையல் அகம்
5. பண்ணைகள்

## சேமிப்பு கிராமிய நிதியம்

கிராமத்து மக்கள் தம் உழைப்பின் ஒரு பகுதியை தமது எதிர் காலத்திற்கும் சிறார்களின் வளர்ச்சிக்காகவும் செலவிட வேண்டிய நிலையில் உள்ளனர். எதிர் காலத்திற்கான சேமிப்பு பழக்கமற்ற நிலையிலிருந்த இக் கிராமத்தவர்கள் இன்று உழைப்பின் ஒரு பகுதியை சேமிக்கின்றனர். இச் சேமிப்பினை கூட்டாக சேமிப்பு பயன் பெறக்கூடிய வகையில் கிராமிய நிதியம் ஒன்றை நிறுவ இந்த ஆண்டு திட்டமிட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந் நிதியம் கிராம மக்களுக்கு அவசர தேவைக்காக கடன் பெறவும் உதவுகின்றது. மேலும் சிறார்களின் எதிர் கால கல்வி, மற்றைய முன்னேற்றங்களுக்கு வட்டியுடன் கூடிய முதல் பெருக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் உதவுகின்றது.

## வடிகால் அமைப்பு

கிராமத்தின் எதிர் கால வடிகால் அமைப்பிற்கு ஏற்ப மழை நீர் மற்றும் கழிவு நீரை வெளியேற்றுவதற்கான கிராமிய மேம்பாட்டு நகர அபிவிருத்தி ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

## சூழல் பாதுகாப்பு

கிராமமக்கள் சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கு மற்றும் சூழலின் மாசினை பாதுகாப்பதற்கும் மரங்கள் நாட்டப்பட்டு அதற்கான பாதுகாப்புக்கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மரங்களின் வளர்ச்சியினை பூங்காவின் சிறார்களின் பெயரில் அச்சிறார்களின் பெற்றோரே பராமரிக்கின்றனர். இதனால் தம்பிள்ளையைப் போல் பாசத்துடன் தம் பிள்ளையின் பெயரால் உள்ள மரங்களையும் வளர்க்கின்றனர். மேலும், இம் மரநடுகையானது வெளி கொண்ட பிரதேசங்களுக்கும் விரிவாக்க உள்ளோம். இத்திட்டத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பகுதியினர் செயற்படுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கலைக்கூடம்

கிராமத்தில் கலை ஆற்றல் உள்ள, ஆர்வமான சிறார்கள், இளைஞர்கள், பெரியோர்கள் அனைவரினது திறனை வெளிப்படுத்துவதற்கேற்ற வகையில் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றது, தேசிய ரீதியான ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதற்கேற்ப விரிவாக்கம் செய்யவுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வட்டப் பொறுப்பாளரும் பூங்காப் பணியாளர்களும்**

*(இ-வ) திருமதி. சி. புஸ்பலதா (ஆசிரியை), திரு.எ.பிரான்சிஸ் (நிர்வாகி), திரு.பொ. செந்தமிழன் (யாழ் வட்டபொறுப்பாளர்), திரு. செ. அமிர்தநாதர் (கணக்காளர்), திருமதி.ப. மகேந்திரா (உதவிநிர்வாகி), திருமதி.சிறீ. வசந்தமலர் (ஆசிரியை).*

*(பி-வ)செல்வி.சி.கார்த்தியாயினி(ஆசிரியை), செல்வி.கி.சகாயசிலி'ஆசிரியை), திருமதி.கு.ராசம்மா (சமையலாளர்), திருமதி கி. யோகலட்சுமி (பிரதான சமையலாளர்) செல்வன் நி. கனகராசா (பண்ணை உதவியாளர்), செல்வன். கருணாகரன் (காவலாளி), திரு.மு. தவேந்திரன் (பண்ணையாளர்.)*

---

(நேர்காணல் தொடர்)

கல்வியியலாளரும் யாழ் இந்துக் கல்லூரி அதிபருமான அ. பஞ்சலிங்கம் அவர்களை சந்தித்து நேர்கண்டபோது அவர் கூறுகையில் சிறுவர் பராமரிப்பு போசாக்குப் பூங்காவினை ஒரு முறை பார்த்திட வேண்டுமென்ற எனது ஓராண்டுக்கு மேற்பட்ட அவா அண்மையில் தான் நிறைவேறியது. அதனைப் பார்த்ததும் எனது கற்பனையில் இருந்தவை அத்தனையும் தவிடுபொடியாகி என்னைப் பிரமிக்க வைத்துவிட்டது. இப்படியும் நடக்குமா? நடத்துவார்களா? என்று தான் கேட்டிருப்பேன். அப்பூங்காவினை நேரில் பார்த்திராதுவிட்டால்.

நாம் கல்வித்துறையில் கற்றவற்றை நடைமுறைப்படுத்துகின்றார்கள்.

ஐந்து வயதுக்குட்பட்ட காலத்தினை பிள்ளையின் முக்கிய காலமென கூறுவர். அந்தக் காலத்திலே பிள்ளைக்கு வழங்கவேண்டிய போசாக்கு நிறைந்த உணவு, உளவளர்ச்சிக்குத் தேவையான பயிற்சிகள் அத்தனையும் வழங்கப்பட்டு பூரணத்துவமான வருங்கால சந்ததி உருவாக்கப்படுகின்றது.

இப் பூங்கா பாராட்டிற்குரியது, சேவை தொடர வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழலைகளின் உறுதிமொழி
பூங்காக்களிற்கிடையிலான விளையாட்டு விழா 1994



தலைவரின் பார்வையில் மிளிரும் இம் மழலைகள்
நாளைய தமிழீழத்தின் தலைமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org